6	14	தேவனுடைய ஆலயத்தின் வேலை தடைபட்ட நாட்களில் யூதாவிலும் எருசலேமிலுமிருந்த யூதருக்கு இஸ்ரவேல் தேவனின் நாமத்தில் தீர்க்கதரிசனம் சொன்ன இரு தீர்க்கதரிசிகள் யாவர்?	2012, 2015, 2011	3
1	1	தேவனுடைய ஆலயம் கட்டப்பட கர்த்தர் எந்த ராஜாவின் ஆவியை ஏவினார்? அதைக் குறித்து யூதாவிலும் எருசலேமிலுமிருந்த யூதருக்கு இஸ்ரவேல் தேவனின் நாமத்தில் தீர்க்கதரிசனம் சொன்னவர்கள் யார்? (அ) எருசலேமில் தேவனுடைய ஆலயம் கட்டப்படுவதைக் குறித்து தீர்க்கதரிசனம் சொன்னது யார்? இவ்விதத்தில் கர்த்தர் எந்த ராஜாவின் ஆவியை ஏவினார்?	2013, 2011, 2016	3.
7	6	கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரக-னாயிருந்தது யார்? அவன் கேட்டவைகளையெல்லாம் ராஜா அவனுக்குக் கொடுத்ததற்கான காரணம் யாது? (அ) எஸ்றா கேட்ட எல்லாவற்றையும் ராஜா	2014, 2017, 2012	3

		கொடுக்கக் காரணம் என்ன? மேதிய அரமனையிலே அகப்பட்ட சுருளில் தேவாலயம் கட்டப்படவேண்டியதான செலவைக் குறித்து என்ன சொல்லப்பட்டிருந்தது? (அ) கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தது யார்? அவன் இஸ்ரவேலின் தலைவர்களுடன் எந்த நதியண்டையில் தங்கினான்?		
6	22	சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த போது இஸ்ரவேல் புத்திரர் எந்தப் பண்டிகையைச் சந்தோஷத்துடனே ஆசரித்தார்கள்? தேவனுடைய தயவுள்ள கரம் யார் மேலிருந்தது? (அ) சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் எந்தப் பண்டிகையை, எத்தனை நாட்களாக சந்தோஷத்துடனே ஆசரித்தார்கள்? அதை எதற்காக ஆசரித்தார்கள்?	2015, 2017, 2012	3
3	10	சிற்பாசாரிகள் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடுகிறபோது, கர்த்தரைத் துதிக்கும்படிக்கு நிறுத்தப்பட்டவர்கள் யார்? அவர்கள் பயன்படுத்திய இசைக்கருவிகள் யாவை? (அ) கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்படும் போது, எந்த இஸ்ரவேலின் ராஜா ஏற்கனவே கட்டளையிட்டிருந்தபடி கர்த்தரைத் துதிக்கும்படிக்கு ஆசாரியரும் லேவியரும் நிறுத்தப்பட்டார்கள்? தேவாலயத்தின் வேலை நிறுத்தப்பட்டிருந்த போது யூதாவிலும் எருசலேமிலுமிருந்த யூதருக்கு இஸ்ரவேல் தேவனின் நாமத்திலே தீர்க்கதரிசனம் சொன்ன தீர்க்கதரிசிகள் யார்? (அ) சிற்பாசாரிகள் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்ட போது கர்த்தரைப் புகழ்ந்து கூறப்பட்ட வார்த்தைகளை எழுது.	2016 2014 2012	3
6	8	எஸ்றா கேட்ட எல்லாவற்றையும் இராஜா கொடுக்கக் காரணம் என்ன? மேதிய அரமனையிலே அகப்பட்ட சுருளில் தேவாலயம் கட்டப்படவேண்டியதான செலவைக் குறித்து என்ன சொல்லப்பட்டிருந்தது?	2017	1

6	11	தேவாலயம் கட்டப்படுவதைக் குறித்து தான் பிறப்பித்த கட்டளையை மாற்றுகிற மனிதனுக்கு என்ன செய்யப்பட வேண்டும் என்று ராஜாவாகிய கோரேஸ் கூறினான்? அ) தரிய ராஜாவின் கட்டளையை மாற்றுகிறவர்களின் வீட்டிற்கு என்ன செய்யப்பட வேண்டும் என்று அவனால் கூறப்பட்டது?	2013, 2016	2
0	18	ஆசாரிய புத்திரரில் மறுஜாதியான மனைவிகளைக் கொண்டவர்கள் செய்த தீர்மானம் என்ன? தங்கள் குற்றத்துக்காக அவர்கள் செலுத்தியது யாது? எஸ்றா சொன்ன ஆலோசனைக்குப் பின் ஆசாரிய புத்திரரில் மறுஜாதியான மனைவிகளைக் கொண்டவர்கள் எடுத்த தீர்மானமும் அவர்கள் செய்ததும் என்ன?	2013, 2016	2
1	12	கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் மீண்டும் போடப்படுகையில் ஜனங்களெல்லாரும் என்ன செய்தார்கள்? முந்தின ஆலயத்தைக் கண்டிருந்த முதிர்வயதானவர்கள் செய்தது என்ன?	2013, 2017	2
0	8	சிறையிருப்பிலிருந்து வந்திருந்தும் எருசலேமில் கூடி வராதவர்களைக் குறித்து யூதாவிலும் எருசலேமிலும் பண்ணப்பட்ட விளம்பரம் யாது?	2014, 2017	2
0	8.1	சிறையிருப்பிலிருந்து வந்த யூதர்கள் மூன்று நாளைக்குள் எருசலேமுக்கு வராதே போனால் அவர்களுக்கு என்ன செய்யப்படுமென விளம்பரம் பண்ணப்பட்டது?	2011	1
3	௮௨	வழியிலே சத்துருவை விலக்கி தங்களுக்குத் துணை செய்யும்படி ராஜாவிடம் கேட்க எஸ்றா வெட்கப்பட்டிருந்ததின் காரணம் என்ன?	2011	1

12	மூந்தின ஆலயத்தைக் கண்டிருந்த முதிர்வயதானவர்கள் ஆலயம் திரும்பக் கட்டப்படுவதற்கு அஸ்திபாரம் போடப்பட்ட போது என்ன செய்தார்கள்? வேறே அநேகம் பேர் செய்தது என்ன?	2012	1
8.1	கோரேஸ் ராஜா தேவாலயத்தைக் குறித்து தான் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிட்டிருந்த ஆலயத்தின் அளவுகள் யாவை? அதற்கான செல்லும் செலவு எங்கிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று அவன் கட்டளையிட்டிருந்தான்	2012	1
2	தன் தலையிலும் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கின மனிதனின் பெயர் என்ன? அவன் ஏன் அவ்வாறு செய்தான்?	2013	1
1	எந்த ராஜாவின் கட்டளையின்படி பாபிலோன் கஜானாவிலிருந்த தஸ்திர அறை சோதிக்கப்பட்டது? அங்கு அகப்பட்ட சுருளில் எருசலேமிலிருந்த தேவாலயத்தைக் குறித்து உத்தரவு பிறப்பித்திருந்த ராஜா யார்?	2014	1
11	மறுஜாதியான ஸ்திரீகளை விவாகம் பண்ணியிருந்தவர்களைக் குறித்து எஸ்றா கட்டளையிட்டது என்ன?	2014	1
3	'உங்களோடே கூட நாங்களும் கட்டுவோம்" என்று கூறிய சத்துருக்களுக்கு செருபாபேலும் அவனோடிருந்தவர்களும் கொடுத்த பதில் யாது?	2015	1
4	சிறையிருப்பிலிருந்து வந்தவர்களுடைய குற்றத்தினிமித்தம் எஸ்றா எவ்வாறு துக்கித்துக் கொண்டிருந்தான்?	2015	1
2.1	பரிசுத்த வித்து தேசங்களின் ஜனங்களோடு கலந்து போனதற்கான காரணம் என்ன? இந்தக் குற்றத்தில் யார் யாருடைய கை முந்தினதாயிருந்தது?	2017	1

TAMBARAM Sunday School

Lesson Memory Verse & Moral Exam

Standard - 8

<Actual Marks> / 132	X 24 =

Time : 2 Hours
Marks : 24

PART - A

Write down the following memory verses. 47 X 2 = 94

No.	Reference	Tamil
1.	Eph 4:30	எபேசியர் 4 : 30
2.	Eph 4:31	எபேசியர் 4 : 31
3.	I Pt 2: 4	1 பேதுரு 2 : 4
4.	I Pt 2: 5	1 பேதுரு 2 : 5
5.	Job 23 : 12	யோபு 23 : 12
6.	Luke 12:47	லூக்கா 12 : 47
7.	1 Pt 5:4	1 பேதுரு 5:4
8.	1Cor 12:13	1 கொரிந்தியர் 12:13
9.	Col 2 : 12	கொலோசெயர் 2 : 12
10.	Gal 5 : 24	கலாத்தியர் 5:24
11.	Gal 6 : 7	கலாத்தியர் 6:7
12.	Gal 6 : 8	கலாத்தியர் 6:8
13.	Heb 11:33	எபிரெயர் 11 : 33
14.	Heb 11:34	எபிரெயர் 11 : 34
15.	Heb 11:35	எபிரெயர் 11 : 35
16.	Heb 6 : 1	எபிரெயர் 6 : 1
17.	Heb 6 : 2	எபிரெயர் 6 : 2
18.	I Cor 3:10	1 கொரிந்தியர் 3:10
19.	I Cor 3:11	1 கொரிந்தியர் 3:11
20.	I Cor 6 : 19	1 கொரிந்தியர் 6 : 19
21.	I Cor 6 : 20	1 கொரிந்தியர் 6 : 20
22.	I Tim 4 : 12	1 தீமோத்தேயு 4 : 12
23.	II Cor 4 : 10	2 கொரிந்தியர் 4 : 10
24.	II Cor 4 : 8	2 கொரிந்தியர் 4 : 8
25.	II Cor 4 : 9	2 கொரிந்தியர் 4 : 9
26.	II Cor 6 : 16	2 கொரிந்தியர் 6 : 16
27.	II Cor 6 : 17	2 கொரிந்தியர் 6 : 17
28.	II Cor 6 : 18	2 கொரிந்தியர் 6 : 18
29.	II Tim 3 : 16	11 தீமோத்தேயு 3 : 16
30.	II Tim 3 : 17	11 தீமோத்தேயு 3 : 17
31.	II Tim 4 : 7	11 தீமோத்தேயு 4: 7
32.	II Tim 4 : 8	11 தீமோத்தேயு 4: 8
33.	Jas 1:12	யாக்கோபு 1 : 12
34.	Jude 3	யூதா 3
35.	Lev 20 : 26	லேவியராகமம் 20 : 26
36.	Mk 16 : 16	மாற்கு 16 : 16
37.	Prov 26 : 27	நீதிமொழிகள் 26 : 27
38.	Prov 31:30	நீதிமொழி 31:30
39.	Rom 10 : 10	ரோமர் 10 : 10
40.	Rom 10 : 9	ரோமர் 10 : 9
41.	Rom 12:11	ரோமர் 12 : 11
42.	Rom 12:12	ரோமர் 12 : 12
43.	Rom 16 : 17	ரோமர் 16 : 17
44.	Rom 6 : 2	ரோமர் 6 : 2
45.	Rom 6 : 3	ரோமர் 6 : 3
46.	Rom 6 : 4	ரோமர் 6 : 4
47.	Rom 6:23	ரோமர் 6 : 23

PART - B

Write the Moral of the following lessons. 19 X 2 = 38

No.	Lesson	Tamil
1.	Conversion (Born-again Experience)	மனந்திரும்புதல் (மறுபடியும் பிறக்கும்
2.	Crowns	கிரீடங்கள்
3.	Daniel and His Companions in Babylon	பாபிலோனில் தானியேலும் அவனுடைய தோழர்களும்
4.	Daniel in the Den of Lions	சிங்கங்களின் கெபியில் தானியேல்
5.	Hananiah, Mishael and Azariah in the Fiery Furnace	அக்கினிச் சூளையில் அனனியா, மீஷாவேல், அசரியா
6.	Jonah in the Belly of the Fish	யோனா மீனின் வயிற்றில் இருந்தது
7.	Mordecai and Haman	மொர்தெகாயும் ஆமானும்
8.	Separation (Part I)	வேறுபிரிதல் (பகுதி 1)
9.	Separation (Part II)	வேறுபிரிதல் (பகுதி 2)

10.	St. Paul's Second Missionary Journey	அப் பவுலின் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணம்
11.	The Attributes of Nehemiah	நெகேமியாவின் நற்பண்புகள்
12.	The Baptism in the Holy Spirit	பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்
13.	The Books of the Bible	பரிசுத்த வேதாகமத்தின் புத்தங்கள்
14.	The Formation of the New Testament Church	புதிய ஏற்பாட்டுச் சபை உருவான விதம்
15.	The Reformations of Nehemiah	நெகேமியாவின் சீர்திருத்தங்கள்
16.	The Tenets of the New Testament Church	புதிய ஏற்பாட்டுச் சபையின் அடிப்படைக் கொள்கைகள்
17.	The Working of the Holy Spirit in Us	பரிசுத்த ஆவியானவர் நமக்குள் நடப்பிக்கும் கிரியைகள்
18.	Vashti and Esther	வஸ்தியும் எஸ்தரும்
19.	Water Baptism (Part II)	தண்ணீர் ஞானஸ்நானம் (பகுதி 2)

வகுப்பு : 8 | பாடம்- 1

நெகேமியாவின் நற்பண்புகள்

(11 நாளா. 36 : 13, 19, 20, நெகே 1 ; 2 : 12 -20;
நெகே. 4 : 7 ஷ 20; 5 : 14, 15; 6 : 2- 11; 13 : 23 - 27, 30)

I *<u>மனப்பாடவசனம் :</u>* (2 Marks)

<u>ரோமர் 12 : 11, 12</u>

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்.

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாயத் தரித்திருங்கள்.

<u>முன்னுரை</u> : நேபுகாத்நேச்சார் எருசலேம் பட்டணத்தை அழித்து, தேவலாயத்தைத் தீக் கொளுத்தி, யூதரை பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு போனதைக் குறித்து 2 நாளாகமம் 36 ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம்.

அந்தச் சந்தர்ப்பத்தில் சிறையாகக் கொண்டு போகப்பட்ட யூதரில் நெகேமியாவும் ஒருவன். அவன் அர்தசஷ்டா இராஜாவின் பானபாத்திரக்காரனாயிருந்தான். எருசலேமில் மீதியாயிருந்த யூதர்களின் பரிதாப நிலையைப் பற்றிக் கேள்வியுற்ற போது நெகேமியா துக்கித்துக் கர்த்தரை நோக்கி ஜெபித்தான். பின்பு இராஜாவிடம் அனுமதி பெற்றுக் கொண்டு அவன் எருசலேமுக்குத் திரும்பி இடிக்கப்பட்டிருந்த அலங்கத்தைப் பார்வையிட்டு, அவைகளைத் திரும்பக் கட்டுவதற்காக ஜனங்களை உற்சாகப்படுத்தினான்.

II *<u>சர்ந்தப்பம் கூறு:(யார் யாரிடம் எப்போது கூறியது)</u>* (2 ½ Marks)

1. a) "நானும் என் தகப்பன் வீட்டாரும பாவஞ் செய்தோம்." (நெகே. 1 : 6)
b) "நாங்கள் உமக்கு முன்பாக மிகவும் கெட்டவர்களாய் நடந்தோம்." (நெகே 1 : 7)

யார் : நெகேமியா
யாரிடம் : தேவனாகிய கர்த்தரிடம்
எப்போது : எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டது. அதின் வாசல்கள் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கிறதை கேட்ட போது, நெகேமியா உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து உபவாசித்தான். பின்பு பரலோகத்தின் தேவனிடத்திலிருந்து தங்களுக்கு இரக்கத்தை பெறும்படியாய், தங்களுடைய பாவத்தையும், இஸ்ரவேல் வீட்டாரின் பாவத்தையும் அறிக்கை செய்து, தங்களைத் தாழ்த்தி பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபிக்கும் போது இந்த வார்த்தைகளை கூறினான்.

2. "எருசமேின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள்" (நெகே. 2 : 17)

யார் : நெகேமியா
யாரிடம் : ஜனங்களை நோக்கி (யூதர்கள், ஆசாரியர்கள், பெரியவர்கள், அதிகாரிகள் வேலை செய்கிறவர்கள்)
எப்போது : நெகேமியா எருசலேமுக்கு வந்து மூன்று நாள் இருந்த பின்பு நகரத்தை சோதனை செய்தான். அப்போது எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும் ஜனங்கள் இருக்கிற சிறுமையையும் பார்த்தான். அதன் பின்பு ஜனங்களை நோக்கி இவ்வாறு கூறினான்.

3. "உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்குமில்லை பாத்தியமுமில்லை".(நெகே.2 : 20)

யார் : நெகேமியா
யாரிடம் : ஓரோனியனான சன்பல்லாத்திடமும், அம்மோனியானான தொபியாவிடமும், அரபியனான கேஷேமிடமும் கூறியது.
எப்போது : நெகேமியா எருசலேமின் அலங்கத்தை கட்டும் படியாய் ஜனங்களை அழைத்தப்போது அவர்கள் எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள். அதைக் கேட்ட சன்பல்லாத்தும், தொபியாவும் கேஷேமும் பரியாசம் பண்ணி, நிந்தித்து, ராஜாவுக்கு

விரோதமாய் கலகம் பண்ணப் போகிறீர்களோ என்றார்கள். அதற்கு நெகேமியா பிரதியுத்தரமாக பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்கு காரியத்தைக் கை கூடி வரப்பண்ணுவார். தேவனுடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம். உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்குமில்லை, பாத்தியமுமில்லை என்றான்.

4. "அவர்கள் வேலைக்காரர் முதலாய் ஜனங்கள் மேல் அதிகாரம் செலுத்தினார்கள். நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்ய வில்லை".*(நெகே. 5 : 15)*

யார் : *நெகேமியா*

யாரிடம் : *பிரபுக்களையும் அதிகாரிகளையும் ஜனங்களையும் நோக்கி கூறினது*

எப்போது : *நெகேமியா யூதா தேசத்தில் அதிபதியாயிருக்கும்படி ராஜாவாகிய அர்தசஷ்டா அவனுக்கு கற்பித்த நாளாகிய இருபதாம் வருஷம் தொடங்கி முப்பத்திரண்டாம் வருஷம் வரைக்கும் (12 வருடங்கள்) நெகேமியாவும் அவன் சகோதரரும் அதிபதிகள் வாங்குகிற படியை வாங்கிச் சாப்பிடவில்லை. நெகேமியாவிற்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து அவர்கள் கையாலே அப்பமும் திராட்சரசமும் வாங்கினது மல்லாமல் 40 சேக்கல் வெள்ளியும் வாங்கி வந்தார்கள். அவர்கள் வேலைக்காரர் முதலாய் ஜனங்கள் மேல் அதிகாரம் செலுத்தினார்கள். நெகேமியா தேவனுக்குப் பயந்ததினால் அப்படிச் செய்யவில்லை. அவனுடைய வேலைக்காரரும ஜனங்கள் மேல் அதிகாரம் செலுத்தவில்லை.*

5. "நான் பெரிய வேலையைச் செய்கிறேன். நான் வரக்கூடாது". *(நெகே. 6 : 3)*

யார் : *நெகேமியா*

யாரிடம் : *சன்பல்லாத்திடமும், கேஷேமிடமும் கூறினது.*

எப்போது : *நெகேமியா அலங்கத்தின் வாசல்களுக்கு இன்னும் கதவு போடாதிருக்கையில், சன்பல்லாத்தும், கேஷேமும் அவனுக்கு பொல்லாப்பும் செயயநினைத்து ஆள் அனுப்பு, ஓனோ பள்ளத்ததாக்கில் இருக்கிற கிராமங்கள் ஒன்றில் ஒருவரையொருவர் கண்டு பேசுவோம் வாரும் என்று அவனை கூப்பிட்டார்கள். அப்பொழுது நெகேமியா அவர்களிடத்தில் ஆட்களை அனுப்பி, நான் பெரிய வேலையைச் செய்கிறேன் நான் வரக்கூடாது என்றான்.*

6. "அவைகள் உம்முடைய மனோராஜ்யமே ஒழிய வேறல்ல".*(நெகே. 6 : 8)*

யார் : *நெகேமியா*

யாரிடம் : *சன்பல்லாத்துக்கு தன் வேலைக்காரர் மூலமாய் சொல்லி அனுப்பியது*

எப்போது : *எருசலேமின் அலங்கத்தை கட்டுகிற வேலையை தடை பண்ணும்படியாய் நெகேமியாவுக்கு சன்பல்லாத்து முத்திரை போடாத ஒரு கடிதத்தை அனுப்பி, அதிலே நீரும், யூதரும் கலகம் பண்ண நினைக்கிறீர்கள் என்றம், அதற்காக நீர் அலங்கத்தைக் கட்டுகிறீர் என்றும், நீர் அவர்களுக்கு ராஜாவாகப் போகிறீர் என்றும் யூதாவில் ஒரு இராஜா இருக்கிறார் என்றும் உம்மைக் குறித்து எருசலேமில் கூறுகிற தீர்க்கதரிசிகளையும் சம்பாதித்தீர் என்றும் புறஜாதிகள் கூறுகிறார்கள். கஷ்மூவும் அப்படிச் சொல்கிறான். இந்த செய்தி ராஜாவுக்கு எட்டுமே, ஆகையால் நாம் ஒருவரோடொருவர் ஆலோசனை பண்ணுவதற்கு நீர் வரவேண்டும் என்று எழுதியிருந்தது. நெகேமியா அவனுக்கு பிரதியுத்தரமாக நீர் சொல்லுகிற அந்தக் காரியங்களில் ஒன்றும் நடக்கவில்லை அவைகள் உம்முடைய மனோராஜ்யமே ஒழிய வேறல்ல என்று சொல்லியனுப்பினான்.*

7. **a)** "என்னைப்போன்ற மனிதன் ஓடிப்போவானோ? " (*நெகே. 6 : 11)*

b) "என்னைப் போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய்ப் பதுங்குவானோ? நான் போவதில்லை." (*நெகே. 6 : 11)*

யார் : *நெகேமியா*

யாரிடம் : *செமாயாவிடம்*

எப்போது : *தெலாயாவின் மகன் செமாயா தன் வீட்டிலே அடைக்கப்பட்டிருக்கும் போது நெகேமியா அவனிடத்தில் போனான். அப்போது செமாயா நெகேமியாவிடம், ''நாம் இருவரும் தேவனுடைய ஆலயத்துக்குள்ளே போய் தேவாலயத்தின் கதவுகளை பூட்டுவோம். இரவில் உம்மைக் கொன்று போட வருவார்கள்'' என்றான். அதற்கு நெகேமியா பிரதியுத்தரமாக, ''என்னைப் போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என்னைப் போன்றவன் உயிர்பிழைக்கும்படிக்கு தேவாலயத்தில் போய் பதுங்குவானோ? நான் போவதில்லை'' என்றான்.*

III <u>ஓரிரு வார்த்தைகளில் விடையளி :</u> (2 Marks)

1. சிறையிருப்பின் தேசமாகிய பாபிலோனில் நெகேமியா எங்கு இருந்தான்?
   சூசான் அரண்மனையில். (நெகேமியா 1 : 1)

2. எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கிற நிலவரம் நெகேமியாவுக்கு எப்பொழுது தெரிய வந்தது?
   அர்தசஷ்டா இராஜாவின் 20 ஆம் வருஷம் கிஸ்லேயு மாதத்தில். (நெகே. 1 : 1)

3. எருசலேமின் நிலவரத்தையும், சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் பற்றியும் நெகேமியா யார் மூலம் தெரிந்து கொண்டான்?
   யூதாவிலிருந்து வந்த நெகேமியாவின் சகோதரரில் ஒருவனாகிய ஆனானி, மற்றும் வேறே சில மனுஷர்கள் மூலமாய் தெரிந்து கொண்டான். (நெகே 1 : 2).

4. நெகேமியா எந்த இராஜாவின் பானபாத்திரக்காரனாயிருந்தான்?
   அர்தசஷ்டா இராஜாவின் பானபாத்திரக்காரனாயிருந்தான். (நெகே. 2 : 1).

5. எத்தனை வருடங்கள் நெகேமியாவும், அவன் சகோதரரும் அதிபதிகள் வாங்குகிற படியை வாங்கி சாப்பிடாமல் இருந்தான்?
   பன்னிரண்டு வருடங்கள் (நெகே 5 : 14)

6. சன்பல்லாத், நெகேமியாவை எங்கு வந்து சந்திக்கும்படி செய்தி அனுப்பினான்?
   ஓனோ பள்ளத்தாக்கில் (நெகே. 6 : 2)

7. முத்திரை போடாத கடிதத்தை நெகேமியாவுக்கு கொடுத்து அனுப்பியது யார்?
   சன்பல்லாத்து (நெகே. 6 : 5)

8. நெகேமியாவின் சத்துருக்கள் அவனை கொலை செய்யத் திட்டமிட்டிருக்கிறதை அவனிடம் கூறியது யார்?
   தெலாயாவின் மகன் செமாயா (நெகே. 6 : 10)

9. நெகேமியா தன்னை பாதுகாக்க எங்கே ஒளித்துக் கொள்ளும்படி செமாயா ஆலோசனை கூறினான்?
   தேவனுடைய வீடாகிய ஆலயத்தில் (நெகே. 6 : 10)

10. தொபியாவும், சன்பல்லாத்தும் நெகேமியாவுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லும்படி யாருக்கு கூலி கொடுத்தார்கள்?
    செமாயாவுக்கு (நெகே 6 : 12)

IV <u>ஓரிரு வாக்கிய□ களில் விடையளி :</u>

1. எருசலேம் பட்டணத்தை அழித்து சாலமோன் தேவாலயத்தை சுட்டெரித்து யூதர்களை பாபிலோனுக்கு சிறைபிடித்துக் கொண்டு போன ராஜா யார்? இதைக் குறித்து நாம் எங்கே வாசிக்கின்றோம்?
   1) பாபிலோனின் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதர்களை பாபிலோனுக்கு சிறைபிடித்துக் கொண்டு போனான். (11 நாளா. 36 : 13, 19, 20)
   2) 2 நாளாகமம் 36 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

2. நெகேமியா எந்த வார்த்தைகளை கேட்ட பொழுது துக்கித்து அழுதான்?

சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்த தேசத்திலே மகா தீங்கையும், நிந்தையையும் அனுபவிக்கிறார்கள். எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டு, அதன் வாசல்கள் அக்கியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கிறது என்கிறதான வார்த்தைகளைக் கேட்ட போது, அவன் துக்கித்து அழுதான். (நெகே. 1 : 3,4)

3. நெகேமியா சுயநலமில்லாதவனாய் இருந்தான் என்பதை எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?
நெகேமியா, தான் அரண்மனையில் நல்ல வசதியான இடத்தில், மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தபோதும் தன்ஜனத்தைக் குறித்தும், தன் பட்டணத்தைக் குறித்தும் கவலையுள்ளவனாய் இருந்தான். இதிலிருந்து நெகேமியா சுயநலமில்லாதவனாய் இருந்தான் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். (நெகே. 1 : 1 – 3)

4. நெகேமியா தாழ்மையுள்ளவனாய் இருந்தான் என்பதை அவன் செய்த விண்ணப்பத்திலிருந்து நீ எப்படி அறிந்து கொள்வாய்?
நெகேமியா கர்த்தரை நோக்கி அழுது ஜெபித்த போது தானும் தன் தகப்பன் வீட்டாரும், இஸ்ரவேல் ஜனங்களும் தேவனுக்கு விரோதமாக பாவஞ் செய்து மிகவும் கெட்டவர்களாக நடந்தோம் என்றும், மோசேயின் மூலம் கற்பித்த கற்பனைகளையும், கட்டளைகளையும் நியாயங்களையும் கைக் கொள்ளாமற்போனோம் என்றும் தன்னை தாழ்த்தி ஜெபித்ததிலிருந்து அவன் தாழ்மையுள்ளவனாயிருந்தான் என்பதை அறிந்து கொள்ளலாம். (நெகேமி. 1 : 6,7)

5. நெகேமியா நன்றியுள்ளவனாயிருந்தான் என்பதை நீ எப்படி அறிவாய்?
நெகேமியா தேவனை நோக்கி, உமது மகா வல்லமையினாலும், உமது பலத்த கரத்தினாலும் மீட்டுக் கொண்ட உமது அடியாரும், உமது ஜனங்களும் இவர்கள் (நாங்கள்) தான் என்று ஜெபித்தான். இப்படியாக தேவன் தங்களை எகிப்திலிருந்து மீட்டெடுத்தார் என்பதை அவன் நினைவு கூர்ந்ததிலிருந்து நன்றியுள்ளவனாயிருந்தான் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். (நெகே 1 : 10)

6. நெகேமியாவும், யூதா மனுஷரும் எருசலேமின் அலங்கத்தைக் கட்டிக் கொண்டிருக்கும் போது அதற்கு விரோதமாக எழும்பிய சத்துருக்கள் யார்? யார்?
நெகேமியாவும் யூதா மனுஷரும் எருசலேமின் அலங்கத்தைக் கட்டிக் கொண்டிருந்தபோது சன்பல்லாத்து, தொபியா, அரபியர், அம்மோனியர், அஸ்தோத்தியர் போன்ற சத்துருக்கள் எழும்பினார்கள். (நெகே. 4 : 7)

7. எருசலேமின் அலங்கத்தை கட்டுகிற வேலையை தடுக்க சத்துருக்கள் கட்டுபாடு பண்ணின போது நெகேமியா என்ன செய்தான்?
1)சத்துருக்கள் நிமித்தம் இரவும், பகலும் ஜாமங் காக்கிறவர்களை நெகேமியா வைத்தான். (நெகே. 4 : 9)
2) அலங்கத்திற்கு பின்னாக இருக்கிற பள்ளமான இடங்களிலும் மேடுகளிலும் பட்டயங்களையும் ஈட்டிகளையும் வில்லுகளையும் பிடித்திருக்கிற ஜனங்களை குடும்பம், குடும்பமாக நிறுத்தினான். (நெகே. 4 : 13)
3) கட்டுகிறவர்களை அவரவர் தங்கள் பட்டயத்தை தங்கள் இடுப்பிலே கட்டிக் கொண்டவர்களாய் வேலை செய்யச் சொன்னான்.(நெகே. 4 : 17, 18)

8. சத்துருக்கள் திரும்பத் திரும்ப பயமுறுத்திய போதும், நெகேமியா தன் வேலையைப் பற்றி தனக்கிருந்த பொறுப்புணர்ச்சியை எவ்வாறு வெளிப்படுத்தினான்?
சுத்துருக்கள் நெகேமியாவுக்கு விரோதமாய் பொல்லாப்பு செய்ய நினைத்து அவனை அழைத்தப் போது அவன் நான்பெரிய வேலையை செய்கிறேன், நான் வரக்கூடாது. நான் அந்த வேலையை விட்டு உங்களிடத்திற்கு வருகிறதினால் அது மினக்கெட்டு போவானேன் என்று சொல்லியனுப்பி தன் வேலையைப் பற்றி தனக்கிருந்த பொறுப்புணர்ச்சியை வெளிப்படுத்தினான். (நெகே. 6 : 3)

9. நெகேமியாவுக்கு தேவபயம் இருந்தது என எவ்வாறு அறியலாம்?
நெகேமியாவிற்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து அவர்கள் கையாலே அப்பமும் திராட்சரசமும் வாங்கினது மல்லாமல் 40 சேக்கல் வெள்ளியும் வாங்கி வந்தார்கள். அவர்கள் வேலைக்காரர் முதலாய் ஜனங்கள் மேல் அதிகாரம் செலுத்தினார்கள். ஆனால் நெகேமியா தேவனுக்குப் பயந்ததினால் அப்படிச் செய்யவுமில்லை அதிபதிகள் வாங்குகிற படியையும் 'வாங்கவில்லை. இதிலிருந்து நெகேமியாவுக்கு தேவபயம் இருந்தது என்று அறியலாம். (நெகே. 5 : 14, 15)

10. யூதா தேசத்தில் நெகேமியா எவ்வளவு காலம் அதிபதியாக நியமிக்கப்பட்டான்?

நெகேமியா அர்தசஷ்டாவின் இருபதாம் வருஷம் தொடங்கி முப்பத்திரண்டாம் வருஷம் வரைக்கும் 12 வருடங்கள் யூதா தேசத்தின் அதிபதியாக நியமிக்கப்பட்டான். (நெகே. 5 : 14)

V ***சுருக்கமான விடையளி :*** (4 Marks)

1. நெகேமியா எருசலேமின் பாழான நிலவரத்தை பார்வையிடும் வேலையை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் தானே செய்ததின் நோக்கம் என்ன?

நெகேமியா எருசலேமுக்காக செய்யும்படி கர்த்தர் தன் மனதில் வைத்த காரியங்களையெல்லாம் சரியாக அறிந்து, விளங்கிக் கொண்டு, தான் அதை செய்யும்படியாகவே, இராத்திரியில் எழுந்திருந்து, முதலாவது நகரசோதனை செய்தான். கர்த்தர் கொடுத்த அந்த வேலைக்கு தான் உண்மையுள்ளவனாய் இருந்து அவர் சித்தத்தின்படியே செய்து முடிக்க வேண்டும் என்கிற தீர்மானமும், வாஞ்சையும் அவனிடமிருந்தபடியால் மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் தானே அந்த வேலையை செய்தான். (நெகே. 2 : 12)

2. நெகேமியா எருசலேமின் அலங்கத்தை கட்டும் வேலையை ஆரம்பிக்கும்படியாய் ஜனங்களை எவ்வாறு உற்சாகப்படுத்தினான்?.

நெகேமியா ஜனங்களை நோக்கி எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும், நாம் இருக்கிற சிறுமையையும் பார்க்கிறீர்களே. நாம் இனி நிந்தைக்குள்ளாயிராதபடிக்கு எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள் என்று சொன்னான். மேலும் அவன் தேவனுடைய கரம் அவன் மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா அவனோடே சொன்ன வார்த்தைகளையும் ஜனங்களுக்கு அறிவித்து அவர்களை உற்சாகப்படுத்தினான். (நெகே. 2 : 17, 18)

3. சத்துருக்கள் நெகேமியாவுக்கு விரோதமாய் எழும்பின போது நெகேமியா தன் தேவன் பேரில் திடநம்பிக்கை உடையவனாய் இருந்தான் என்பதை எவ்வாறு அறியலாம்?

எருசலேமின் அலங்கத்தை கட்டுகிற வேலையை தடை செய்யும்படி சத்துருக்கள் அவனுக்கு விரோதமாய் எழும்பி அவனை பரியாசம் பண்ணி நிந்தித்தார்கள். அதற்கு அவன், "பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்கு காரியத்தைக் கை கூடி வரப்பண்ணுவார்" என்றான். மேலும் யூதர்கள், "சுமைக்காரரின் பெலன் குறைந்து போகிறது. மண்மேடும் மிச்சமாயிருக்கிறது. நாங்கள் அலங்கத்தைக் கட்டக் கூடாது" என்று அதைரியப்பட்ட போது, "நம்முடைய தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார்" என்று கூறி ஜனங்களையும் தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கப் பண்ணினான். (நெகேமி. 2 : 20, 4 : 10, 20)

4. எருசலேமின் அலங்கத்தை கட்டுகிற வேலையை தடுக்க சத்துருக்கள் சதி ஆலோசனை செய்த போது வரக்கூடிய தீமைகளைத் தவிர்க்க நெகேமியா எடுத்துக் கொண்ட முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் என்ன?

சத்துருக்கள் நிமித்தம் இரவும், பகலும் ஜாம காக்கிறவர்களை நெகேமியா வைத்தான். அலங்கத்திற்கு பின்னாக இருக்கிற பள்ளமான இடங்களிலும், மேடுகளிலும் பட்டயங்களையும், ஈட்டிகளையும் வில்லுகளையும் பிடித்திருக்கிற ஜனங்களை குடும்பம், குடும்பமாக நிறுத்தினான். கட்டுகிறவர்களை அவரவர் தங்கள் பட்டயத்தை தங்கள் இடுப்பிலே கட்டிக் கொண்டவர்களாய் வேலை செய்யச் சொன்னான். அலங்கத்தின் வேலையினிமித்தம் சிதறப்பட்டு ஒருவருக்கொருவர் தூரமாயிருக்கிறவர்கள் எக்காளச் சத்தத்தைக் கேட்டு ஓரிடத்தில் வந்து கூடும்படிக்கு எக்காளம் ஊதுகிறவனை அவனண்டையிலே நிற்கச் செய்தான். (நெகே 4 : 9, 13, 18, 19)

5. தெலாயாவின் மகன் செமாயா நெகேமியாவுக்கு விரோதமாய் சொன்ன தீர்க்கதரிசனம் என்ன? ஏன் அவ்வாறு கூறினான் ?

தெலாயாவின் மகன் செமாயா நெகேமியாவைப் பார்த்து, "நாம் இருவருமாய்த் தேவனுடைய வீடாகிய ஆலயத்துக்குள்ளே போய் தேவாலயத்தின் கதவுகளை பூட்டுவோம் வாரும். உம்மைக் கொன்று போட வருவார்கள்" என்று நெகேமியாவிற்கு விரோதமாக பொய்யான தீர்க்கதரிசனம் உரைத்தான். ஏனெனில் தொபியாவும், சன்பல்லாத்தும், நெகேமியாவுக்கு பயத்தை உண்டாக்குவதற்கும், எருசலேமின் அலங்கத்தை கட்டும் வேலையை நிறுத்தி விட்டு தேவாலயத்தில் போய் தன் உயிர்பிழைக்கும்படி ஒளிந்து கொள்வதின் மூலம் நெகேமியா பாவங் கட்டிக் கொள்ளுகிறதற்கும் நெகேமியாவை நிந்திக்கத்தக்க அபகீர்த்திக்கு முகாந்தரம் உண்டாக்குகிறதற்கும் செமாயாவுக்கு கைக்கூலி கொடுத்திருந்தார்கள். (நெகே. 6 : 10,12,13)

6. நெகேமியா தன் ஜீவனுக்குப் பயந்து தன் வேலையை விட்டு ஓடவில்லை என்பதை எவ்வாறு அறியலாம்?

தெலாயாவின் மகன் செமாயா என்பவன் நெகேமியாவிடம் சத்துருக்கள் உம்மைக் கொன்றுபோட வருகிறார்கள். ஆகையால் நாம் இருவருவமாய்த் தேவனுடைய வீடாகிய ஆலயத்துக்குள்ளேபோய், தேவாலயத்தின் கதவுகளைப் பூட்டுவோம் வாரும் என்றான். அதற்கு நெகேமியா என்னைப் போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என்னைப் போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய்ப் பது குவானோ? நான் போவதில்லை என்றான். இதிலிருந்து அவன் தன் ஜீவனுக்கு பயந்து தன் வேலையை விட்டு ஓடவில்லை என்பதை அறிந்து கொள்ளலாம். (நெகே. 6 : 10, 11)

7. நெகேமியா கர்த்தருடைய பிரமாணங்களைக் குறித்து வைராக்கிய முள்ளவனாயிருந்தான் என்பதை எப்படி அறிவாய்?

நெகேமியாவின் நாட்களில் சில யூதர்கள் அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதிகளான ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்டனர். அவர்கள் பிள்ளைகள் பேசின பேச்சில் பாதி அஸ்தோஸ் பாஷையாயிருந்தது. இவர்கள் அந்தந்த ஜாதிகளின் பாஷையைத் தவிர யூத பாஷையை திட்டமாய் பேச அறியாது இருந்தார்கள். அப்போது மறுஜாதியான ஸ்திரீகளை சேர்த்துக் கொண்ட யூதர்களை நெகேமியா கடிந்து கொண்டு, அவர்கள் மேல் வரும் சாபத்தைக் கூறி, அவர்களில் சிலரை அடித்து, மயிரை பிய்த்து, நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளில் ஒருவரையும் உங்கள் குமாரருக்காகிலும் உங்களுக்காகிலும் கொள்ளாமலும் இருக்க வேண்டும் என்று அவர்களை தேவன் பேரில் ஆணையிடப்பண்ணினான். இப்படியே அவன் மறுஜாதியாரையெல்லாம் நீக்கி, ஆசாரியரையும், லேவியரையும் சுத்திகரித்து, அவரவரை அவர்கள் வேலையின் முறைகளில் நிறுத்தினான். இதன்மூலம் நெகேமியா கர்த்தருடைய பிரமாணங்களில் வைராக்கியமுள்ளவனாயிருந்தான் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். (நெகே. 13 : 23 - 25)

VI <u>*விரிவான விடையளி:*</u> (10 Marks)

1. எருசலேமின் அலங்கம் இடிப்பட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்பதை கேள்விப்பட்ட போது நெகேமியா பரலோகத்தின் தேவனை நோக்கி எவ்வாறு ஜெபித்தான்? (அல்லது) நெகேமியா ஒரு ஜெபவீரனாய் இருந்தான் என்பதை எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?

நெகேமியா எருசலேமின் அலங்கம் இடிப்பட்டது. அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கிறது என்ற செய்தியை கேட்டப் போது, உட்கார்ந்து அழுது, சில நாளாய்த்துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி,

1) *பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே உம்மில் அன்புகூர்ந்து உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும், கிருபையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான் தேவனே, உமது அடியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்காக இன்று இரவும், பகலும் உமக்கு முன்பாக மன்றாடி, நாங்கள் உமக்கு விரோதமாய் செய்த பாவங்களை அறிக்கையிடுகிற அடியேனுடைய ஜெபத்தை கேட்கிறதற்கு உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் திறந்தும் இருப்பதாக.*
2) *நீர் உம்முடைய தாசனாகிய மோசேக்குக் கற்பித்த கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளாதே போனோம்.*
3) *நீங்கள் கட்டளையை மீறினால் ஜாதிகளுக்குள்ளே சிதறடிப்பேன் என்றும், என் கற்பனைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்வீர்களானால் உங்களிலே தள்ளுண்டு போனவர்கள் வானத்தின் கடையாந்தரத்தில் இருந்தாலும் அவர்களை கொண்டு வருவேன் என்று உம்முடைய தாசனாகிய மோசேக்கு கட்டளையிட்ட வார்த்தையை நினைத்தருளும்.*
4) *தேவரீர் உமது மகா வல்லமையினாலும் பலத்த கரத்தினாலும் மீட்டுக் கொண்ட உமது அடியாரும், உமது ஜனங்களும் இவர்கள் தானே.*
5) *ஆண்டவரே உமது அடியானின் ஜெபத்தையும், உமது நாமத்திற்கு பயப்பட வேண்டுமென்று விரும்புகிற உமது அடியாரின் ஜெபத்தையும் உமது செவிகள் கவனித்திருப்பதாக.*
6) *இந்த மனுஷனுக்கு முன்பாக எனக்கு இரக்கம் கிடைக்கப் பண்ணியருளும் என்று விண்ணப்பம் பண்ணினான்?*
7) *அது மாத்திரமல்ல, ராஜாவிடம் எருசலேமில் அலங்கம் கட்டப்படுவதைக் குறித்து பேசும்போது ஜெபித்துவிட்டு பேசுகிற அனுபவம் உடையவனாயிருந்தான்.*

ஆகையால் தேவனுடைய தயவுள்ள கரம் அவன்மேல் இருந்தது கர்த்தர் அவனுடைய காரியங்களை கைக்கூடிவரப் பண்ணினார். (நெகே. 1 : 4 - 11)

2. நெகேமியாவின் நற்பண்புகள் யாவை? வசன ஆதாரத்துடன் எழுது.

1) *நெகேமியா தான் அரமனையிலிருந்தபோதும், தன் ஜனத்தைக் குறித்தும், தன் பட்டணத்தைக் குறித்தும் கவலையுள்ளவனாக இருந்தான்.(நெகே.1:1-3)*
2) *அவன் ஒரு ஜெப வீரனாயிருந்தான். (நெகே. 1 : 4 - 11)*
3) *அவன் தாழ்மையுள்ளவனாயிருந்தான்.(பாவ அறிக்கை செய்தது)(நெகே.1:6,7)*
4) *அவன் நன்றியுள்ளவனாக இருந்தான்.(மீட்பை நினைவு கூர்ந்தது)(நெகே.1:10)*
5) *அவன் தன் வேலையை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் தானே செய்தான். (நெகே. 2 : 12 - 16)*
6) *அவன் ஜனங்களை உற்சாகப்படுத்தினான். (நெகே. 2 : 17, 18)*
7) *சத்துருக்கள் சதி ஆலோசனை செய்த போதும் அவன் அதைரியப்படவில்லை வரக்கூடிய தீமைகளைத் தவிர்க்க முன்னெச்சரிக்கை எடுத்துக் கொண்டான். (நெகே. 4 : 7 - 23)*
8) *அவன் கர்த்தர் பேரில் திட நம்பிக்கை உடையவனாயிருந்தான்.(நெகே.2:18-20)*
9) *அவனுக்கு தேவபயம் இருந்தது, (அவன் ஜனங்களிடத்தில் அதிபதிகள் வாங்குகிற படியை வாங்கவில்லை அவர்கள் மீது அவன் அநியாயமாய் அதிகாரம் செலுத்தவில்லை, (நெகே. 5 : 14, 15)*
10) *சத்துருக்கள் திரும்பத்திரும்ப அவர்களைப் பயமுறுத்திய போதும், அவன் தன் வேலையைப் பற்றி தனக்கிருந்த பொறுப்புணர்ச்சியை வெளிப்படுத்தினான். (நெகே. 6 : 2 - 9)*
11) *அவன் தன் ஜீவனுக்குப் பயந்து தன் வேலையை விட்டு ஓடவில்லை. (நெகே. 6 : 10, 11)*
12) *அவன் கர்த்தருடைய பிரமாணங்களைக் குறித்து வைராக்கியமுள்ளவனாயிருந்தான் (நெகே. 13 : 23 - 27, 30)*

VII <u>*போதனை :*</u> (2 Marks)

நாம் தேவ ஜனங்களைக் குறித்தும், தேவ காரியங்களைக் குறித்தும் வைராக்கியமுள்ளவர்களாகவும், ஜெப வீரராகவும், தேவன் பேரில் நம்பிக்கையுள்ளவர்களாகவும் நமது ஊழியத்திலும் வேலையிலும் பொறுப்புணர்ச்சியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

****

ஞாயிறுபள்ளி

வகுப்பு 8

பாடம்-2

நெகேமியாவின் சீர்திருத்தங்கள்

I. ***மனப்பாட வசனம்:*** (2 Marks)

1 கோரிந்தியர் 3:10,11

எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின் படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்.

போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது.

II. ***சந்தர்ப்பம் கூறு (யார், யாரிடம், எப்போது கூறியது)*** **:** (2 ½ Marks)

1. இந்த வட்டியை விட்டு விடுவோமாக *(நெகேமியா 5:10)*

யார் : *நெகேமியா*
யாரிடம் : *பிரபுக்களிடமும், அதிகாரிகளிடமும்*
எப்போது : *ஜனங்கள் பஞ்சகாலத்தில் பிரபுக்களிடமும், அதிகாரிகளிடமும் தானியமும் பணமும் வட்டிக்கு வாங்கியிருந்தார்கள். இந்த காரியத்தை அவர்கள் நெகேமியாவிடம் வந்து முறையிட்டபோது நெகேமியா பெரிய சபையை கூடிவரச்செய்து, பிரபுக்களையும், அதிகாரிகளையும் நோக்கி, "நீங்கள் செய்கிற காரியம் நல்லதல்ல; தேவனுக்கு பயந்து நடக்கவேண்டாமா? இந்த வட்டியை விட்டுவிடுவோமாக" என்று கூறினான்.*

2. "நீங்கள் ஓய்வு நாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கையென்ன?" *(நெகே, 13:17)*

யார் : *நெகேமியா*
யாரிடம் : *யூதாவின் பெரியவர்களைப் பார்த்து*
எப்போது : *மீனையும், சகலவித சரக்குகளையும் எருசலேமுக்கு கொண்டு வந்து, ஓய்வு நாளிலே யூதா புத்திரருக்கும் எருசலேமில் இருக்கிறவர்களுக்கும், விற்கிற சில தீரியரும் எருசலேமில் குடியிருந்தார்கள். ஆகையால் நெகேமியா யூதாவின் பெரியவர்களைக் கடிந்துக் கொண்டு "நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தக்குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கையென்ன?" என்றான்.*

3. 'அவன் தன் தேவனாலே சிநேகிக்கப்பட்டவனாயிருந்தான்." *(நெகேமியா 13:26)*

யார் : *நெகேமியா*
யாரிடம் : *அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதிகளான ஸ்திரீகளை சேர்த்துக்கொண்ட யூதர்களை நோக்கி*
எப்போது : *நெகேமியா மறுதேசத்து ஸ்திரீகளை விவாகம் பண்ணின யூதர்களை கடிந்துகொண்டு, அவர்கள் மேல் வரும் சாபத்தைக் கூறும்பொழுது, அவர்களை நோக்கி, "இஸ்ரவே- ன் இராஜாவாகிய சாலொமோன் இதினாலே பாவஞ்செய்தான் அல்லவா? அவனைப்போன்ற இராஜா அநேகம் ஜாதிகளுக்குள்ளே உண்டாயிருந்ததில்லை. அவன் தன் தேவனாலே சிநேகிக்கப்பட்டவனாயிருந்தான். அப்படிப்பட்டவனையும் மறுஜாதியான ஸ்திரீகள் பாவஞ் செய்ய பண்ணினார்களே" என்று கூறி எச்சரித்தான்.*

III. ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி*** **:** (2 Mark)

1. இடிந்து போன எருசலேமின் அலங்கத்தையும் அதன் வாசல்களையும் கட்டினது யார்?
   நெகேமியா (பாடத்திட்டம்)

2. சகோதரருக்குள்ளே வட்டிவாங்கினதை நிறுத்தியது யார்?
   நெகேமியா (நெகேமியா 5 : 10, 12)

3. நெகேமியாவின் மறுபெயர் என்ன?
   திர்ஷாதா (நெகேமியா 8 : 9)

4. நெகேமியாவின் காலங்களில் வேதபாரகனாயிருந்தவன் யார்?

எஸ்றா (நெகேமியா 8 : 13)

5. நெகேமியாவின் நாட்களில் தேவனுடைய ஆலயத்தின் அறைகளை விசாரிக்கும்படி வைக்கப்பட்டவன் யார்?
   ஆசாரியனாகிய எ- யாசிப் (நெகேமியா 13 : 4)

6. எ- யாசிப் யாருடன் சம்பந்தங்கலந்திருந்தான்?
   தொபியாவோடே சம்பந்தங்கலந்திருந்தான். (நெகேமியா 13 : 4)

7. தேவனுடைய ஆலயபிரகாரங்களில் தொபியாவுக்காக ஒரு அறையை உண்டு பண்ணியது யார்?
   எ- யாசிப் (நெகேமியா 13 : 5)

8. தேவாலயத்து பிரகாரங்களில் ஒரு அறையி- ருந்த யாருடைய பொருட்களை நெகேமியா வெளியே எறிந்தான்?
   தொபியாவின் பொருட்களை வெளியே எறிந்தான். (நெகேமியா 13 : 8)

9. எ- யாசின் மகனுடைய பெயர் என்ன?
   யொயதா (நெகேமியா 12 : 10)

10. ஓய்வுநாள் ஆசரிப்பை புதுப்பித்தது யார்?
    நெகேமியா (நெகேமியா 13 : 15-22)

11. தேவனாலே சிநேகிக்கப்பட்டவனாயிருந்தும் மறுஜாதியான ஸ்திரீகளால் பாவத்தில் விழுந்த இராஜா யார்?
    சாலோமோன் இராஜா (நெகேமியா 13 : 26)

IV. <u>*ஓரிரு வாக்கியங்களில் விடையளி*</u> : (2 Marks)

1. தன் சகோதரர்களுக்கு பணத்தையும் தானியத்தையும் வட்டிவாங்காமல் கடனாக கொடுத்தவர்கள் யார்?
நெகேமியாவும், அவன் சகோதரரும், அவன் வேலைக்காரரும் வட்டி வாங்காமல் கடன் கொடுத்தார்கள். (நெகே. 5:10)

2. நெகேமியாவின் நாட்களில் ஆசாரிய ஊழியத்திற்கு விலக்கமானவர்கள் என்று எண்ணப்பட்டவர்கள் யார்? ஏன்?
அபாயவின் புத்திரர், பரிசிலாவின் புத்திரர், கோசின் புத்திரர் முத- ய ஆசாரியர்கள் தங்கள் வம்ச அட்டவணையைத் தேடி அதை கண்டுபிடிக்கக்கூடாமற் போனபடியினால் ஆசாரிய ஊழியத்திற்கு விலக்கமானவர்கள் என்று எண்ணப்பட்டனர். (நெகே. 7:5, 63, 64)

3. இஸ்ரவேலர் வெகுகாலமாக ஆசரிக்காமல் இருந்த கூடாரப்பண்டிகையை புதுப்பித்து ஆசரிக்கும்படி செய்தவன் யார்? எப்போது ஆசரித்தார்கள்?
இஸ்ரவேலர் வெகுகாலமாக ஆசரிக்காமல் இருந்த கூடாரப்பண்டிகையை நெகேமியா புதுபித்து ஆசரிக்கும்படி செய்தான். அதை அவர்கள் ஏழாம் மாதத்தில் ஆசரித்தார்கள். (நெகே. 8:14,18)

4. ஜனங்கள் கைக்கொள்ளாமல் விட்டுவிட்ட விடுதலையின் வருஷமாகிய ஏழாம் வருஷத்தின் (உபா,15:9) வழக்கத்தை நெகேமியா எவ்வாறு புதுப்பித்தான்?
நெகேமியா ஏழாம் வருஷத்தில் நிலத்தைப் பண்படுத்தாமலும் விதைக்காமலும், பழங்களைச் சேர்க்காமலும் அதை விடுதலை வருஷமாக்கி சகல கடன்களையும் விட்டுவிடும் வழக்கத்தை திரும்பவும் கொண்டு வந்து, ஜனங்கள் கைக்கொள்ளாமல் விட்டிருந்த விடுதலையின் வருஷத்தின் வழக்கத்தைப் புதுப்பித்தான்.(நெகே 10:31)

5. நெகேமியாவின் நாட்களில் தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்காகவும் ஆலயத்தின் சகல வேலைகளுக்காகவும் நெகேமியாவும் ஜனங்களும் தங்கள் மேல் ஏற்றுக்கொண்ட கடன் (உத்தரவாதம்) என்ன?
வருடந்தோறும் சேக்க- ன் அளவில் மூன்றில் ஒருபங்கைக் கொடுப்போம் என்ற கடனைத் (உத்தரவாதம்) தங்கள் மேல் ஏற்றுக்கொண்டனர். (நெகே 10:32,33)

6. நெகேமியா தேவனுடைய ஆலயத்திற்குக் கொண்டு வரவேண்டிய விறகு காணிக்கைகளை எவ்வாறு திட்டம் பண்ணினான்?

நெகேமியா நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி தேவனாகிய கர்த்தருடைய ப- பீடத்தின் மேல் எரிகிறதற்காக விறகு காணிக்கைகளை குறிக்கப்பட்ட காலங்களில் வருஷாவருஷம் கொண்டு வரும்படி ஆசாரியர்கள், லேவியர்கள், ஜனங்கள் மேல் சீட்டுப் போட்டு அதைத் திட்டம் பண்ணினான். (நெகே 10:34 ; 13 : 31)

7. நெகேமியா புதுப்பித்த ஏதேனும் இரு காணிக்கைகளை குறிப்பிடுக.

i. விறகு காணிக்கை

ii. முதற்பலன் காணிக்கை (நெகே. 10:34,35-37 ; 13 : 31)

8. தேவனுடைய ஆலயத்திற்கு கொண்டு வரப்பட வேண்டிய முதற்பலன் காணிக்கைகளைக் குறித்து நெகேமியா திட்டம் பண்ணினவைகளைப் பற்றி எழுது?

i. வருஷந்தோறும் தேசத்தின் முதற்பலன்களையும், சகலவித விருட்சங்களின் முதற்கனிகளையும், குமாரரில் முதற்பேறுகளையும், ஆடுமாடுகளாகிய மிருகஜீவன்களின் தலையீற்றுகளையும் தேவனுடைய ஆலயத்துக்கும் தேவனுடைய ஆலயத்திலே ஊழியஞ்செய்கிற ஆசாரியரிடத்துக்கும் கொண்டு வரவும்.

ii. பிசைந்த மாவின் முதற்பாகத்தையும், சகல மரங்களின் முந்தின பலனாகிய திராட்சப் பழரசத்தையும், எண்ணெயையும் தேவனுடைய ஆலயத்தின் அறைகளில் வைக்கும்படி ஆசாரியரிடத்துக்கும் கொண்டு வரவும், நெகேமியா திட்டம் பண்ணினான். (நெகே 10:35-37)

9. தசம பாகம் செலுத்துவதைக் குறித்து நெகேமியா எவ்வாறு திட்டம் பண்ணினான்?

i. நெகேமியா தங்கள் நிலப் பயிர்களில் தசமபாகம் லேவியரிடத்துக்கும் கொண்டு வரவும்

ii. லேவியர்களாகிய இவர்கள் தங்கள் வெள்ளாண்மையின் பட்டணங்களிலெல்லாம் தசமபாகம் சேர்க்கவும்

iii. வே- யர் தசமபாகம் சேர்க்கும் போது ஆரோனின் குமாரனாகிய ஒரு ஆசாரியன், லேவியரோடே கூட இருக்கவும், தசமபாகமாகிய அதிலே, லேவியர் பத்தில் ஒரு பங்கை, தேவனுடைய ஆலயத்திலுள்ள பொக்கிஷ அறைகளில் கொண்டு வரவும் திட்டம் பண்ணினான். (நெகே 10:37,38)

10. நெகேமியாவின் நாட்களில் எருசலேமிலும் இதர பட்டணங்களிலும் குடியிருக்க வேண்டியவர்களைப் பற்றி செய்யப்பட்டிருந்த சீர்திருத்தம் என்ன?

i. ஜனத்தின் அதிகாரிகள் எருசலேமிலே குடியிருந்தார்கள்.

ii. மற்ற ஜனங்கள் தங்களுக்குள்ளே பத்துப்பேரில் ஒருவனை எருசலேமென்னும் பரிசுத்த நகரத்திலும் ஒன்பது பேரை மற்றப் பட்டணங்களிலும் குடியிருக்கப் பண்ண சீட்டுகளைப் போட்டார்கள்.

iii ஆனாலும் எருசலேமிலே குடியிருக்க மனப்பூர்வமாய்ச் சம்மதித்த மனுஷர்களையெல்லாம் ஜனங்கள் வாழ்த்தினார்கள். (நெகே 11:1,2)

V. *சுருக்கமான விடையளி* : (5 Marks)

1. எருசலேமின் வாசல்கள் எத்தனை? அவை யாவை?

எருசலேமின் வாசல்கள் பனிரெண்டு அவையாவன.

1.	ஆட்டு வாசல்	7.	குப்பைமேடு வாசல்
2.	மீன் வாசல்	8.	ஊருணி வாசல்
3.	பழைய வாசல்	9.	தண்ணீர் வாசல்
4.	எப்பிராயீம் வாசல்	10.	காவல் வீட்டு வாசல்
5.	பள்ளதாக்கின் வாசல்	11.	குதிரை வாசல்
6.	கிழக்கு வாசல்	12.	மிப்காத் என்னும் வாசல்

2. சகோதரர்களுக்குள் வட்டி வாங்குவதைக் குறித்து நெகேமியாவின் சீர்திருத்தங்கள் யாவை?

ஜனங்கள் தங்களுடைய பஞ்சத்திலே தானியத்தையும் பணத்தையும் பிரபுகளிடத்திலும் அதிகாரிகளிடத்திலும் கடனாக வாங்கினார்கள். அந்த கடனுக்காக பிரபுக்களும் அதிகாரிகளும் நூற்றுக்கொன்று என்ற வீதத்தில் வட்டி வசூ- த்து வந்தார்கள். இதைக் குறித்ததான ஜனங்களுடைய முறையிடுதலையும், கூக்குரலையும் நெகேமியா கேட்ட பொழுது பிரபுக்களுக்கும் அதிகாரிகளுக்கும் விரோதமாக ஒரு பெரிய சபையை கூடிவரும் படியாக செய்தான். பிரபுக்களையும் அதிகாரிகளையும் பார்த்து, 'நீங்கள் தேவனுக்கு பயந்து நடக்க வேண்டாமா? இந்த வட்டியை விட்டு விடுங்கள்' என்று கண்டித்தான். மேலும் இதுவரையிலும் வாங்கியிருக்கிற வட்டியையும் திரும்பக் கொடுத்துவிடும் படியாகவும் புத்தி சொன்னார்கள்.

பிரபுக்களும், அதிகாரிகளும் இந்த தேவனுடைய ஆலோசனைக்கு (உபா. 23:19,20) கீழ்ப்படிந்து, தாங்கள் இதுவரை வாங்கியிருந்த வட்டியை ஜனங்களிடம் திருப்பிக்கொடுத்து விட்டார்கள். இனி அப்படிச் செய்ய மாட்டோம் என்றும் நெகேமியாவிடம் ஆணையிட்டுக் கொடுத்தார்கள். (நெகே 5:1-12)

3. தன் சகோதரரிடத்தில் வட்டி வாங்குகிறவர்களுக்கு என்ன சம்பவிக்கக்கடவது என்று நெகேமியா கூறினான்? தன் சகோதரரிடத்தில் வட்டி வாங்காதவர்களை கர்த்தர் எவ்வாறு ஆசீர்வதிப்பார் என்று நாம் உபாகமத்தில் வாசிக்கிறோம்?

i. நெகேமியா தன் வஸ்திரத்தை உதறிப்போட்டு தன் சகோதரரிடத்தில் வட்டி வாங்குகிற மனிதனை, தேவன் அவன் வீட்டிலும் அவன் சம்பாத்தியத்திலும் இருந்து உதறிப்போடக்கடவர். இப்படியாக அவன் உதறிப்போடப்பட்டு வெறுமையாய் போவானாக என்றான். (நெகே 5:13)

ii. தன் சகோதரரிடத்தில் வட்டி வாங்காதவர்களை கர்த்தர் அவர்கள் கையிட்டுச் செய்கிற எல்லா வேலைகளிலும் ஆசீர்வதிப்பார் என்று உபாகமத்தில் வாசிக்கிறோம். (உபா 23:30)

4. வெகுகாலமாக ஆசரிக்காமல் இருந்த கூடாரப் பண்டிகையை நெகேமியாவின் நாட்களில் எவ்வாறு ஆசரித்தார்கள்? விவரி?

ஜனத்தின் சகல வம்சத்தலைவரும், ஆசாரியரும், லேவியரும் நியாயப்பிரமாணத்திலே, இஸ்ரவேல் புத்திரர் ஏழாம் மாதத்தின் பண்டிகையிலே கூடாரங்களில் குடியிருக்க வேண்டும் என்று கர்த்தர் மோசேயைக் கொண்டு கற்பித்தகாரியம் எழுதியிருக்கிறதைக் கண்டார்கள். ஆகையால் எழுதியிருக்கிறபடி கூடாரங்களைப் போடும்படிக்கு 'நீங்கள் மலைகளுக்கு புறப்பட்டுப்போய் ஒ- வக்கிளைகளையும், காட்டு ஒ- வக்கிளைகளையும், மிருதுச்செடிகளின் கிளைகளையும், பேரீச்ச மட்டைகளையும் அடர்ந்த மரக்கிளைகளையும் கொண்டு வாருங்கள்' என்று தங்களுடைய சகலபட்டணங்களிலும் எருசலேமிலும் கூறி பிரசித்தப்படுத்தினார்கள்.

அப்படியே ஜனங்கள் வெளியே போய் அவைகளை கொண்டுவந்து அவரவர் தங்கள் வீடுகள் மேலும் தங்கள் முற்றங்களிலும் தேவனுடைய ஆலயப் பிரகாரங்களிலும் தண்ணீர் வாசல் வீதியிலும் எப்பிராயீம் வாசல் வீதியிலும் தங்களுக்குக் கூடாரங்களைப் போட்டார்கள்.

இந்தப் பிரகாரமாகச் சிறையிருப்பி- ருந்து திரும்பி வந்தவர்களின் சபையார் எல்லோரும் கூடாரங்களைப் போட்டு, கூடாரங்களில் குடியிருந்தார்கள். இப்படியே நூனின் குமாரனாகிய யோசுவாவின் நாட்கள் முதல் அந்நாள் மட்டும் இஸ்ரவேல் புத்திரர் செய்யாதிருந்து இப்பொழுது செய்தபடியால் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. முதலாம் நாள் தொடங்கிக் கடைசிநாள் மட்டும் தினம் தினம் தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகம் வாசிக்கப்பட்டது. ஏழு நாள் பண்டிகையை ஆசரித்தார்கள். எட்டாம் நாளோவெனில், முறைமையின்படியே விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருந்தது. (நெகே 8:14-18)

5. நெகேமியாவின் நாட்களில் அறிவும் புத்தியும் உள்ளவர்களெல்லாரும் ஆணையிட்டு பிரமாணம் பண்ணிக் கொண்டது என்ன?

i. தேவனுடைய நியாயப்பிரமாணத்தையும் கர்த்தருடைய கற்பனைகளையும் சகல நீதி நியாயங்களையும் கட்டளைகளையும் கைக் கொள்ளுவோம் என்றும்,

ii. தங்கள் குமாரத்திகளை தேசத்தின் ஜனங்களுக்கு கொடாமலும் தங்கள் குமாரருக்கு அவர்கள் குமாரத்திகளை கொள்ளாமல் இருப்போம் என்றும்,

iii. சரக்குகளையும் தானியதவசத்தையும் ஓய்வு நாளிலும் பரிசுத்த நாளிலும் வாங்க மாட்டோம் என்றும்

iv. ஏழாம் வருஷத்தை விடுதலை வருஷமாக்கிச் சகல கடன்களையும் விட்டு விடுவோம் என்றும் நெகேமியாவின் நாட்களில் அறிவும், புத்தியும் உள்ளவர்களெல்லாம் ஆணையிட்டு பிரமாணம் பண்ணிக் கொண்டார்கள். (நெகே 10:28-31)

6. தொபியாவின் பொருட்கள் வெளியே எறியப்பட்டு தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டதைவிவரி?

தேனுடைய ஆலயத்தின் அறைகளை விசாரிக்க வைக்கப்பட்ட ஆசாரியனாகிய எ- யாசிப் தொபியாவோடே சம்பந்தங்கலந்தவனாயிருந்து, முற்காலத்தில், காணிக்கைகளும், சாம்பிராணியும், பணிமுட்டுகளும், லேவியருக்கும் பாடகருக்கும் காவலருக்கும் கட்டளை பண்ணப்பட்ட தானியம், திராட்சரசம், எண்ணெய் என்பவைகளிலே தசம்பாகமும், ஆசாரியரை சேருகிறபடைப்பான காணிக்கைகளும் வைக்கப்பட்டிருந்த இடத்தில், ஒரு பெரிய அறையை தொபியாவுக்காக ஆயத்தம் பண்ணியிருந்தான். இதெல்லாம் நடக்கும் போது நெகேமியா எருசலேமில் இல்லை. பாபிலோன் ராஜாவாகிய அர்தசஷ்டாவின் முப்பத்திரண்டாம் வருஷத்திலே அவன் ராஜாவினிடத்திலே போய் சில நாளுக்குப் பின்பு திரும்ப ராஜாவினிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு எருசலேமுக்கு வந்தான்.

அப்பொழுது ஆசாரியனாகிய எ- யாசிப் தொபியாவுக்கு தேவனுடைய ஆலயத்துப் பிரகாரங்களில் ஒரு அறையை ஆயத்தம் பண்ணினதினால் செய்த பொல்லாப்பை நெகேமியா அறிந்து கொண்டான். அதினால் அவன் மிகவும்மனமடிவாகி, தொபியாவின் வீட்டுத் தட்டுமுட்டுகளையெல்லாம் அந்த அறையி- ருந்து வெளியே எறிந்துவிட்டான். பிறகு நெகேமியா தேவனுடைய ஆலயத்தின் அறைவீடுகளை சுத்திகரிக்கச் சொல்- , தேவனுடைய ஆலயப்பணிமுட்டுகளையும் சாம்பிராணியையும் திரும்ப அங்கே கொண்டு வந்து வைக்கச் சொன்னான். (நெகே 13:4-9)

7. நெகேமியா ஓய்வு நாளை எவ்வாறு பரிசுத்தமாக்கினான்?

i. ஓய்வு நாளை பரிசுத்தக் குலைச்சலாக்கும்படி யூதர்களில் சிலர் ஆலைகள் மிதிக்கிறதையும் தானியப் பொதிகளைக் கழுதைகள் மேல் ஏற்றிக்கொண்டு வருகிறதையும் நெகேமியா கண்டு அதை தடை செய்தான்.

ii. தேசத்தின் ஜனங்கள் ஓய்வு நாளை பரிசுத்தக் குலைச்சலாக்காதபடிக்கு, அந்நாளில் யாதொரு சரக்குகளையும் தானிய தவசத்தையும் வாங்கக் கூடாது என்று கட்டளையிட்டான்.

iii. ஓய்வு நாளை பரிசுத்தக்குலைச்சலாக்கும் விதமாக வர்த்தகர்களும் சரக்குகளை விற்கிறவர்களும் அந்நாளில் யாதொரு பொருளையும் விற்காதபடிக்கு ஓய்வு நாளுக்கு முன்னே எருசலேமின் பட்டணவாச- ல் மாலை மயங்கும் போது, கதவுகளைப் பூட்டவும், ஓய்வு நாள் முடியுமட்டும் அவைகளைத் திறவாதிருக்கவும் வேண்டுமென்று கட்டளையிட்டு, ஓய்வு நாளிலே ஒரு சுமையும் உள்ளே வராதபடிக்கு வாசலண்டையிலே நெகேமியா தன் வேலைக்காரரில் சிலரை நிறுத்தினான்.

iv. அதினால் சில வர்த்தகரும் சரக்குகளை விற்கிறவர்களும், எருசலேமுக்குப் புறம்பே இராத்தங்கினார்கள். நெகேமியா அவர்களையும் திடசாட்சியாய்க்கடிந்து கொண்டு 'நீங்கள் அலங்கத்தண்டையிலே இராத்தங்குகிறது என்ன? நீங்கள் மறுபடியும் இப்படிச் செய்தால் உங்கள் மேல் கைபோடுவேன்' என்று அவர்களை எச்சரித்தான். இவ்வாறாக நெகேமியா ஓய்வு நாளை பரிசுத்தமாக்கினான். (நெகே 13:15-21)

8. மறுஜாதியான ஸ்திரீகளை விவாகம் பண்ணின யூதர்களை நெகேமியா எவ்வாறு கண்டு பிடித்து கடிந்து கொண்டான்? அதினால் உண்டாகும் தீமையைக் குறித்து அவன் ஜனங்களிடம் எச்சரித்துக் கூறியது என்ன?

அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதிகளான ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்ட யூதர்களின் பிள்ளைகள் அந்தந்த ஜாதிகளின் பாஷையைத்தவிர, யூத பாஷையைத் திட்டமாய்ப் பேச அறியாதிருந்தார்கள். இதை நெகேமியா கண்டு அந்த யூதர்களை கடிந்து கொண்டு, அவர்கள் மேல் வரும் சாபத்தைக்கூறி, அவர்களில் சிலரை அடித்து, மயிரைப்பிய்த்து நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளில் ஒருவரையும் உங்கள் குமாரருக்காகிலும், உங்களுக்காகிலும் கொள்ளாமலும் இருக்க வேண்டுமென்று அவர்களை தேவன்மேல் ஆணையிடப்பண்ணினான்.

நெகேமியா ஜனங்களை நோக்கி, மறுஜாதியான ஸ்திரீகள் உங்களைப் பாவஞ்செய்யப் பண்ணுவார்கள். மேலும் தேவனுக்கு துரோகிகளாகி பெரிய பொல்லாப்பை செய்யப்பண்ணுவார்கள். உதாரணமாக இஸ்ரவே- ன் ராஜாவாகிய சாலேமோன் தேவனால் சிநேகிக்கப் பட்டவனாயிருந்தும் மறுஜாதியான ஸ்திரீகள் பாவஞ்செய்யப் பண்ணினார்கள் ஆகையால் மறுஜாதியான ஸ்திரீகளை உங்களை விட்டு நீக்கி விடுங்கள் என்று அதினால் உண்டாகும் தீமையைக் குறித்து ஜனங்களிடம் எச்சரித்துக் கூறினான். (நெகே 13:23-27)

VI. ***<u>விரிவான விடையளி</u>*** **:** (10 Marks)

1. நெகேமியாவின் சீர்திருத்தங்களை வசன ஆதாரத்துடன் எழுது,

(அல்லது)

நெகேமியாவின் சீர்த்திருத்தங்களில் எவையேனும் பத்தினை வசன ஆதாரத்துடன் எழுது,

i. நெகேமியா இடிந்துபோன எருசலேமின் அலங்கத்தையும் அதின் வாசல்களையும்கட்டினான். (நெகேமியா அதி 3)

ii. அவன் சகோதரருக்குள் வட்டி வாங்கினதை நிறுத்தினான்.(நெகேமியா 5:1-13)

iii. அவன் வம்ச அட்டவணையைப் பார்த்து, தங்கள் பூர்வோத்தரத்தை நிரூபிக்க முடியாத ஆசாரியர்களை ஆசாரிய ஊழியத்தி- ருந்து நீக்கினான். (நெகேமியா 7:5,61,63-65)

iv. அவன் இஸ்ரவேலர் வெகுகாலமாக ஆசரிக்காம- ருந்த கூடாரப்பண்டிகையைப் புதுப்பித்து ஆசரிக்கும்படி செய்தான். (நெகேமியா 8:14-18)

v. விவாக விஷயத்தில் சீர்த்திருத்தம் செய்தான் - புறஜாதியாரோடு கலப்பு விவாகங்கள் செய்வதற்கு அவன் முடிவு உண்டாக்கினான். (நெகேமியா 10:28-30, 13:23-30)

vi. அவன் ஓய்வு நாள் ஆசரிப்பைப் புதுப்பித்தான். (நெகேமியா 10:31, 13:15-22)

vii. ஏழாம் வருஷத்தில் நிலத்தைப் பண்படுத்தாமலும், விதைக்காமலும், பழங்களைச் சேர்க்காமலும் அதை விடுதலை வருஷமாக்கி, சகல கடன்களையும் விட்டுவிடும் வழக்கத்தை அவன் புதுப்பித்தான்.(நெகேமியா10:31, யாத்23:10,11, உபா 15:1-18)(லேவி 25 : 2-5)

viii. தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்காக வருடந்தோறும் சேக்க- ன் அளவில் மூன்றில் ஒரு பங்கைக் கொடுப்போம் என்கிற கடனைத் தங்கள்மேல் ஏற்றுக் கொள்ளும்படி செய்தான். (நெகேமியா 10:32,33)

ix. விறகு காணிக்கையைப் புதுப்பித்தான். (நெகேமியா 10:34; 13:31)

x. முதற்பலன் காணிக்கையைப் புதுப்பித்தான். (நெகேமியா 10:35-37)

xi. லேவியருக்குக் கொடுக்க வேண்டிய தசமபாகமும், லேவியர் ஆசாரியர்க்கும் கொடுக்க வேண்டிய தசம பாகமும் புதுப்பிக்கப்பட்டது. (நெகேமியா 10:37,38)

xii. இஸ்ரவேல் புத்திரரும் லேவி புத்திரரும் தேவனுடைய ஆலயத்தின் பராமரிப்புக்கான தானியம், திராட்சரசம் எண்ணெய் முத- ய பொருட்களைக் கொடுப்பதைக் குறித்து சீர்திருத்தம் செய்தான். (நெகேமியா 10:39)

xiii. எருசலேமிலும் இதர பட்டணங்களிலும் குடியிருக்க வேண்டியவர்களைப் பற்றி சீர்திருத்தம் செய்தான். (நெகேமியா 11:1-3)

xiv. ஆசாரியர், லேவியர் ஆகியோருக்கு நிலங்களி- ருந்து வரவேண்டிய பங்குகளைப்பற்றி சீர்திருத்தம் செய்தான். (நெகேமியா 12:44,47;13:10-13)

xv. தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டது - தொபியாவின் பொருட்கள் வெளியே எறியப்பட்டன. (நெகே 13:14-19)

VII. <u>போதனை</u> **:**

சபையைப் பாதுகாக்கும் உபதேசங்கள் நஷ்டப்பட்டு, சபை பின்மாற்றம் அடைந்த நிலவரத்தி- ருக்கும்போது, பாவத்தை எதிர்த்து உபதேசங்களைப் போதிக்கிற, நெகேமியாவின் ஆவியையுடைய தேவ ஊழியரோடு நாம் ஒத்துழைக்க வேண்டும்.

****

வகுப்பு 8

பாடம்-3

வஸ்தியும் எஸ்தரும்

I. <u>*மனப்பாட வசனம்:*</u> (2 Marks)

<u>*நீதிமொழி 31:30*</u>

சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.

II. <u>*சந்தர்ப்பம் கூறு (யார், யாரிடம், எப்போது கூறியது)*</u> : (2 ½ Marks)

1. a. "மிகுந்த அசட்டையும் எரிச்சலும் விளையும்," (எஸ்தர் 1:18)

b. "அவளுடைய ராஜ மேன்மையை அவளைப் பார்க்கிலும் உத்தமியாகிய மற்றொரு ஸ்திரீக்கு ராஜா கொடுப்பாராக, (எஸ்தர் 1:19)

யார் : மெமுகான்

யாரிடம் : அகாஸ்வேரு ராஜாவிடம்

எப்போது : மெமுகான் அகாஸ்வேரு ராஜாவிடம், வஸ்தி கீழ்ப்படியாமற்போன படியினால் ராஜாவுக்கு மாத்திரமல்ல ராஜாவின் சகல நாடுகளிலுள்ள பிரபுக்களுக்கும், சகல ஜனங்களுக்கும் அநியாயம் செய்தாள். இந்த செய்தி பிரசித்தமானால் எல்லா ஸ்திரீகளும் தங்கள் புருஷரை தங்கள் பார்வையில் அற்பமாய் எண்ணுவார்கள். மேதியா, பெர்சியாவிலுள்ள பிரபுக்களின் ஸ்திரீகளும் அப்படியே செய்வார்கள். தேசத்தில் மிகுந்த அசட்டையும் எரிச்சலும் விளையும். ஆகையால் ராஜாவுக்கு சம்மதியாயிருந்தால், வஸ்தி இனி ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு முன்பாக வரக் கூடாது என்றும், அவளுடைய ராஜ மேன்மையை அவளைப் பார்க்கிலும் உத்தமியாகிய மற்றொரு ஸ்திரீக்கு ராஜா கொடுப்பாராக என்றும் கூறினான்.

III. <u>*ஓரிரு வார்த்தைகளில் விடையளி*</u> : (2 Marks)

1. அகாஸ்வேரு ராஜா எத்தனை நாடுகளை அரசாண்டான்?
நூற்றிருபத்தேழு நாடுகளை அகாஸ்வேரு ராஜா அரசாண்டான். (எஸ்தர் 1:1)

2. அகாஸ்வேரு தன் ராஜ்யத்தின் மகிமையின் ஐசுவரியத்தை எத்தனை நாளளவும் விளங்கப் பண்ணிக் கொண்டிருந்தான்?
180 நாளளவும் (*எஸ்தர்* 1:4)

3. ராஜஸ்திரீயாகிய வஸ்தி யாருக்கு விருந்து கொடுத்தாள்?
ஸ்திரீகளுக்கு விருந்து கொடுத்தாள். (எஸ்தர் 1:9)

4. வஸ்திக்கு தண்டனைகொடுக்க ராஜாவுக்கு ஆலோசனை சொன்ன பிரபு யார்?
மெமுகான் (எஸ்தர் 1:16)

5. அகாஸ்வேரு ராஜாவிடம் கொண்டு வருவதற்கு முன்னால் கன்னிப்பெண்கள் யார் வசமாய் ஒப்புவிக்கப்பட்டார்கள்?
ராஜாவின் பிரதானியாகிய யேகாய் வசம் ஒப்புவிக்கப்பட்டார்கள். (எஸ்தர் 2:3)

6. மொர்தெகாய் எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவன்? யாருடைய குமாரன்?
பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவன். யாவீரின் குமாரன். (எஸ்தர் 2:5)

7. எஸ்தர் ராஜாவின் அரமனைக்கு கொண்டு போகப்பட்டபோது மொர்தெகாயின் வார்த்தையின்படி எதை ஒருவருக்கும் தெரிவிக்காமல் இருந்தாள்?
எஸ்தர், மொர்தெகாய் தனக்கு கற்பித்திருந்த தன் குலத்தையும், தன் பூர்வோத்தரத்தையும் அறிவிக்காதிருந்தாள். (எஸ்தர் 2:10)

8. அகாஸ்வேரு ராஜாவின் அபிமான ஸ்திரீகளை காவல் பண்ணுகிற பிரதானி யார்?
சாஸ்காஸ் (எஸ்தர் 2:14)

9. அகாஸ்வேரு ராஜாவின் பிரதானியாகிய யேகாயின் கண்களிலே தயை கிடைக்கப்பெற்றவள் யார்? அவள் தகப்பன் பெயர் என்ன?
எஸ்தர், அபியாயேல். (எஸ்தர் 1:15)

10. எஸ்தருடைய மறுபெயர் என்ன?
அத்சாள் (எஸ்தர் 2:7)

11. எஸ்தர் அகாஸ்வேரு ராஜாவின் அரமனைக்கு எப்பொழுது கொண்டு போகப்பட்டாள்?
அகாஸ்வேரு ராஜா அரசாளுகிற ஏழாம் வருஷம் தேபேத் மாதமாகிய பத்தாம் மாதம். (எஸ்தர்2:16)

12. எஸ்தர் யாருக்கு பதிலாக தெரிந்து கொள்ளப்பட்டாள்?
வஸ்திக்கு பதிலாக தெரிந்து கொள்ளப்பட்டாள். (எஸ்தர் 2:17)

13. ராஜாவாகிய அகாஸ்வேரு மீது கைபோட வகைதேடினவர்கள் யார் யார்?
பிரதானிகளாகிய பிக்தான், தேரேசு. (எஸ்தர் 2:21)

14. எஸ்தரும் மொர்தெகாயும் யார் மூலம் ஒருவருக்கொருவர் செய்தி சொல்- அனுப்பினார்கள்?
பிரதானியாகிய ஆத்தாகு மூலம் செய்தி அனுப்பினார்கள். (எஸ்தர் 4:5)

iV. ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி*** **:**

1. அகாஸ்வேரு ராஜா எந்த தேசம் முதல் எந்த தேசம் வரையுள்ள எத்தனை நாடுகளை அரசாண்டான்?
இந்து தேசம் முதல் எத்தியோப்பியா தேசம் வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளை அகாஸ்வேரு ராஜா அரசாண்டான். (எஸ்தர் 1:1)

2. ராஜாவாகிய அகாஸ்வேரு எப்போது விருந்து பண்ணினான்? அந்த விருந்துக்கு அழைக்கப்பட்டு வந்திருந்தவர்கள் யார்?
ராஜாவாகிய அகாஸ்வேரு தன் ராஜ்யபாரத்தின் மூன்றாம் வருஷத்திலே தன்னுடைய பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும் விருந்து பண்ணினான். அப்பொழுது பெர்சியா மேதியா தேசங்களிலுள்ள மகத்தானவர்களும், நாடுகளின் அதிபதிகளும், பிரபுக்களும் அவன் சமூகத்தில் வந்திருந்தார்கள். (எஸ்தர் 1:2,3)

3. அகாஸ்வேரு ராஜா தன் பிரதாபத்தை விளங்கச் செய்தபின், சமஸ்த ஜனங்களுக்கும் எங்கு எத்தனை நாள் விருந்து செய்தான்?
ராஜ அரண்மனையைச் சேர்ந்த சிங்கார தோட்டத்திலுள்ள மண்டபத்தில் ஏழுநாட்கள் விருந்து செய்தான். (எஸ்தர் 1:5)

4. அகாஸ்வேரு ராஜா கோபம் கொள்ளக் காரணம் என்ன? (அல்லது) ராஜா வஸ்தியை ராஜமேன்மையி- ருந்து தள்ளக்காரணம் என்ன?
ராஜா பிரதாணிகள் மூலமாய் சொல்- யனுப்பிய கட்டளைக்கு, ராஜஸ்திரீயாகிய வஸ்தி கீழ்ப்படியாததால் தன்னுடைய ராஜமேன்மையை இழந்து போனாள். (எஸ்தர் 1:12)

5. அகாஸ்வேரு ராஜாவின் சமூகத்தில் சேவிக்கிற பிரதானிகள் எத்தனை பேர்? அவர்கள் யார்?
அகாஸ்வேரு ராஜாவின் சமூகத்தில் சேவிக்கிற பிரதாணிகள் ஏழு பேர்.
a. மெகுமான் b. பிஸ்தா c. அற்போனா d. பிக்தா e. அபக்தா f. சேதார் g. கர்காஸ் என்பவர்கள் ஆவர். (எஸ்தர் 1:10-12)

6. அகாஸ்வேரு ராஜாவின் சமூகத்தை தரிசிக்கிறவர்களாயிருந்த பெர்சியா, மேதியருடைய பிரபுக்கள் யார்?
அகாஸ்வேரு ராஜாவின் சமூகத்தை தரிசிக்கிறவர்களாயிருந்த பெர்சியா, மேதியருடைய பிரபுக்கள் ஏழு பேர்.
a. கர்ஷேனா b. சேதார் c. அத்மாதா d. தர்ஷீஸ் e. மேரேஸ் f. மர்சேனா g. மெமுகான். (எஸ்தர் 1:13)

7. மொர்தெகாயின் தகப்பன் யார்? மொர்தெகாய் எவ்வாறு பாபிலோன் தேசத்திற்கு கொண்டு போகப்பட்டான்?
பென்யமீனியனாகிய கீசின் குமாரன் சிமேயினுடைய மகனாகிய யாவீர். இவன் ஒரு யூதன். பாபிலோன் ராஜாவாகிய நெபுகாத்நேச்சார் யூதாவின் ராஜாவாகிய எகொனியாவைப் பிடித்துக் கொண்டு போகிறபோது, அவனோடேகூடஎருசலேமி- ருந்து பாபிலோனுக்கு பிடித்துக்கொண்டு போகப்பட்டவர்களில் மொர்தெகாயும் ஒருவனாயிருந்தான். (எஸ்தர் 2:5,6)

8. யேகாவின் வசம் ஒப்புவிக்கப்பட்ட கன்னிப்பெண்கள் அகாஸ்வேரு ராஜாவிடம் பிரவேசிக்கும் முன்பு எவ்விதம் எவ்வளவு நாட்கள் சுத்திகரிக்கப்பட்டு ஜோடிக்கப்பட்டனர்?

ஒவ்வொரு பெண்ணும் ஆறுமாதம் வெள்ளைப் போளத்தைலத்தினாலும், ஆறுமாதம் சுகந்தவர்க்கங்களினாலும், ஸ்திரீகளுக்குரிய மற்ற சுத்திகரிப்புகளினாலும் சுத்திகரிக்கப்பட்டு ஜோடிக்கப்பட்டனர். இவ்விதமாய் ஸ்திரீகளின் முறைப்படி பன்னிரெண்டு மாதமாகச் சுத்திகரிக்கப்பட்டு தீர்ந்தபின்பு, அவர்கள் முறைப்படி ராஜாவினிடத்தில் பிரவேசிப்பார்கள். (எஸ்தர் 2:12)

9. எஸ்தர் மொர்தெகாய்க்கு எவ்வாறு கீழ்ப்படிந்திருந்தாள்?

எஸ்தர் மொர்தெகாய் தனக்குக் கற்பித்திருந்தபடி தன் பூர்வோத்தரத்தை ஒருவருக்கும் தெரிவிக்காதிருந்தாள். மொர்தெகாய் இடத்திலே வளரும்போது அவன் சொற்கேட்டு நடந்ததுபோல இப்பொழுதும் அவன் சொற்கேட்டுநடந்து வந்தாள். (எஸ்தர் 2:20)

V. <u>சுருக்கமான விடையளி</u> : (4 Marks)

1. வஸ்தியின் கீழ்ப்படியாமையினால் உண்டாகப்போகும் தீமையான விளைவுகளைப்பற்றியும் அதற்கு ராஜாவாகிய அகாஸ்வேரு என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் மெமுகான் ராஜாவிடம் கூறியது என்ன?

அகாஸ்வேரு ராஜா தான் விருந்து செய்து முடிக்கிற ஏழாம் நாளிலே, மகாரூபவதியாயிருந்த வஸ்தியின் சௌந்தரியத்தை ஜனங்களுக்கும் பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படி அவளை அழைத்து வரச்சொன்னபோது, அவள் வரமாட்டேன் என்றாள். அப்பொழுது ராஜா கடும்கோபம் அடைந்து தேசச்சட்டத்தின்படி அவளுக்குச் செய்யவேண்டியது என்ன என்று கேட்டான்.

அப்பொழுது மெமுகான் வஸ்தி ராஜாவுக்கு கீழ்ப்படியவில்லை என்ற செய்தி எல்லா ஸ்திரீகளுக்கும் பிரசித்தமானால் அவர்கள் தங்கள் புருஷரைத் தங்கள் பார்வையில் அற்பமாய் எண்ணுவார்கள். அதைக்கேள்விப்படுகிற பெர்சியாவிலும் மேதியாவிலுமுள்ள பிரபுக்களின் ஸ்திரீகளும் அப்படியே சொல்லுவார்கள். மிகுந்த அசட்டையும் எரிச்சலும் விளையும். ஆகையால் ராஜாக்குச் சம்மதியாயிருந்தால், வஸ்தி இனி ராஜாவாகிய அகாஸ்வேருக்கு முன்பாக வரக்கூடாது. அவளுடைய ராஜமேன்மையை அவளைப் பார்க்கிலும் உத்தமியாகிய மற்றொரு ஸ்திரீக்கு ராஜா கொடுப்பாராக என்று கூறினான். மேலும் இந்த ராஜக்கட்டளை பெர்சியாவுக்கும் மேதியாவுக்கும் உரிய தேசச்சட்டத்திலும் எழுதப்படவேண்டும். அப்பொழுது, இப்படியாக ராஜா தீர்த்த காரியத்தை கேட்கிற எல்லா ஸ்திரீகளும் தங்கள் புருஷரைக் கனம்பண்ணுவார்கள் என்றான். (எஸ்தர் 1:10-20)

2. எஸ்தர் எப்போது பட்டத்து ஸ்திரீயாக்கப்பட்டாள்?

ராஜஸ்திரீயாகிய வஸ்தி அகாஸ்வேரு ராஜாவுக்கு கீழ்ப்படியாமைக் காட்டினதினால் அவளுடைய ஸ்தானத்தில் இருந்து அவள் நீக்கப்பட்டு, அவளுக்கு பதிலாக ராஜாவின் கண்களுக்கு பிரியமான கன்னி, பட்டத்து ஸ்திரீயாக வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த ராஜாவின் கட்டளையும் தீர்மானமும் பிரசித்தமாகி, அநேகம் பெண்கள் சூசான் அரமனையில் கூட்டப்பட்டார்கள். எஸ்தரும் ராஜாவின் அரமனைக்கு கொண்டு போகப்பட்டாள். அவளும் மற்றப்பெண்களைப் போல ஆறுமாதம் வெள்ளைப் போளத்தைலத்தினாலும், ஆறுமாதம் சுகந்தவர்க்கங்களினாலும் ஸ்திரீகளுக்குரிய மற்றச் சுத்திகரிப்புகளினாலும் சுத்திகரிக்கப்பட்டு ஜோடிக்கப்பட்டாள். இவ்விதமாய் ஸ்திரீகளின் முறைமைப்படி பன்னிரெண்டு மாதமாகச் சுத்திகரிக்கப்பட்டு தீர்ந்தபின்பு, ராஜாவினிடத்தில் அழைத்துக்கொண்டு போகப்பட்டாள். அப்பொழுது ராஜா சகல ஸ்திரீகளைப் பார்க்கிலும் எஸ்தர் மேல் அன்பு வைத்தான்.

சகல கன்னிகளைப் பார்க்கிலும் அவளுக்கு அவன் சமூகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது. ஆகையால் அவன் ராஜகிரீடத்தை அவள் சிரசின் மேல் வைத்து அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரீயாக்கினான். (எஸ்தர் 2:4-17)

3. எஸ்தரின் குணநலன்களை எழுது?

i. எஸ்தர் மொர்தெகாயுடன் வளரும் போது அவனுக்கு கீழ்ப்படிந்து நடந்தாள். அதுபோலவே அவளுக்கு ராஜமேன்மை கிடைத்தபோதும் அவனுக்கு கீழ்ப்படிந்து நடந்து வந்தாள். (எஸ்தர் 2:20)

ii. எஸ்தர் கன்னிமாடத்தில் யேகாயின் வசத்தில் இருந்தபோதும் யேகாய் தனக்கு நியமித்த காரியமேயல்லாமல் வேறொன்றையும் கேட்கவில்லை. (எஸ்தர் 2:15)

iii. எஸ்தர் தன் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை பார்க்ககூடாதவளாய் தன் குலத்துக்கு வரும் அழிவை சகிக்க கூடாதவளாயிருந்தாள். எப்படியெனில் யூதரின் சத்துருவாகிய ஆமான் அகாஸ்வேரு ராஜாவின் அனுமதியுடன் சகல யூதரையும் அழிக்கத் திட்டமிட்டபோது எஸ்தர் தன் தாதிமாருடன் சேர்ந்து மூன்று நாள் உபவாசித்து ஜெபித்து, நான் செத்தாலும் சாகிறேன் என்று தன் ஜீவனை அருமையாக எண்ணாமல், ராஜா பொற்செங்கோலை நீட்டினாலொழிய ராஜாவினிடத்தில் பிரவேசிக்கக் கூடாது என்ற சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் பிரவேசித்து தன் ஜனங்களுக்காக பரிந்து பேசினாள். இப்படியாக எஸ்தர் தன் ஜனத்துக்காக உபவாசஞ் செய்தாள். பரிந்து பேசினாள். நன்மையை தேடினாள். ஜீவனைக் கொடுக்க ஆயத்தமாயிருந்தாள். (எஸ்தர் 4:16)

VII. ***விரிவான விடையளி :*** (10 Marks)

1. வஸ்தியின் கீழ்ப்படியாமையினாலும் எஸ்தரின் கீழ்ப்படித- னாலும் ஏற்பட்ட விளைவுகளை வசன ஆதாரத்துடன் விவரி,

   a. வஸ்தியின் கீழ்ப்படியாமையும் அதன் விளைவுகளும்:

   ராஜாவாகிய அகாஸ்வேரு விருந்து செய்த ஏழாம் நாளிலே, மகா ரூபவதியாயிருந்த ராஜஸ்திரீயாகிய வஸ்தியின் சௌந்தர்யத்தை ஜனங்களுக்கும் பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படி ராஜகிரீடம் தரிக்கப்பட்டவளாக, அவளை ராஜாவுக்கு முன்பாக அழைத்து வரவேண்டுமென்று, கட்டளையிட்டான். (எஸ்தர் 1:10)

   ஆனாலும் பிரதானிகள் மூலமாய் ராஜா சொல்- யனுப்பின கட்டளைக்கு ராஜஸ்திரீயாகிய வஸ்தி வரமாட்டேன் என்றாள். அப்பொழுது ராஜா கடுங்கோபமடைந்து தனக்குள்ளே மூர்க்கவெறி கொண்டு தேசச்சட்டத்தின்படி அவளுக்குச் செய்யவேண்டியது என்ன என்று கேட்டான். (எஸ்தர் 1:15) அப்பொழுது மெமுகான் ராஜாவுக்குச் சம்மதியாயிருந்தால், வஸ்தி இனி ராஜாவாகிய அகாஸ்வேருக்கு முன்பாக வரக்கூடாது என்றும் அவளுடைய ராஜமேன்மையை அவளைப்பார்க்கிலும் உத்தமியாகிய மற்றொரு ஸ்திரீக்கு ராஜா கொடுப்பாராக என்றும் கூறினான். ராஜா மெமுகானுடைய வார்த்தையின்படியே செய்தான். இவ்வாறாக, வஸ்தி, தன் கீழ்ப்படியாமையினால் தன்னுடைய ராஜமேன்மையை இழந்தாள். (எஸ்தர் 1:16-20)

   b. எஸ்தரின் கீழ்ப்படிதலும் அதன் விளைவுகளும்:

   தேசத்தி- ருக்கிற ரூபவதிகளான கன்னிப்பெண்கள் கூட்டப்பட்டு, ராஜாவின் கண்களுக்குப் பிரியமான கன்னி வஸ்திக்கு பதிலாக பட்டத்து ஸ்திரீயாக வேண்டும் என்ற ராஜாவின் கட்டளையும் தீர்மானமும் பிரசித்தமாகி, அநேகம் பெண்கள் கூட்டப்பட்டு, சூசான் அரமனையிலுள்ள யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கப்படுகிறபோது, எஸ்தரும் ராஜாவின் அரமனைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டு ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டாள். (எஸ்தர் 2:8)

   எஸ்தர் மொர்தெகாய் தனக்குக் கற்பித்திருந்தபடி தன் பூர்வோத்தரத்தையும் தன் குலத்தையும் தெரிவிக்காதிருந்தாள். எஸ்தர் மொர்தெகாய் இடத்திலே வளரும்போது அவன் சொற்கேட்டு நடந்தது போல இப்பொழுதும் அவன் சொற்கேட்டு நடந்து வந்தாள். (எஸ்தர் 2:20)

   எஸ்தர் ராஜாவினிடத்தில் பிரவேசிக்கிறதற்கு முறைவந்தபோது, அவள் ஸ்திரீகளைக் காவல்பண்ணுகிறராஜாவின் பிரதானியாகிய யேகாய் தனக்கு நியமித்த காரியமேயல்லாமல் வேறொன்றும் கேட்கவில்லை. இப்படியாக கீழ்ப்படிகிற எஸ்தருக்குத் தன்னைக் காண்கிற எல்லார் கண்களிலும் தயை கிடைத்தது. (எஸ்தர் 2:15)

   ராஜாவும் சகல ஸ்திரீகளைப்பார்க்கிலும் எஸ்தர் மேல் அன்பு வைத்தான். சகல கன்னிகைகளைப் பார்க்கிலும் அவளுக்கு அவன் சமூகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது. ஆகையால் அவன் ராஜகிரீடத்தை அவள் சிரசின் மேல் வைத்து அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரீயாக்கினான். (எஸ்தர் 2:16,17)

   அதுமாத்திரமல்ல, யூதரின் சத்துருவாகிய ஆமான் அகாஸ்வேரு ராஜாவின் அனுமதியுடன் சகல யூதரையும் அழிக்கத் திட்டமிட்டபோது மொர்தெகாயின் ஆலோசனைக்கு கீழ்ப்படிந்து எஸ்தர் தன் தாதிமாருடன் சேர்ந்து, மூன்று நாள் உபவாசித்து ஜெபித்து நான் செத்தாலும் சாகிறேன் என்று தன் ஜீவனை அருமையாக எண்ணாமல், ராஜா பொற்செங்கோலை நீட்டினாலொழிய ராஜாவினிடத்தில் பிரவேசிக்கக்கூடாது என்ற சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் பிரவேசித்து தன் ஜனங்களுக்காக பரிந்து பேசினாள். ராஜாவின் கண்களில் தயவு பெற்று தன் ஜனத்திற்கு வரும் அழிவி- ருந்து அவர்களைத் தப்புவித்தாள். (எஸ்தர் 4:16)

   இப்படியாக எஸ்தர் தன் கீழ்ப்படித- னால் யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாவதற்கு காரணமாயிருந்தாள். (எஸ்தர் 4:16)

VIII. ***போதனை:*** (2 Marks)

வஸ்தி, இராஜாவிற்குக் கீழ்ப்படியாமற் போனது அவள் தன் மேலான அந்தஸ்தை இழக்கும்படிச் செய்தது. நாம் நம் இராஜாவாகிய இயேசுவிற்குக் கீழ்ப்படியாதிருந்து அதன் மூலம் அவருடைய ஆசீர்வாதங்களை நஷ்டப்படுத்தக்கூடாது.

❖❖❖❖❖❖❖❖

ஞாயிறுபள்ளி

வகுப்பு 8 பாடம்-4

மொர்தெகாயும் ஆமானும்

I. ***மனப்பாட வசனம்:*** (2 Marks)

கலாத்தியர் 6:7,8 *மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.*
தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.

நீதிமொழிகள் 26 : 27
படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான் ; கல்லைப் புரட்டுகிறவன் மேல் அந்தக்கல் திரும்ப விழும்.

II. ***சந்தர்ப்பம் கூறு (யார், யாரிடம், எப்போது கூறியது) :*** (2 ½ Marks)

1, நீ ராஜாவின் கட்டளையை மீறுகிறது என்ன. (எஸ்தர் 3:3)

யார் : ராஜாவின் அரமனை வாச- - ருக்கிற ராஜாவின் ஊழியக்காரர்
யாரிடம் : மொர்தெகாயிடம்
எப்போது :ராஜாவின் ஊழியக்காரர் எல்லோரும் ஆமானை வணங்கி நமஸ்கரித்து வந்தார்கள். இப்படி செய்ய வேண்டும் என்று ராஜா கட்டளையிட்டிருந்தான். ஆனாலும் மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவும் இல்லை. ஆகையால் ராஜாவின் அரமனை வாச- - ருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் மொர்தெகாயைப் பார்த்து, "நீ ராஜாவின் கட்டளையை மீறுகிறது என்ன," என்று கேட்டார்கள்.

2, i. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்தி- ருந்து எழும்பும். (எஸ்தர் 4:14)
ii. நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, (எஸ்தர் 4:14)

யார் : மொர்தெகாய்
யாரிடம் : ஆத்தாகு மூலமாய் எஸ்தரிடம்
எப்போது : யூதர்களை அழிக்கும்படி சூசானில் பிறந்த கட்டளையின் நகலை ஆத்தாகு மூலமாக மொர்தெகாய் எஸ்தர் வசம் கொடுத்தனுப்பி ராஜாவிடம் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்றான். அப்பொழுது எஸ்தர் யாராவது அழைக்கப் படாமல், ராஜாவினிடத்தில் பிரவேசித்தால் ராஜா செங்கோலை நீட்டினாலொழிய மற்றப்படி சாகவேண்டும் என்கிற ஒரு தவறாத சட்டமுண்டு, என்பதையும், நான் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைக்கப்படவில்லை என்பதையும் சொல்லச்சொன்னாள். அப்பொழுது மொர்தெகாய் எஸ்தரிடம் "நீ ராஜாவின் அரமனையி- ருக்கிறதினால் மற்ற யூதர் தப்பக் கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால் யூதருக்கு சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்தி- ருந்து எழும்பும். அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்" என்று சொல்லச் சொன்னான்.

3, சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன்.(எஸ்தர் 4:16)

யார் : *எஸ்தர் பிரதானியாகிய ஆத்தாகு மூலம்*

யாரிடம் : *மொர்தெகாயிடம்*

எப்போது : *மொர்தெகாய் எஸ்தரிடம், 'நீ இந்தக் காலத்தில் மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்தி- ருந்து எழும்பும். அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும் என்று சொன்னான். மொர்தெகாய் எஸ்தருக்கு சொல்- அனுப்பினான். அப்பொழுது எஸ்தர், "நீர் போய் சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து. மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும், குடியாமலுமிருந்து எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இவ்விதமாகச்சட்டத்தை மீறி, நான் ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; செத்தாலும் சாகிறேன்' என்று சொல்லச் சொன்னாள்.*

4, நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாதபடி பார். (எஸ்தர் 6:10)

யார் : *அகாஸ்வேரு ராஜா*

யாரிடம் : *ஆமானிடம்*

எப்போது : *அகாஸ்வேரு ராஜா கால நடபடி புஸ்தகத்தி- ருந்து பிரதானிகளாகிய பிக்தானாவும் தேரேசும் அவனுக்கு விரோதமாய் செய்த சதியையும், மொர்தெகாய் அதை ராஜாவுக்கு அறிவித்தான் என்பதையும், அதற்காக மொர்தெகாய்க்கு கனமும் மேன்மையும் செய்யப்படவில்லை என்பதையும் அறிந்து மொர்தெகாயை கனம்பண்ண விரும்பினான். அப்பொழுது அங்கு வந்த ஆமானிடம் ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப்பட வேண்டும் என்று கேட்டான். அதற்கு ஆமான் ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு செய்ய வேண்டியதை சொன்ன பொழுது, ராஜா 'நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாதபடி பார்' என்றான்.*

5, i. என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக. (எஸ்7:3)

ii . நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம், (எஸ்7:4)

யார் : *எஸ்தர்*

யாரிடம் : *அகாஸ்வேரு இராஜாவிடம்*

எப்போது : *.எஸ்தர் செய்த இரண்டாம் நாள் விருந்திற்கு ராஜாவும், ஆமானும் வந்திருந்தார்கள், விருந்தில் திராட்சரசம் பரிமாறப்படும் போது ராஜா எஸ்தரை நோக்கி, "எஸ்தர் ராஜாத்தியே உன் வேண்டுதல் என்ன? அது உனக்கு கொடுக்கப்படும். நீ கேட்கிற மன்றாட்டு என்ன, நீ ராஜ்யத்தில் பாதி மட்டும் கேட்டாலும் கிடைக்கும்" என்றான். அப்பொழுது எஸ்தர் பிரதியுத்திரமாக, "ராஜாவே. உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்து, ராஜாவுக்கு சித்தமாயிருந்தால் என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்கு கட்டளை யிடப்படுவதாக; எங்களை அழித்துக் கொன்று நிர்முலமாக்கும்படி நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம்" என்று எஸ்தர் அகாஸ்வேரு ராஜாவிடம் கூறினாள்.*

6, என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்?, (எஸ்தர் 8:6)

யார் : *எஸ்தர்*

யாரிடம் : *அகாஸ்வேரு ராஜாவிடம்*

எப்போது : *ஆமானைத் தூக்கு மரத்தில் தூக்கிப்போட்ட பின்பு, அவன் ஏற்கனவே யூதர்களை அழிக்கும் படியாக அனுப்பியிருந்த ராஜாவின் கட்டளையைத் திரும்பப்பெற எஸ்தர் ராஜசமூகத்தில் பேசி, அவன் பாதங்களில் விழுந்து*

அழுது, ஆமானின் தீவினையையும் அவன் யூதருக்கு விரோதஞ்செய்ய யோசித்த யோசனையையும் பரிகரிக்க ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணினான். அப்பொழுது ராஜா பொற்செங்கோலை எஸ்தருக்கு நீட்டினான்; எஸ்தர் எழுந்திருந்து ராஜ சமூகத்தில் நின்று; ராஜாவின் நாடுகளிலெல்லாம் இருக்கிற யூதரை அழிக்க வேண்டும் என்று ஆமான் எழுதின கட்டளைகள் செல்லாமற்போகப் பண்ணும்படி எழுதி அனுப்பப்படவேண்டும் என்று சொல்- , "என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படி பார்க்கக்கூடும்? என் ஜனத்திற்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்?" என்றாள்.

III. ஓரிரு வார்த்தைகளில் விடையளி : (2 Mark)

1, அகாஸ்வேரு ராஜா சகல பிரபுக்களுக்கும் மேலாக யாரை உயர்த்தி வைத்தான்?
ஆமானை உயர்த்தி வைத்தான். (எஸ்தர்3:1)

2, ஆகாகியனான ஆமான் யாருடைய குமாரன்?
அம்மெதாத்தாவின் குமாரன். (எஸ்தர் 3:1)

3, யூதர்களை எந்த மாதத்தில் எந்த தேதியில் கொன்று நிர்மூலமாக்க வேண்டும் என்று ஆமான் இராஜாவின் பேரால் கட்டளை அனுப்பினான்?
(அல்லது)
ஆமான் சீட்டுப்போட்டு யூதரை அழிக்க நிர்ணயித்த மாதம். தேதி என்ன?
ஆதார் மாதமான 12ம் மாதம் 13ம் தேதி. (எஸ்தர் 3:13)

4, எஸ்தரின் பணிவிடைக்கென்று ராஜாவினால் நியமிக்கப்பட்டிருந்த பிரதானி யார்?
ஆத்தாகு (எஸ்தர் 4:5)

5, மொர்தெகாயை தூக்கி- டும்படி ஆமானுக்கு ஆலோசனை கூறியது யார்?
ஆமானின் மனைவியாகிய சிரேஷீம் அவன் சிநேகிதரும். (எஸ்தர் 5:14)

6, ராஜாவின் நன்மைக்காக பேசின மொர்தெகாய்காக ஆமான் செய்த தூக்குமரத்தைப் பற்றி ராஜாவிடம் அறிவித்தது யார்?
பிரதானியாகிய அற்போனா (எஸ்தர் 7:9)

7, ஆமானின் அரமனைக்கு அதிகாரியாக எஸ்தர் யாரை வைத்தாள்?
மொர்தெகாயை வைத்தாள் (எஸ்தர் 8:2)

8, யூதரை சங்கரிக்க ஆமானின் முன் போடப்பட்ட சீட்டின் பெயர் என்ன?
பூர் (எஸ்தர் 9:24)

V. ஓரிரு வாக்கியங்களில் விடையளி :

1, அகாஸ்வேரு ராஜாவுக்கு விரோதமாக சதி செய்தவர்கள் யார்? அது ராஜாவுக்கு எப்படி தெரியவந்தது? அதனால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனை என்ன?
வாசல் காக்கிற பிரதானி.களாகிய பிக்தானும், தேரேசும் சதி செய்தார்கள்.
மொர்தெகாய் ராஜாத்தியாகிய எஸ்தருக்கு அறிவித்தான். எஸ்தர் மொர்தெகாயின் பேரால் அதை ராஜாவுக்குச் சொன்னாள். அவர்கள் தூக்கி- டப்பட்டனர். (எஸ்தர் 2:21,22)

2, ஆமான் மொர்தெகாயை பகைக்கக் காரணமென்ன?
ராஜாவாகிய அகாஸ்வேரு ஆமானை மேன்மைப் படுத்தி, தன்னிடத்தி- ருக்கிற சகல பிரபுக்களுக்கும் மேலாக அவனை உயர்த்தி, சகல ஊழியக்காரரும் ஆமானை வணங்கி நமஸ்கரிக்க

வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தான். ஆனால் மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை நமஸ்கரிக்கவுமில்லை. ஆமான் மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததை அறிந்த போது மூர்க்கம் நிறைந்தவனாய் மொர்தெகாயைப் பகைத்தான். (எஸ்தர்3:1,2,5)

3, ராஜாவின் சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் பிரவேசித்து யூத ஜனங்களுக்காக பரிந்து பேசும்படி ராஜாத்தியாகிய எஸ்தர் என்ன செய்தாள்?

ராஜாத்தியாகிய எஸ்தர் ராஜாவின் சட்டத்தைமீறி ராஜாவினிடத்தில் பிரவேசித்து யூத ஜனங்களுக்காக பரிந்து பேச வேண்டி இருப்பதால் தனக்காக சூசானி- ருக்கிற யூதரையெல்லாம் மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுதிருந்து உபவாசிக்கும்படி கூறினாள். எஸ்தரும் அவள் தாதிமாரும் உபவாசித்தார்கள். (எஸ்தர் 4:16)

4, எஸ்தர் முதலாம் நாள் செய்திருந்த விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தவர்கள் யார்? அப்பொழுது அவள் வேண்டிக் கொண்டது என்ன?

முதலாம் நாள் விருந்துக்கு அகாஸ்வேரு ராஜாவும் ஆமானும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களை அவள் செய்யப்போகும் இரண்டாம் நாள் விருந்தக்கும் வரும்படி வேண்டிக்கொண்டாள். (எஸ்தர் 5:8)

5, ஆமான் செய்த தூக்கு மரத்தின் உயரம் என்ன? அதை அவன் யாருக்காக செய்தான்?

ஆமான் செய்த தூக்கு மரத்தின் உயரம் 50 முழம். அவன் அதை மொர்தெகாய்க்காக செய்தான். (எஸ்தர்5:14)

6, ஆமானுக்கு எத்தனை குமாரர்கள் இருந்தார்கள்? அவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள்?

ஆமானுக்கு 10 குமாரர்கள் இருந்தார்கள். யூதர்கள் அவர்களை பட்டயத்தால் கொன்று அவர்களுடைய உடல்களை மொர்தெகாய் ஆமானுக்காக செய்த தூக்குமரத்திலே தூக்கிப்போட்டார்கள். (எஸ்தர் 9:5,9,14)

7, பூரீம் பண்டிகை எப்பொழுது கொண்டாடப்பட்டது?

சூசானிலுள்ள யூதர்கள் ஆதார் மாதம் என்கிற 12-வது மாதம் 15ஆம் தேதியிலே பூரீம் பண்டிகையைக் கொண்டாடினார்கள். அலங்கமில்லாத ஊர்களில் குடியிருக்கிற நாட்டுப்புறத்தரான யூதர்கள் ஆதார் மாதத்தின் 14-வது தேதியில் பூரீம் பண்டிகையைக் கொண்டாடினார்கள். (எஸ்தர்9:19)

VI. *சுருக்கமான விடையளி :* (4 Marks)

1, சூசான் நகரம் எப்பொழுது கலங்கியது? சூசான் நகரம் எப்பொழுது மகிழ்ந்தது?

சூசான் நகரம் கலங்கியது:

ஆமானின் சதி ஆலோசனையினால், ஆதார் மாதமான பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதியாகிய ஒரே நாளிலே சிறியோர் பெரியோர் குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களைக் கொள்ளையிடவும், அஞ்சற்காரர் கையிலே அகாஸ்வேரு ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப்பட்டது. அப்பொழுது சூசான் நகரம் கலங்கியது. (எஸ்தர் 3:15)

சூசான் நகரம் மகிழ்ந்தது:

யூதரின் பகைஞர் அவர்களை மேற்கொள்ளலாம் என்று எண்ணின ஆதார் மாதம் என்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதியில் தானே, யூதர் ஒன்றாய்ச் சேர்ந்து, தங்கள் பிராணனைக் காப்பாற்றவும், தங்களை விரோதிக்கும் சத்துருக்களாகிய ஜனத்தாரும் தேசத்தாருமான எல்லாரையும் அவர்கள் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிடவும், அகாஸ்வேரு ராஜா யூதருக்குக்கட்டளையிட்டார் என்ற செய்தி அஞ்சற்காரர் மூலம் ஒவ்வொரு நாட்டிலும் பிரசித்தம் பண்ணப்பட்டது. மொர்தெகாயும் இளநீலமும் வெள்ளையுமான ராஜவஸ்திரமும், பெரிய பொன்முடியும், பட்டும், இரத்தாம்பரமும்

அணிந்தவனாய் ராஜாவினிடத்தி- ருந்து புறப்பட்டான். அப்பொழுது சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்தது. (எஸ்தர் 8:11-15)

2, எஸ்தர் இரண்டாம் நாள் செய்திருந்த விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் யார்? அப்பொழுது அவள் இராஜாவினிடம் வேண்டிக் கொண்டது என்ன?

ராஜாவாகிய அகாஸ்வேரும் ஆமானும் எஸ்தர் செய்த இரண்டாம் நாள் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். (எஸ்தர5:8) அப்பொழுது அவள் ராஜாவை நோக்கி, 'ராஜாவே உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்து, ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால் என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக. எங்களை அழித்துக் கொன்று நிர்மூலமாக்கும்படி நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம்; அடிமைகளாகவும் வெள்ளாட்டிகளாகவும் விற்கப்பட்டுப் போனாலும் நான் மவுனமாயிருப்பேன்; இப்பொழுதோ ராஜாவுக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு அந்தச் சத்துரு உத்தரவாதம் பண்ணமுடியாது என்றாள் (எஸ்தர் 7:3,4)

3, ஆமான் தூக்கி- டப்பட்டபின் மொர்தெகாய் பெற்றுக் கொண்ட கனமும் மேன்மையும் என்ன?

i. அகாஸ்வேரு ராஜா ஆமானின் கையி- ருந்து வாங்கின தன்னுடைய மோதிரத்தை எடுத்து அதை மொர்தெகாய்க்கு கொடுத்தான். (எஸ்தர் 8:2)

ii. எஸ்தர், இராஜா தனக்கு கொடுத்திருந்த ஆமானின் அரமனைக்கு மொர்தெகாயை அதிகாரியாக வைத்தாள். (எஸ்தர் 8:2)

iii. மொர்தெகாய்க்கு இளநீலநூலும் வெள்ளையுமான ராஜவஸ்திரமும், பெரிய பொன்முடியும், பட்டும் இரத்தாம் பரமும் கொடுக்கப்பட்டது. (எஸ்தர் 8:15)

iv. மொர்தெகாய் ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு இரண்டாவதானவனும், யூதருக்குள் பெரியவனுமாயிந்தான். (எஸ்தர் 10:3) அவனுடைய கீர்த்தி எல்லா நாடுகளிலும் பிரசித்தமாயிற்று. (எஸ்தர் 9:4)

4, ஆமான் கொல்லப்பட்ட பின்பு. அவன் யூதர்களை அழிக்கும்படி செய்திருந்த திட்டம் எவ்வாறு முறியடிக்கப்பட்டது?

ஆமான் கொல்லப்பட்ட பின்பு, எஸ்தர் ராஜசமூகத்தில் பிரவேசித்து ஆமானின் தீவினையையும் அவன் யூதருக்கு விரோதஞ்செய்ய யோசித்த யோசனையையும் பரிகரிக்க வேண்டும் என்று அவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினாள். அப்பொழுது ராஜா; உங்களுக்கு இஷ்டமானபடி நீங்கள் ராஜாவின் நாமத்தினால் யூதருக்காக எழுதி, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரைபோடுங்கள்; ராஜாவின் பேரால் எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடப்பட்டதைச் செல்லாமற் போகப் பண்ண ஒருவராலும் கூடாது என்றான். (எஸ்தர் 8:8)

உடனே ராஜாவின் பேரால் கட்டளைகள் எழுதப்பட்டு சகல தேசத்தாருக்கும் அனுப்பப்பட்டது. அதன்படி யூதர் ஒன்றாய்ச் சேர்ந்து தங்கள் சத்துருக்களை அழித்தார்கள். இவ்வாறாக ஆதார் என்கிற பன்னிரண்டாம் மாதம், பதின்மூன்றாந் தேதியிலே யூதரின் பகைஞர் அவர்களை மேற்கொள்ளலாம் என நம்பின அந்த நாளிலேதானே, யூதரானவர்கள் தங்கள் பகைஞரை மேற்கொள்ளும்படிக்கு காரியம் மாறுதலாய் முடிந்தது. இவ்வாறாக ஆமானின் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டது. (எஸ்தர் 9:1)

VII. *விரிவான விடையளி :* (10 Marks)

1, அகாஸ்வேரு ராஜாவின் மேல் கைபோடும்படியாக பிரதானிகளால் செய்யப்பட்ட சதியை ராஜாவுக்கு அறிவித்த மொர்தெகாய் எப்பொழுது எவ்வாறு கனப்படுத்தப்பட்டான் என்பதை விவரி?

ஒரு நாள் இராத்திரியிலே அகாஸ்வேரு ராஜாவுக்கு நித்திரை வரவில்லை. அப்பொழுது காலவர்த்தமானங்கள் எழுதியிருக்கிற நடபடி புஸ்தகத்தி- ருந்து, பிரதானிகளாகிய பிக்தானாவும் தேரேசும் ராஜாவாகிய அகாஸ்வேரு வின்மேல் கைபோடப்பார்த்த செய்தியை மொர்தெகாய் அறிவித்தான் என்று எழுதியிருந்தது வாசிக்கப்பட்டது. அப்பொழுது ராஜா இதற்காக மொர்தெகாய்க்குக் கனமும் மேன்மையும் செய்யப்பட்டதா என்று கேட்டான். அதற்கு ராஜாவைச் சேவிக்கிற ஊழியக்காரர் அவனுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். அப்பொழுது ராஜா தன்னை காணவந்த ஆமானை நோக்கி, ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப் படவேண்டும் என்று கேட்டான். அதற்கு ஆமான், ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு செய்யப்பட வேண்டியது என்னவென்றால், ராஜா உடுத்திக் கொள்ளுகிற ராஜ வஸ்திரமும், ராஜா ஏறுகிற குதிரையும் அவர் சிரசிலே தரிக்கப்படும் ராஜமுடியும் கொண்டுவரப்படவேண்டும். அந்த வஸ்திரமும் குதிரையும் ராஜாவுடைய பிரதான பிரபுக்களில் ஒருவனுடைய கையிலே கொடுக்கப்படவேண்டும் ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனை அலங்கரித்தபின், அவனைக் குதிரையின் மேல் ஏற்றி, நகரவீதியில் உலாவும்படி செய்து, ராஜா கனம் பண்ணவிரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாகக் கூறப்படவேண்டும் என்றான்.

அப்பொழுது ராஜா ஆமானை நோக்கி, சீக்கிரமாய் நீ சொன்னபடி வஸ்திரத்தையும் குதிரையையும் கொண்டு போய், ராஜ அரமனையின் வாச- ல் உட்கார்ந்திருக்கிற யூதனாகிய மொர்தெகாய்க்கு அந்தப் பிரகாரம் செய். நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாதபடி பார் என்றான். அப்படியே, ஆமான் வஸ்திரத்தையும் குதிரையையும் கொண்டு போய், மொர்தெகாயை அலங்கரித்து, அவனைக் குதிரையின் மேல் ஏற்றி, நகரவீதியில் உலாவும்படி செய்து, ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாக கூறினான். இவ்வாறு மொர்தெகாய் கனப்படுத்தப்பட்டான். (எஸ்தர் 6:1-11)

2, யூதர்களை சங்கரிக்க திட்டமிட்ட ஆமான் எவ்வாறு கொல்லப்பட்டான்?

ஆமான் ஆதார் மாதமான பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாம் தேதியாகிய ஒரே நாளிலே சிறியோர் பெரியோர், குழந்தைகள், ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக் கொன்று நீர்மூலமாக்க அகாஸ்வேரு ராஜாவின் பேரால் கட்டளைகளை எழுதி அனுப்பினான். அதை அறிந்த மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறிக்கொண்டு, அகாஸ்வேரும் ராஜாவின் அரண்மனை வாசல் முகப்புமட்டும் வந்து, ஆமானின் திட்டங்களை ஆத்தாகு முலம் எஸ்தருக்கு அறிவித்து, அவள் ராஜாவினிடத்தில் பிரவேசித்து, தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது எஸ்தர் சூசானி- ருக்கிற யூதரை மூன்று நாட்கள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து உபவாசம் பண்ணும்படி கூறிவிட்டு, அவளும் அவளுடைய தாதிமாரும் மூன்றுநாட்கள் உபவாசித்தார்கள். (எஸ்4:16)

பின்பு, எஸ்தர் ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு ராஜாவினிடத்தில் வந்தபோது, ராஜாவின் கண்களில் அவளுக்குத் தயவு கிடைத்தது. அப்பொழுது எஸ்தர் தான் செய்யப் போகும் விருந்துக்கு இராஜாவையும் ஆமானையும் அழைத்தாள். (எஸ் 5:4) முதலாம் நாள் விருந்துக்கு அவர்கள் வந்தபோது, அவள் இன்னும் அவர்களுக்கு செய்யப்போகும் விருந்துக்கு அவர்களை அழைத்தாள். (எஸ் 5:8) அவர்கள் இரண்டாம் நாள் விருந்துக்கு வந்த போது, ராஜா எஸ்தரை நோக்கி, உன் வேண்டுதல் என்ன? இது உனக்குக் கொடுக்கப்படும்; நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும் கிடைக்கும் என்றான். (7:2)

அப்பொழுது எஸ்தர் எங்களை அழித்துக் கொன்று நீர்மூலமாக்கும்படி நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம். அடிமைகளாகவும் வெள்ளாட்டிகளாகவும் விற்கப்பட்டுப் போனாலும் நான் மவுனமாயிருப்பேன்; இப்பொழுதோ ராஜாவுக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு அந்தச் சத்துரு உத்தரவாதம் பண்ணமுடியாது என்றாள். (எஸ்தர் 7:4) அப்பொழுது ராஜா; இப்படிச் செய்யத்

துணிகரங்கொண்டவன் யார்? அவன் எங்கே? என்றான். அதற்கு எஸ்தர் சத்துருவும் பகைஞனுமாகிய அந்த மனிதன் இந்தத் துஷ்ட ஆமான்தான் என்றாள். அப்பொழுது ராஜாவுக்கும் ராஜாத்திக்கும் முன்பாக ஆமான் திகிலடைந்தான். அப்பொழுது அற்போனா என்னும் பிரதானி, இதோ ராஜாவின் நன்மைக்காக பேசின மொர்தெகாய்க்கு ஆமான் செய்வித்த ஐம்பது முழ உயரமான தூக்குமரம் ஆமானின் வீட்டண்டை நாட்டப்பட்டிருக்கிறது என்றான். (எஸ்தர் 7:9) அப்பொழுது ராஜா அதிலே அவனைத் தூக்கிப்போடுங்கள் என்றான். அந்தப்படியே ஆமானை தூக்கிப்போட்டார்கள் ராஜாவின் உக்கிரம் தணிந்தது. (எஸ் 7:10) ஆமானின் வீடு எஸ்தருக்கு கொடுக்கப்பட்டது. ஆமானின் கையி- ருந்து வாங்கிப்போட்ட இராஜாவின் முத்திரை மோதிரம் மொர்தெகாயுக்கு கொடுக்கப்பட்டது. (எஸ்தர் 8:1,2)

VIII. போதனை: (2 Marks)

நாம் உபவாசத்தோடும் ஜெபத்தோடும் கர்த்தரிடம் மன்றாடினால் நம்முடைய எல்லாப் பிரச்சினைகளிலும் அவர் நமக்கு ஜெயம் தருவார். துன்மார்க்கன் தான் வெட்டின குழியில் தானே விழுவான்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஞாயிறுபள்ளி

வகுப்பு 8

பாடம்-6

அக்கினிசாத்ராக். மேஷாக். ஆபேத்நேகோ

(தானியேல் அதிகாரம் 3)

I. *மனப்பாட வசனம்:* (2 Marks)

யூதா 3.4 *பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது. ஏனெனில், நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுத- க்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்; அவர்கள் இந்த ஆக்கினைக் குள்ளாவார்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது.*

II. *சந்தர்ப்பம் கூறு (யார், யாரிடம், எப்போது கூறியது)* : (2 ½ Marks)

1, அவர்கள் ராஜாவாகிய உம்மை மதிக்கவில்லை. (தானியேல் 3:12)

யார் : கல்தேயரில் சிலர்

யாரிடம் : இராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடம்

எப்போது : இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தூரா என்னும் சமபூமியிலே நிறுத்திய பொற்சிலையை சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் யூதரான மனுஷர் பணிந்து கொள்ளாமல் ராஜாவின் கட்டளையை மீறினதினால், கல்தேயரில் சிலர் இராஜசமூகத்தில் வந்து இவ்வாறு குற்றஞ்சாட்டினார்கள்.

2, உங்களை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார். (தானியேல் 3:15)

யார் : நேபுகாத்நேச்சார்

யாரிடம் : சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவிடம்

எப்போது : நேபுகாத் நேச்சார் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை நோக்கி, "நீங்கள் என் தேவனுக்கு ஆராதனை செய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ளாமலும் இருந்தது மெய்தானா? இப்போதும் எக்காளம், நாகசுரம், கிண்ணரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும்போது, தாழவிழுந்து நான் பண்ணிவைத்த சிலையைப் பணிந்து கொள்ள ஆயத்தமாயிருந்தால் நல்லது. பணிந்து கொள்ளாதிருந்தீர்களேயாகில், அந்நேரமே எரிகிற அக்கினி சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்; உங்களை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார்", என்றான்.

3, a. 'இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. (தானி 3:16)

b. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். (தானி 3:17)

c. அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும் ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். (தானி 3:17)

d. விடுவிக்காமற் போனாலும். நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை. நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை. (தானி 3:18)

யார் : சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ

யாரிடம் : நேபுகாத்நேச்சாரிடம்

எப்போது : நேபுகாத்நேச்சார் சாத்ராக் மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை நோக்கி, "நீங்கள் என் தேவனுக்கு ஆராதனை செய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ளாமலும் இருந்தது மெய்தானா? இப்போதும் எக்காளம், நாகசுரம், கிண்ணரம், வீணை, சுரமண்டலம்,தம்புரு முதலான கீதவாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும்போது, தாழவிழுந்து நான் பண்ணி வைத்த சிலையைப் பணிந்து கொள்ள ஆயத்தமாயிருந்தால் நல்லது. பணிந்து கொள்ளாதிருந்தீர்களேயாகில், அந்நேரமே எரிகிற அக்கினி சூளையின் நடுவிலே போடபடுவீர்கள். உங்களை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார்", என்றான். அப்பொழுது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி இவ்வாறாக கூறினார்கள்.

4, நாலாம் ஆளின் சாயல் தேவ புத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது. (தானியேல் 3:25)

யார் : நேபுகாத்நேச்சார்

யாரிடம் : தன் மந்திரிமார்களிடம்

எப்போது : சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ள மறுத்தபடியால் அவர்களை எரிகிற அக்கினிச் சூளையிலே போட்டான். அவர்களை போட்டவுடன் நேபுகாத்நேச்சார் பிரமித்து தீவிரமாய் எழுந்து, தன் மந்திரிமார்களை நோக்கி, மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர்களாக அக்கினியில் போடுவித்தோம். இதோ நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன். அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை. நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான்.

5, இவ்விதமாய் இரட்சிக்கதக்க தேவன் வேறொருவரும் இல்லை. (தானியேல் 3:29)

யார் : நேபுகாத்நேச்சார்

யாரிடம் : தேசாதிபதிகள், அதிகாரிகள், தலைவர்கள், மந்திரிமார்களிடம்

எப்போது : பொற்சிலையை பணிந்து கொள்ளாதபடியால் அக்கினி சூளையில் போடப்பட்ட சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய சரீரங்களின் மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும், அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததைக் கண்ட நேபுகாத்நேச்சார் வசனித்து, "இவர்கள் தங்களுடைய தேவனைத் தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல் அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி தம்முடைய தாசரை விடுவித்தார். ஆகையால் இவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப் போடப்படுவான். அவன் வீடு எருக்களமாக்கப்படும்". இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை என்றான்.

IV. *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Mark)

1, நேபுகாத்நேச்சார் தான் பண்ணுவித்த பொற்சிலையை எங்கே நிறுத்தினான்?

பாபிலோன் மாகாணத்தி- ருக்கிற தூரா என்னும் சமவெளியில் நிறுத்தினான். (தானி 3:1)

2, நேபுகாத்நேச்சார் பண்ணுவித்த பொற்சிலையின் அளவு என்ன?

அறுபது முழ உயரம், ஆறு முழ அகலம். (தானி 3:1)

3, யூதராகிய சாத்ராக். மேஷாக். ஆபேத்நேகோவின் மேல் குற்றஞ்சாட்டியது யார்?

கல்தேயரில் சிலர் (தானி 3:8)

4, நேபுகாத்நேச்சார் சூளையை எத்தனை மடங்கு அதிகமாக சூடாக்கும்படி உத்தரவிட்டான்?

சூளையைச் சாதாரணமாய்ச் சூடாக்குவதைப் பார்க்கிலும் ஏழுமடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி உத்தரவிட்டான். (தானி 3:19)

5, சாத்ராக். மேஷாக். ஆபேத்நேகோவை அக்கினிச் சூளையில் போடும்படி அவர்களைக் கட்டுவதற்கு யாருக்கு கட்டளையிடப்பட்டது?

இராணுவத்தில் பலசா- களாகிய புருஷருக்குக் கட்டளையிடப்பட்டது. (தானி 3:20)

6, அக்கினியின் நடுவிலே உலாவிக்கொண்டிருந்த நாலாம் ஆளின் சாயல் யாருக்கு ஒப்பாயிருந்தது?

தேவ புத்திரனுக்கு ஒப்பாக இருந்தது. (தானி 3:25)

V. *ஓரிரு வாக்கியங்களில் விடையளி :*

1, நேபுகாத்நேச்சார் தான் நிறுத்தின பொற்சிலையின் பிரதிஷ்டைக்கு வரும்படி யாரை அழைத்தான்?

ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தேசாதிபதிகளையும், அதிகாரிகளையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், பொக்கிஷக்காரரையும், நீதிசாஸ்திரிகளையும், விசாரிப்புக்காரரையும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரையும் அழைத்தான். (தானி 3:2)

2, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தான் நிறுத்தின பொற்சிலையின் பிரதிஷ்டைக்கு வரும்படி அழைத்தவர்களுக்கு கொடுத்த கட்டளை என்ன?

ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அவர்களை நோக்கி, "எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீத வாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும் போது, நீங்கள் தாழ விழுந்து, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ளக்கடவீர்கள். எவனாகிலும் தாழ விழுந்து, அதைப் பணிந்துகொள்ளாமற்போனால், அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவான் என்றான். (தானி 3:5,6)

3, கல்தேயரில் சிலர் நேபுகாத்நேச்சாரிடம் சாத்ராக். மேஷாக். ஆபேத்நேகோ பற்றி என்ன குற்றஞ்சாட்டினார்கள்?

ராஜாவாகிய உம்மை யூதரான மனுஷர் மதிக்கவுமில்லை அவர்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும் நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளாமலும் இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள். (தானி 3:12)

4, சாத்ராக். மேஷாக். ஆபேத்நேகா கட்டுண்டவர்களாய் எரிகிற அக்கினி சூளையின் நடுவிலே போடப்பட்டபோது அவர்கள் தரிந்திருந்த வஸ்திரங்கள் யாவை?

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ தங்கள் சால்வைகளோடும் நிசார்களோடும் பாகைகளோடும் மற்ற வஸ்திரங்களோடும் கட்டப்பட்டு எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்பட்டார்கள். (தானி 3:21)

5, சாத்ராக். மேஷாக். ஆபேத்நேகோவை அக்கினியில் தூக்கிக் கொண்டுபோன புருஷருக்கு என்ன சம்பவித்தது? ஏன்?

ராஜாவின் கட்டளை கடுமையாயிருந்தபடியினாலும், சூளை மிகவும் சூடாக்கப்பட்டிருந்த படியினாலும், அக்கினி ஜுவாலையானது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைத் தூக்கிக் கொண்டு போன புருஷரைக் கொன்று போட்டது. (தானி 3:22)

6, கட்டுண்டவர்களாய் எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்பட்டவர்கள் எத்தனை பேர்? அக்கினியின் நடுவிலே விடுதலையாய் உலாவினவர்கள் எத்தனை பேர்?

மூன்று பேர் கட்டுண்டவர்களாக அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்பட்டார்கள். நான்குபேர் அக்கினியின் நடுவிலே விடுதலையாய் உலாவினார்கள். (தானி 3:24)

7, இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஏன் பிரமித்தான்?

இராஜாவாகிய நேபுகாத்நேச்சார், மூன்று யூதரைக் கட்டுண்டவர்களாய் அக்கினியிலே போட்டான். ஆனால் நான்கு பேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் கண்டு பிரமித்தான். (தானி 3:24)

8, ஏழுமடங்கு சூடாக்கப்பட்டிருந்த அக்கினிச் சூளையி- ருந்து வெளியே வந்த மூன்று புருஷர்கள். அக்கினியி- ருந்து வெளியே வந்ததும். எப்படிக் காணப்பட்டார்கள்?

அந்த மூன்று புருஷருடைய சரீரங்களின் மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும் அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் காணப்பட்டார்கள். (தானி 3:27)

VI. *சுருக்கமான விடையளி :* (4 Marks)

1, நேபுகாத்நேச்சார் தான் நிறுத்தின பொற்சிலையை சாத்ராக். மேஷாக். ஆபேத்நேகோ என்பவர்கள் பணிந்து கொள்ளாததை அறிந்தபோது அவர்களை அழைத்து விசாரித்ததையும். அவர்கள் கொடுத்த பதிலையும் எழுது,

நேபுகாத்நேச்சார், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை நோக்கி, "நீங்கள் என் தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளாமலும் இருந்தது மெய்தானா? இப்போதும் கீத வாத்தியங்களின் சத்தத்தை கேட்கும் போது, சிலையை பணிந்து கொள்ளாதிருந்தீர்களேயாகில் அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்; உங்களை என் கைக்குத் தப்புவிக்கிற தேவன் யார்" என்றான்.

அப்பொழுது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி நேபுகாத்நேச்சாரே, இந்த காரியத்தைக்குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார், எரிகிற அக்கினி சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதும் இல்லை. நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்கு தெரிந்திருக்கக்கடவது என்றார்கள். (தானி 3:14-18)

2, சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைக் குறித்து நேபுகாத்நேச்சார் புகழ்ந்து கூறியதையும் அவனால் தீர்மானிக்கப்பட்டவைகளையும் எழுது,

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார். இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை என்று நேபுகாத்நேச்சார் புகழந்து கூறினான்.

மேலும் நேபுகாத்நேச்சார் கீழ்கண்ட தீர்மானங்களைக் கட்டளையாகத் தன் ஜனங்களுக்கு அறிவித்தான்; சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப்போடப்படுவான். அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று அறிவித்தான். (தானி 3:29)

VII. *போதனை:*

அக்கினி போன்ற சோதனைகள் மத்தியில், தேவன் நமக்குத் தந்திருக்கும் வெளிப்படுத்தல்களுக்கு நாம் உண்மையாய் நிற்போமாயின், தேவன் நம்மை அற்புதமாக விடுதலையாக்குவார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மொர்தெகாயும் ஆமானும்

I. *மனப்பாட வசனம்:* (2 Marks)

கலாத்தியர் 6 : 7, 8

மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.

நீதிமொழிகள் 26 : 27

படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான்; கல்லைப்புரட்டுகிறவன் மேல் அந்தக் கல் திரும்ப விழும்.

II. *சந்தர்ப்பம் கூறு (யார், யாரிடம், எப்போது கூறியது)* : (2 ½ Marks)

1. "நீ ராஜாவின் கட்டளையை மீறுகிறது என்ன". (எஸ்தர் 3:3)

யார் : *ராஜாவின் அரமனை வாச- - ருக்கிற ராஜாவின் ஊழியக்காரர்*

யாரிடம் : *மொர்தெகாயிடம்*

எப்போது : *ராஜாவின் ஊழியக்காரர் எல்லோரும் ஆமானை வணங்கி நமஸ்கரித்து வந்தார்கள். இப்படி செய்ய வேண்டும் என்று ராஜா கட்டளையிட்டிருந்தான். ஆனாலும் மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவும் இல்லை. ஆகையால் ராஜாவின் அரமனை வாச- - ருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் மொர்தெகாயைப் பார்த்து, "நீ ராஜாவின் கட்டளையை மீறுகிறது என்ன," என்று கேட்டார்கள்.*

2. i. "நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்தி- ருந்து எழும்பும்". (எஸ்தர் 4:14)

ii "நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே", (எஸ்தர் 4:14)

யார் : *மொர்தெகாய்*

யாரிடம் : *ஆத்தாகு மூலமாய் எஸ்தரிடம்*

எப்போது : *யூதர்களை அழிக்கும்படி சூசானில் பிறந்த கட்டளையின் நகலை ஆத்தாகு மூலமாக மொர்தெகாய் எஸ்தர் வசம் கொடுத்தனுப்பி ராஜாவிடம் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்றான். அப்பொழுது எஸ்தர் யாராவது அழைக்கப் படாமல், ராஜாவினிடத்தில் பிரவேசித்தால் ராஜா செங்கோலை நீட்டினாலொழிய மற்றப்படி சாகவேண்டும் என்கிற ஒரு தவறாத சட்டமுண்டு, என்பதையும், நான் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைக்கப்படவில்லை என்பதையும் சொல்லச்சொன்னாள். அப்பொழுது மொர்தெகாய் எஸ்தரிடம் "நீ ராஜாவின் அரமனையி- ருக்கிறதினால் மற்ற யூதர் தப்பக் கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால் யூதருக்கு சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்தி- ருந்து எழும்பும். அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்" என்று சொல்லச் சொன்னான்.*

3. "சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன்".(எஸ்தர் 4:16)

யார் : *எஸ்தர் பிரதானியாகிய ஆத்தாகு மூலம்*

யாரிடம் : *மொர்தெகாயிடம்*

எப்போது : *மொர்தெகாய், "நீ இந்தக் காலத்தில் மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்தி- ருந்து எழும்பும். அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்," என்று எஸ்தருக்கு சொல்- அனுப்பினான். அப்பொழுது எஸ்தர், "நீர் போய் சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து. மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும், குடியாமலுமிருந்து எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இவ்விதமாகச்சட்டத்தை மீறி, நான் ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; செத்தாலும் சாகிறேன்' என்று சொல்லச் சொன்னாள்.*

4. "நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாதபடி பார்". (எஸ்தர் 6:10)

யார் : *அகாஸ்வேரு ராஜா*

யாரிடம் : *ஆமானிடம்*

எப்போது : *அகாஸ்வேரு ராஜா கால நடபடி புஸ்தகத்தி- ருந்து பிரதானிகளாகிய பிக்தானாவும் தேரேசும் அவனுக்கு விரோதமாய் செய்த சதியையும், மொர்தெகாய் அதை ராஜாவுக்கு அறிவித்தான் என்பதையும், அதற்காக மொர்தெகாய்க்கு கனமும் மேன்மையும் செய்யப்படவில்லை என்பதையும் அறிந்து, மொர்தெகாயை கனம்பண்ண விரும்பினான். அப்பொழுது அங்கு வந்த ஆமானிடம் ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப்பட வேண்டும் என்று கேட்டான். அதற்கு ஆமான் ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு செய்ய வேண்டியதை சொன்ன பொழுது, ராஜா, 'நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாதபடி பார்' என்றான்.*

5. i. என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக. (எஸ்7:3)

   ii . நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம், (எஸ்7:4)

யார் : *எஸ்தர்*

யாரிடம் : *அகாஸ்வேரு இராஜாவிடம்*

எப்போது : *எஸ்தர் செய்த இரண்டாம் நாள் விருந்திற்கு ராஜாவும், ஆமானும் வந்திருந்தார்கள். விருந்தில் திராட்சரசம் பரிமாறப்படும் போது ராஜா எஸ்தரை நோக்கி, "எஸ்தர் ராஜாத்தியே உன் வேண்டுதல் என்ன? அது உனக்கு கொடுக்கப்படும். நீ கேட்கிற மன்றாட்டு என்ன, நீ ராஜ்யத்தில் பாதி மட்டும் கேட்டாலும் கிடைக்கும்" என்றான். அப்பொழுது எஸ்தர் பிரதியுத்திரமாக, "ராஜாவே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்து, ராஜாவுக்கு சித்தமாயிருந்தால் என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்கு கட்டளையிடப்படுவதாக; எங்களை அழித்துக் கொன்று நிர்மூலமாக்கும்படி நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம்" என்று எஸ்தர் அகாஸ்வேரு ராஜாவிடம் கூறினாள்.*

6. "என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்?" (எஸ்தர் 8:6)

யார் : *எஸ்தர்*

யாரிடம் : *அகாஸ்வேரு ராஜாவிடம்*

எப்போது : *ஆமானைத் தூக்கு மரத்தில் தூக்கிப்போட்ட பின்பு, அவன் ஏற்கனவே யூதர்களை அழிக்கும் படியாக அனுப்பியிருந்த ராஜாவின் கட்டளையைத் திரும்பப்பெற எஸ்தர் ராஜசமூகத்தில் பேசி, அவன் பாதங்களில் விழுந்து அழுது, ஆமானின் தீவினையையும் அவன் யூதருக்கு விரோதஞ்செய்ய யோசித்த யோசனையையும் பரிகரிக்க ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணினாள். அப்பொழுது ராஜா பொற்செங்கோலை எஸ்தருக்கு நீட்டினான்; எஸ்தர் எழுந்திருந்து ராஜ சமூகத்தில் நின்று; ராஜாவின் நாடுகளிலெல்லாம் இருக்கிற யூதரை அழிக்க வேண்டும் என்று ஆமான் எழுதின கட்டளைகள் செல்லாமற்போகப் பண்ணும்படி எழுதி அனுப்பப்படவேண்டும் என்று*

சொல்- , "என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படி பார்க்கக்கூடும்? என் ஜனத்திற்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்?" என்றாள்.

III. <u>ஓரிரு வார்த்தைகளில் விடையளி</u> : (2 Mark)

1. அகாஸ்வேரு ராஜா சகல பிரபுக்களுக்கும் மேலாக யாரை உயர்த்தி வைத்தான்?

   ஆமானை உயர்த்தி வைத்தான். (எஸ்தர்3:1)

2. ஆகாகியனான ஆமான் யாருடைய குமாரன்?

   அம்மெதாத்தாவின் குமாரன். (எஸ்தர் 3:1)

3. யூதர்களை எந்த மாதத்தில் எந்த தேதியில் கொன்று நிர்மூலமாக்க வேண்டும் என்று ஆமான் இராஜாவின் பேரால் கட்டளை அனுப்பினான்? (அல்லது) ஆமான் சீட்டுப்போட்டு யூதரை அழிக்க நிர்ணயித்த மாதம், தேதி என்ன?

   ஆதார் மாதமான 12ம் மாதம் 13ம் தேதி. (எஸ்தர் 3:13)

4. எஸ்தரின் பணிவிடைக்கென்று ராஜாவினால் நியமிக்கப்பட்டிருந்த பிரதானி யார்?

   ஆத்தாகு (எஸ்தர் 4:5)

5. மொர்தெகாயை தூக்கி- டும்படி ஆமானுக்கு ஆலோசனை கூறியது யார்?

   ஆமானின் மனைவியாகிய சிரேஷீம், அவன் சிநேகிதரும். (எஸ்தர் 5:14)

6. ராஜாவின் நன்மைக்காக பேசின மொர்தெகாய்காக ஆமான் செய்த தூக்குமரத்தைப் பற்றி ராஜாவிடம் அறிவித்தது யார்?

   பிரதானியாகிய அற்போனா. (எஸ்தர் 7:9)

7. ஆமானின் அரமனைக்கு அதிகாரியாக எஸ்தர் யாரை வைத்தாள்?

   மொர்தெகாயை வைத்தாள். (எஸ்தர் 8:2)

8. யூதரை சங்கரிக்க ஆமானின் முன் போடப்பட்ட சீட்டின் பெயர் என்ன?

   பூர். (எஸ்தர் 9:24)

IV. <u>ஓரிரு வாக்கியங்களில் விடையளி</u> :

1. அகாஸ்வேரு ராஜாவுக்கு விரோதமாக சதி செய்தவர்கள் யார்? அது ராஜாவுக்கு எப்படி தெரியவந்தது? அதனால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனை என்ன?

   i. *வாசல் காக்கிற பிரதானிகளாகிய பிக்தானும், தேரேசும் சதி செய்தார்கள்.*

   ii. *மொர்தெகாய், ராஜாத்தியாகிய எஸ்தருக்கு அறிவித்தான். எஸ்தர் மொர்தெகாயின் பேரால் அதை ராஜாவுக்குச் சொன்னாள்.*

   iii. *அவர்கள் தூக்கி- டப்பட்டனர். (எஸ்தர் 2:21,22)*

2. ஆமான் மொர்தெகாயை பகைக்கக் காரணமென்ன?

   ராஜாவாகிய அகாஸ்வேரு ஆமானை மேன்மைப் படுத்தி, தன்னிடத்தி- ருக்கிற சகல பிரபுக்களுக்கும் மேலாக அவனை உயர்த்தி, சகல ஊழியக்காரரும் ஆமானை வணங்கி நமஸ்கரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தான். ஆனால் மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை நமஸ்கரிக்கவுமில்லை. ஆமான் மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததை அறிந்த போது மூர்க்கம் நிறைந்தவனாய் மொர்தெகாயைப் பகைத்தான். (எஸ்தர்3:1,2,5)

3. ராஜாவின் சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் பிரவேசித்து யூத ஜனங்களுக்காக பரிந்து பேசும்படி ராஜாத்தியாகிய எஸ்தர் என்ன செய்தாள்?

ராஜாத்தியாகிய எஸ்தர் ராஜாவின் சட்டத்தைமீறி ராஜாவினிடத்தில் பிரவேசித்து யூத ஜனங்களுக்காக பரிந்து பேச வேண்டி இருப்பதால் தனக்காக சூசானி- ருக்கிற யூதரையெல்லாம் மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து உபவாசிக்கும்படி கூறினாள். எஸ்தரும் அவள் தாதிமாரும் உபவாசித்தார்கள். (எஸ்தர் 4:16)

4. எஸ்தர் முதலாம் நாள் செய்திருந்த விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தவர்கள் யார்? அப்பொழுது அவள் வேண்டிக் கொண்டது என்ன?

முதலாம் நாள் விருந்துக்கு அகாஸ்வேரு ராஜாவும் ஆமானும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களை அவள் செய்யப்போகும் இரண்டாம் நாள் விருந்துக்கும் வரும்படி வேண்டிக்கொண்டாள். (எஸ்தர் 5:8)

5. ஆமான் செய்த தூக்கு மரத்தின் உயரம் என்ன? அதை அவன் யாருக்காக செய்தான்?

ஆமான் செய்த தூக்கு மரத்தின் உயரம் 50 முழம். அவன் அதை மொர்தெகாய்க்காக செய்தான். (எஸ்தர்5:14)

6. ஆமானுக்கு எத்தனை குமாரர்கள் இருந்தார்கள்? அவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள்?

ஆமானுக்கு 10 குமாரர்கள் இருந்தார்கள். யூதர்கள் அவர்களை பட்டயத்தால் கொன்று அவர்களுடைய உடல்களை மொர்தெகாய் ஆமானுக்காக செய்த தூக்குமரத்திலே தூக்கிப்போட்டார்கள். (எஸ்தர் 9:5,9,14)

7. பூரீம் பண்டிகை எப்பொழுது கொண்டாடப்பட்டது?

சூசானிலுள்ள யூதர்கள் ஆதார் மாதம் என்கிற 12-வது மாதம் 15ஆம் தேதியிலே பூரீம் பண்டிகையைக் கொண்டாடினார்கள். அலங்கமில்லாத ஊர்களில் குடியிருக்கிற நாட்டுப்புறத்தரான யூதர்கள் ஆதார் மாதத்தின் 14-வது தேதியில் பூரீம் பண்டிகையைக் கொண்டாடினார்கள். (எஸ்தர்9:19)

V. *<u>சுருக்கமான விடையளி</u>* : (4 Marks)

1. சூசான் நகரம் எப்பொழுது கலங்கியது? சூசான் நகரம் எப்பொழுது மகிழ்ந்தது?

<u>சூசான் நகரம் கலங்கியது</u>:

ஆமானின் சதி ஆலோசனையினால், ஆதார் மாதமான பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதியாகிய ஒரே நாளிலே சிறியோர் பெரியோர் குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களைக் கொள்ளையிடவும், அஞ்சற்காரர் கையிலே அகாஸ்வேரு ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப்பட்டது. அப்பொழுது சூசான் நகரம் கலங்கியது. (எஸ்தர் 3:15)

<u>சூசான் நகரம் மகிழ்ந்தது</u>:

யூதரின் பகைஞர் அவர்களை மேற்கொள்ளலாம் என்று எண்ணின ஆதார் மாதம் என்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதியில் தானே, யூதர் ஒன்றாய்ச் சேர்ந்து, தங்கள் பிராணனைக் காப்பாற்றவும், தங்களை விரோதிக்கும் சத்துருக்களாகிய ஜனத்தாரும் தேசத்தாருமான எல்லாரையும் அவர்கள் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிடவும், அகாஸ்வேரு ராஜா யூதருக்குக்கட்டளையிட்டார் என்ற செய்தி அஞ்சற்காரர் மூலம் ஒவ்வொரு நாட்டிலும் பிரசித்தம் பண்ணப்பட்டது. மொர்தெகாயும் இளநீலமும் வெள்ளையுமான ராஜவஸ்திரமும், பெரிய பொன்முடியும், பட்டும், இரத்தாம்பரமும் அணிந்தவனாய் ராஜாவினிடத்தி- ருந்து புறப்பட்டான். அப்பொழுது சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்தது. (எஸ்தர் 8:11-15)

2. எஸ்தர் இரண்டாம் நாள் செய்திருந்த விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் யார்? அப்பொழுது அவள் இராஜாவினிடம் வேண்டிக் கொண்டது என்ன?

ராஜாவாகிய அகாஸ்வேரும் ஆமானும் எஸ்தர் செய்த இரண்டாம் நாள் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். (எஸ்தா5:8) அப்பொழுது அவள் ராஜாவை நோக்கி, "ராஜாவே உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்து, ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால் என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப் படுவதாக. எங்களை அழித்துக் கொன்று நிர்மூலமாக்கும்படி நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம்; அடிமைகளாகவும் வெள்ளாட்டிகளாகவும் விற்கப்பட்டுப் போனாலும் நான் மவுனமாயிருப்பேன்; இப்பொழுதோ ராஜாவுக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு அந்தச் சத்துரு உத்தரவாதம் பண்ணமுடியாது என்றாள். (எஸ்தர் 7:3,4)

3. ஆமான் தூக்கி- டப்பட்டபின் மொர்தெகாய் பெற்றுக் கொண்ட கனமும் மேன்மையும் என்ன?

i. அகாஸ்வேரு ராஜா ஆமானின் கையி- ருந்து வாங்கின தன்னுடைய மோதிரத்தை எடுத்து அதை மொர்தெகாய்க்கு கொடுத்தான். (எஸ்தர் 8:2)

ii. எஸ்தர், இராஜா தனக்கு கொடுத்திருந்த ஆமானின் அரமனைக்கு மொர்தெகாயை அதிகாரியாக வைத்தாள். (எஸ்தர் 8:2)

iii. மொர்தெகாய்க்கு இளநீலநூலும் வெள்ளையுமான ராஜவஸ்திரமும், பெரிய பொன்முடியும், பட்டும் இரத்தாம் பரமும் கொடுக்கப்பட்டது. (எஸ்தர் 8:15)

iv. மொர்தெகாய் ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு இரண்டாவதானவனும், யூதருக்குள் பெரியவனுமாயிந்தான். (எஸ்தர் 10:3) அவனுடைய கீர்த்தி எல்லா நாடுகளிலும் பிரசித்தமாயிற்று. (எஸ்தர் 9:4)

4. ஆமான் கொல்லப்பட்ட பின்பு, அவன் யூதர்களை அழிக்கும்படி செய்திருந்த திட்டம் எவ்வாறு முறியடிக்கப்பட்டது?

ஆமான் கொல்லப்பட்ட பின்பு, எஸ்தர் ராஜசமூகத்தில் பிரவேசித்து ஆமானின் தீவினையையும் அவன் யூதருக்கு விரோதஞ்செய்ய யோசித்த யோசனையையும் பரிகரிக்க வேண்டும் என்று அவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினாள். அப்பொழுது ராஜா; உங்களுக்கு இஷ்டமானபடி நீங்கள் ராஜாவின் நாமத்தினால் யூதருக்காக எழுதி, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரைபோடுங்கள்; ராஜாவின் பேரால் எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடப்பட்டதைச் செல்லாமற் போகப் பண்ண ஒருவராலும் கூடாது என்றான். (எஸ்தர் 8:8)

உடனே ராஜாவின் பேரால் கட்டளைகள் எழுதப்பட்டு சகல தேசத்தாருக்கும் அனுப்பப்பட்டது. அதன்படி யூதர் ஒன்றாய்ச் சேர்ந்து தங்கள் சத்துருக்களை அழித்தார்கள். இவ்வாறாக ஆதார் என்கிற பன்னிரண்டாம் மாதம், பதின்மூன்றாந் தேதியிலே யூதரின் பகைஞர் அவர்களை மேற்கொள்ளலாம் என நம்பின அந்த நாளிலேதானே, யூதரானவர்கள் தங்கள் பகைஞரை மேற்கொள்ளும்படிக்கு காரியம் மாறுதலாய் முடிந்தது. இவ்வாறாக ஆமானின் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டது. (எஸ்தர் 9:1)

VI. <u>விரிவான விடையளி</u> : (10 Marks)

1. அகாஸ்வேரு ராஜாவின் மேல் கைபோடும்படியாக பிரதானிகளால் செய்யப்பட்ட சதியை ராஜாவுக்கு அறிவித்த மொர்தெகாய் எப்பொழுது எவ்வாறு கனப்படுத்தப்பட்டான் என்பதை விவரி?

ஒரு நாள் இராத்திரியிலே அகாஸ்வேரு ராஜாவுக்கு நித்திரை வரவில்லை. அப்பொழுது காலவர்த்தமானங்கள் எழுதியிருக்கிற நடபடி புஸ்தகத்தி- ருந்து, பிரதானிகளாகிய பித்தானாவும் தேரேசும் ராஜாவாகிய அகாஸ்வேரு வின்மேல் கைபோடப்பார்த்த செய்தியை மொர்தெகாய்

அறிவித்தான் என்று எழுதியிருந்தது வாசிக்கப்பட்டது. அப்பொழுது ராஜா இதற்காக மொர்தெகாய்க்குக் கனமும் மேன்மையும் செய்யப்பட்டதா என்று கேட்டான். அதற்கு ராஜாவைச் சேவிக்கிற ஊழியக்காரர் அவனுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். அப்பொழுது ராஜா தன்னை காணவந்த ஆமானை நோக்கி, ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப் படவேண்டும் என்று கேட்டான். அதற்கு ஆமான், ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு செய்யப்பட வேண்டியது என்னவென்றால், ராஜா உடுத்திக் கொள்ளுகிற ராஜ வஸ்திரமும், ராஜா ஏறுகிற குதிரையும் அவர் சிரசிலே தரிக்கப்படும் ராஜமுடியும் கொண்டுவரப்படவேண்டும். அந்த வஸ்திரமும் குதிரையும் ராஜாவுடைய பிரதான பிரபுக்களில் ஒருவனுடைய கையிலே கொடுக்கப்படவேண்டும் ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனை அலங்கரித்தபின், அவனைக் குதிரையின் மேல் ஏற்றி, நகரவீதியில் உலாவும்படி செய்து, ராஜா கனம் பண்ணவிரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாகக் கூறப்படவேண்டும் என்றான்.

அப்பொழுது ராஜா ஆமானை நோக்கி, சீக்கிரமாய் நீ சொன்னபடி வஸ்திரத்தையும் குதிரையையும் கொண்டு போய், ராஜ அரமனையின் வாச- ல் உட்கார்ந்திருக்கிற யூதனாகிய மொர்தெகாய்க்கு அந்தப் பிரகாரம் செய். நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாதபடி பார் என்றான். அப்படியே, ஆமான் வஸ்திரத்தையும் குதிரையையும் கொண்டு போய், மொர்தெகாயை அலங்கரித்து, அவனைக் குதிரையின் மேல் ஏற்றி, நகரவீதியில் உலாவும்படி செய்து, ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாக கூறினான். இவ்வாறு மொர்தெகாய் கனப்படுத்தப்பட்டான். (எஸ்தர் 6:1-11)

2. யூதர்களை சங்கரிக்க திட்டமிட்ட ஆமான் எவ்வாறு கொல்லப்பட்டான்?

ஆமான் ஆதார் மாதமான பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாம் தேதியாகிய ஓரே நாளிலே சிறியோர் பெரியோர், குழந்தைகள், ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்க அகாஸ்வேரு ராஜாவின் பேரால் கட்டளைகளை எழுதி அனுப்பினான். அதை அறிந்த மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறிக்கொண்டு, அகாஸ்வேரு ராஜாவின் அரண்மனை வாசல் முகப்புமட்டும் வந்து, ஆமானின் திட்டங்களை ஆத்தாகு முலம் எஸ்தருக்கு அறிவித்து, அவள் ராஜாவினிடத்தில் பிரவேசித்து, தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது எஸ்தர் சூசானி- ருக்கிற யூதரை மூன்று நாட்கள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து உபவாசம் பண்ணும்படி கூறிவிட்டு, அவளும் அவளுடைய தாதிமாரும் மூன்றுநாட்கள் உபவாசித்தார்கள். (எஸ்4:16)

பின்பு, எஸ்தர் ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு ராஜாவினிடத்தில் வந்தபோது, ராஜாவின் கண்களில் அவளுக்குத் தயவு கிடைத்தது. அப்பொழுது எஸ்தர் தான் செய்யப் போகும் விருந்துக்கு இராஜாவையும் ஆமானையும் அழைத்தாள். (எஸ் 5:4) முதலாம் நாள் விருந்துக்கு அவர்கள் வந்தபோது, அவள் இன்னும் அவர்களுக்கு செய்யப்போகும் விருந்துக்கு அவர்களை அழைத்தாள். (எஸ் 5:8) அவர்கள் இரண்டாம் நாள் விருந்துக்கு வந்த போது, ராஜா எஸ்தரை நோக்கி, உன் வேண்டுதல் என்ன? இது உனக்குக் கொடுக்கப்படும்; நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும் கிடைக்கும் என்றான். (7:2)

அப்பொழுது எஸ்தர் எங்களை அழித்துக் கொன்று நிர்மூலமாக்கும்படி நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம். அடிமைகளாகவும் வெள்ளாட்டிகளாகவும் விற்கப்பட்டுப் போனாலும் நான் மவுனமாயிருப்பேன்; இப்பொழுதோ ராஜாவுக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு அந்தச் சத்துரு உத்தரவாதம் பண்ணமுடியாது என்றாள். (எஸ்தர் 7:4) அப்பொழுது ராஜா;

இப்படிச் செய்யத் துணிகரங்கொண்டவன் யார்? அவன் எங்கே? என்றான். அதற்கு எஸ்தர் சத்துருவும் பகைஞனுமாகிய அந்த மனிதன் இந்தத் துஷ்ட ஆமான்தான் என்றாள். அப்பொழுது ராஜாவுக்கும் ராஜாத்திக்கும் முன்பாக ஆமான் திகிலடைந்தான். அப்பொழுது அற்போனா என்னும் பிரதானி, இதோ ராஜாவின் நன்மைக்காக பேசின மொர்தெகாய்க்கு ஆமான் செய்வித்த ஐம்பது முழ உயரமான தூக்குமரம் ஆமானின் வீட்டண்டை நாட்டப்பட்டிருக்கிறது என்றான். (எஸ்தர் 7:9) அப்பொழுது ராஜா அதிலே அவனைத் தூக்கிப்போடுங்கள் என்றான். அந்தப்படியே ஆமானை தூக்கிப்போட்டார்கள் ராஜாவின் உக்கிரம் தணிந்தது. (எஸ் 7:10) ஆமானின் வீடு எஸ்தருக்கு கொடுக்கப்பட்டது. ஆமானின் கையி- ருந்து வாங்கிப்போட்ட இராஜாவின் முத்திரை மோதிரம் மொர்தெகாயுக்கு கொடுக்கப்பட்டது. (எஸ்தர் 8:1,2)

VII. <u>*போதனை:*</u>

நாம் உபவாசத்தோடும் ஜெபத்தோடும் கர்த்தரிடம் மன்றாடினால், நம்முடைய எல்லாப் பிரச்சினைகளிலும் அவர் நமக்கு ஜெயம் தருவார். துன்மார்க்கன் தான் வெட்டின குழியில் தானே விழுவான்.

❖❖❖❖❖❖❖❖❖

பாபிலோனில் தானியேலும் அவனுடைய தோழர்களும்

(தானியேல் அதி. 1)

I. *மனப்பாட வசனம் :* (2 Marks)

லேவியராகமம் 20 : 26

கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக ; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன் .

1 தீமோத்தேயு 4 : 12

உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.

II. *சர்ந்தப்பம் கூறு:(யார் யாரிடம் எப்போது கூறியது)* (2 ½ Marks)

1. "அவர் உங்களோடொத்த வாலிபரின் முகங்களைப்பார்க்கிலும் உங்கள் முகங்கள் வாடிப் போனவைகளாகக் காணவேண்டியதென்ன ?". (தானியேல் 1 : 10)

யார் : பிரதானிகளின் தலைவன்
யாரிடம் : தானியேலிடம்
எப்போது : தானியேல் பாபிலோன் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப் படுத்தலாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான். அப்பொழுது பிரதானிகளின் தலைவன் தானியேலிடம் இவ்வாறு கூறினான்.

2. **a.**"பத்து நாள் வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப் பாரும்". (தானி. 1 : 12)

b "எங்கள் முகங்களையும் ராஜ போஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப் பாரும் "

c. "பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும்."(தானி. 1 : 13)

யார் : தானியேல்
யாரிடம் : விசாரிப்புக்காரனாகிய மேல்ஷாரிடம்
எப்போது : தானியேல் ராஜபோஜனத்தினால் தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் ' தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான். அதற்கு அவன், என் ஆண்டவனுக்கு நான் பயப்படுகிறேன். அவர் உங்களோடொத்த வாலிபரின் முகங்களைப்பார்க்கிலும் உங்கள் முகங்கள் வாடிப்போனவைகளாகக் காண வேண்டியதென்ன? அதினால் ராஜா என்னைச் சிரச்சேதம் பண்ணுவாரே என்றான். அப்பொழுது தானியேல் மேல்ஷாரிடம் இவ்வாறு கூறினான்.

III. *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Mark)

1. தானியேலையும் அவன் தோழர்களையும் பாபிலோனுக்கு சிறையாக கொண்டு சென்றது யார்?

பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் (தானி. 1 : 1)

2. நேபுகாத்நேச்சாருடைய பிரதானிகளின் தலைவன் யார்?

அஸ்பேனாஸ் (தானி. 1 : 4)

3. ராஜாவின் போஜத்தினாலும் திராட்சரசத்தினாலும் தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டது யார்?

தானியேல் (தானி. 1 : 8)

4. தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தது யார்?

தேவன் (தானி. 1 : 9)

5. பிரதானிகளின் தலைவன் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள்மேல் யாரை விசாரிப்புக்காரனாக வைத்தான்?
   மேல்ஷார் (தானி. 1 : 11)

6. மேல்ஷார் தானியேலையும், அவன் தோழரையும் எத்தனை நாள் சோதித்துப் பார்த்தான்?
   பத்து நாள் (தானி. 1 : 14)

7. தேவன் யாரை சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்?
   தானியேல் (தானி. 1 : 17)

8. தானியேலும் அவன் தோழர்களும் பாபிலோனின் சகல சாஸ்திரிகளையும் ஜோசியர்களையும் விட எத்தனை மடங்கு சமர்த்தராக இருந்தனர்?
   பத்து மடங்கு (தானி. 1 : 20)

IV. <u>ஓரிரு வாக்கிய□களில் விடையளி :</u>

1. ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்கு சிறையாகக் கொண்டு சென்றவர்களில் ராஜ குலத்தாரான யூதா புத்திரர் நான்குபேரின் பெயர்களை எழுது.
   தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா (தானி . 1 : 6)

2. நேபுகாத்நேச்சார் யூதா தேசத்திலிருந்து சிறையாக கொண்டு வந்த வாலிபரை என்ன செய்யும்படி தன் பிரதானிகளின் தலைவானகிய அஸ்பேனாசுக்கு கட்டளையிட்டான்?
   ராஜா, தான் உண்ணும் போஜனத்திலேயும் தான் குடிக்கும் திராட்சரத்திலேயும தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்று வருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்களை ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டளையிட்டான். (தானி. 1 : 5)

3. பிரதானிகளின் தலைவன் தானியேலுக்கும் அவன் தோழர்களுக்கும் கொடுத்த பாபிலோனிய பெயர்கள் யாவை?
   1) தானியேல் - பெல்தெஷாத்சார்.
   2) அனனியா - சாத்ராக்
   3) மீஷாவேல் - மேஷாக்
   4) அசரியா - ஆபேத்நேகோ என்று பெயரிட்டான். (தானி. 1 : 7)

4. தானியேலின் உறுதியான தீர்மானம் என்ன? (அல்லது) தானியேல் எதினால் தன்னை தீட்டுப்படுத்தக் கூடாது என்று தீர்மானம் பண்ணியிருந்தான்?
   தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணியிருந்தான். (தானி. 1 : 8)

5. தானியேல் மேல்ஷாரிடம் விடுத்த சவால் என்ன?
   தானியேல் மேல்ஷாரிடம், "பத்து நாள்வரைக்கும் உமது அடியாரைச் சோதித்து பாரும். எங்களுக்குப் புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப் பாரும். பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும்" என்று சவால் விட்டான். (தானி. 1 : 12, 13)

6. தானியேலையும் அவன் தோழரையும் சோதித்துப் பார்த்தது யார்? அவன் அவர்களிடம் என்ன கண்டான்?
   1) மேல்ஷார் என்னும் விசாரிப்புக்காரன் அவர்களை பத்துநாளளவும் சோதித்துப் பார்த்தான்.
   2) பத்துநாள் சென்ற பின்பு, ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப்பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் கண்டான். (தானி. 1 : 13 - 15)

7. பாபிலோன் ராஜாவின் போஜனத்தினாலும் திராட்சரசத்தினாலும் தங்களை தீட்டுப்படுத்தாமலும் இருந்த தானியேலையும் அவன் தோழரையும் தேவன் எவ்வாறு ஆசீர்வதித்தார்?
   தானியேலுக்கும் அவன் தோழருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார். தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார். (தானி. 1 : 17)

V. <u>*சுருக்கமான விடையளி*</u> **:** (4 Marks)

1. நேபுகாத்நேச்சார் யூதாதேசத்திலிருந்து சிறையாக கொண்டு வந்த வாலிபரில் யாரை ராஜசமூகத்தில் நிற்கும் படி தெரிந்தெடுத்தான்? ஏன்?

1) நேபுகாத்நேச்சார் சிறையாக கொண்டு வந்த வாலிபர் எல்லாருக்குள்ளும் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களைப்போல வேறொருவரையும காணவில்லை.

2) ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்துமடங்கு சமர்த்தராகக் கண்டான்.

ஆகையால் அவர்களை ராஜ சமூகத்தில் நிற்கும்படி தெரிந்தெடுத்தான்.(தானி. 1: 19,20)

2. தானியேலும் அவன் தோழர்களும் தங்களுடைய தீர்மானத்தில் உறுதியாயிருக்கும்படி தேவன் அவர்களுக்கு எவ்வாறு உதவி செய்தார்?

1) தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார்.

2) ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப்பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்படும்படி செய்தார்.

3) இந்த நாலுவாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்.

4) தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார். (தானி. 1 : 9, 15, 17)

3. நேபுகாத்நேச்சார் தனக்கு முன்பாக நிற்கும்படி தெரிந்துகொள்ளப்பட வேண்டியவர்களில், காணப்பட வேண்டிய தகுதிபிரமாணங்களாக குறிப்பிட்டவைகள் யாவை?

இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும், துரைமக்களிலும்,

1) யாதொரு மாசும் இல்லாவர்களும்
2) அழகானவர்களும்
3) சகல ஞானத்திலும் தேறினவர்களும்
4) அறிவில் சிறந்தவர்களும்
5) கல்வியில் நிபுணரும்
6) ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திமையுள்ளவர்களும்
7) கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்றான். (தானி 1 : 3, 4)

VI. <u>*போதனை:*</u>

நாம் பரிசுத்தத்திற்காக நிற்கும்படியாக ஒரு தீர்மானம் செய்வோமாயின், நம் எதிர்பார்ப்பிற்கும் மேலாக கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

****

அக்கினிச் சூளையில் அனனியா, மீஷாவேல், அசரியா

(தானியேல் அதிகாரம் 3)

I. ***மனப்பாட வசனம்:*** (2 Marks)

யூதா 3

பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது.

II. ***சந்தர்ப்பம் கூறு (யார், யாரிடம், எப்போது கூறியது) :*** (2 ½ Marks)

1. "அவர்கள் ராஜாவாகிய உம்மை மதிக்கவில்லை". (தானியேல் 3:12)

   யார் : கல்தேயரில் சிலர்

   யாரிடம் : இராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடம்

   எப்போது : இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தூரா என்னும் சமபூமியிலே நிறுத்திய பொற்சிலையை அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் யூதரான மனுஷர் பணிந்து கொள்ளாமல் ராஜாவின் கட்டளையை மீறினதினால், கல்தேயரில் சிலர் இராஜசமூகத்தில் வந்து இவ்வாறு குற்றஞ்சாட்டினார்கள்.

2. "உங்களை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார்". (தானியேல் 3:15)

   யார் : நேபுகாத்நேச்சார்

   யாரிடம் : அனனியா, மீஷாவேல் , அசரியாவிடம்

   *எப்போது : நேபுகாத் நேச்சார் அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களை நோக்கி, **"**நீங்கள் என் தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ளாமலும் இருந்தது மெய்தானா? இப்போதும் எக்காளம், நாகசுரம், கிண்ணரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும்போது, தாழவிழுந்து நான் பண்ணிவைத்த சிலையைப் பணிந்து கொள்ள ஆயத்தமாயிருந்தால் நல்லது. பணிந்து கொள்ளாதிருந்தீர்களேயாகில், அந்நேரமே எரிகிற அக்கினி சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்; உங்களை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார்**"**, என்றான்.*

3. a. **"**இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை". (தானி3:16)

   b. "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்". (தானி 3:17)

   c. "அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும் ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்". (தானி 3:17)

   d. "விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை". (தானி 3:18)

   யார் : அனனியா, மீஷாவேல், அசரியா

யாரிடம் : நேபுகாத்நேச்சாரிடம்

எப்போது : நேபுகாத்நேச்சார், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களை நோக்கி, "நீங்கள் என் தேவனுக்கு ஆராதனை செய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ளாமலும் இருந்தது மெய்தானா? இப்போதும் எக்காளம், நாகசுரம், கிண்ணரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான கீதவாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும்போது, தாழவிழுந்து நான் பண்ணி வைத்த சிலையைப் பணிந்து கொள்ள ஆயத்தமாயிருந்தால் நல்லது. பணிந்து கொள்ளாதிருந்தீர்களேயாகில், அந்நேரமே எரிகிற அக்கினி சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள். உங்களை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார்?" என்றான். அப்பொழுது அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் ராஜாவை நோக்கி இவ்வாறாக கூறினார்கள்.

4. "நாலாம் ஆளின் சாயல் தேவ புத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது". (தானியேல் 3:25)

யார் : நேபுகாத்நேச்சார்

யாரிடம் : தன் மந்திரிமார்களிடம்

எப்போது : அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ள மறுத்தபடியால் அவர்களை எரிகிற அக்கினிச் சூளையிலே போட்டான். அவர்களை போட்டவுடன் நேபுகாத்நேச்சார் பிரமித்து தீவிரமாய் எழுந்து, தன் மந்திரிமார்களை நோக்கி, மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர்களாக அக்கினியில் போடுவித்தோம். இதோ நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன். அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை. நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான்.

5. "இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை". (தானியேல் 3:29)

யார் : நேபுகாத்நேச்சார்

யாரிடம் : தேசாதிபதிகள், அதிகாரிகள், தலைவர்கள், மந்திரிமார்களிடம்

எப்போது : பொற்சிலையை பணிந்து கொள்ளாதபடியால் அக்கினி சூளையில் போடப்பட்ட அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களுடைய சரீரங்களின் மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும், அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததைக் கண்ட நேபுகாத்நேச்சார் வசனித்து, "இவர்கள் தங்களுடைய தேவனைத் தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல் அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி தம்முடைய தாசரை விடுவித்தார். ஆகையால் இவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப் போடப்படுவான். அவன் வீடு எருக்களமாக்கப்படும்". இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை என்றான்.

III. <u>*ஓரிரு வார்த்தைகளில் விடையளி*</u> : (2 Mark)

1. நேபுகாத்நேச்சார் தான் பண்ணுவித்த பொற்சிலையை எங்கே நிறுத்தினான்?

பாபிலோன் மாகாணத்தி- ருக்கிற தூரா என்னும் சமவெளியில் நிறுத்தினான். (தானி 3:1)

2. நேபுகாத்நேச்சார் பண்ணுவித்த பொற்சிலையின் அளவு என்ன?

அறுபது முழ உயரம், ஆறு முழ அகலம். (தானி 3:1)

3. யூதராகிய அனனியா, மீஷாவேல், அசரியாவின் மேல் குற்றஞ்சாட்டியது யார்?

கல்தேயரில் சிலர் (தானி 3:8)

4. நேபுகாத்நேச்சார் சூளையை எத்தனை மடங்கு அதிகமாக சூடாக்கும்படி உத்தரவிட்டான்?

சூளையைச் சாதாரணமாய்ச் சூடாக்குவதைப் பார்க்கிலும் ஏழுமடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி உத்தரவிட்டான். (தானி 3:19)

5. அனனியா, மீஷாவேல், அசரியாவை அக்கினிச் சூளையில் போடும்படி அவர்களைக் கட்டுவதற்கு யாருக்கு கட்டளையிடப்பட்டது?

இராணுவத்தில் பலசா- ளாகிய புருஷருக்குக் கட்டளையிடப்பட்டது. (தானி 3:20)

6. அக்கினியின் நடுவிலே உலாவிக்கொண்டிருந்த நாலாம் ஆளின் சாயல் யாருக்கு ஒப்பாயிருந்தது?

தேவ புத்திரனுக்கு ஒப்பாக இருந்தது. (தானி 3:25)

IV. <u>ஓரிரு வாக்கியங்களில் விடையளி</u> :

1. பிரதானிகளின் தலைவன் அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் யூதா புத்திரருக்கு இட்ட மறுபெயர்கள் யாவை?

பிரதானிகளின் தலைவன் அனனியாவுக்கு சாத்ராக் என்றும் மீஷாவேலுக்கு மேஷாக் என்றும் அசரியாவுக்கு ஆபேத்நேகோ என்றும் மறுபெயரிட்டான் (தானியேல் 1 : 7)

2. நேபுகாத்நேச்சார் தான் நிறுத்தின பொற்சிலையின் பிரதிஷ்டைக்கு வரும்படி யாரை அழைத்தான்?

ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தேசாதிபதிகளையும், அதிகாரிகளையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், பொக்கிஷக்காரரையும், நீதிசாஸ்திரிகளையும், விசாரிப்புக்காரரையும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரையும் அழைத்தான். (தானி 3:2)

3. ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தான் நிறுத்தின பொற்சிலையின் பிரதிஷ்டைக்கு வரும்படி அழைத்தவர்களுக்கு கொடுத்த கட்டளை என்ன?

ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அவர்களை நோக்கி, "எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீத வாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும் போது, நீங்கள் தாழ விழுந்து, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ளக்கடவீர்கள். எவனாகிலும் தாழ விழுந்து, அதைப் பணிந்துகொள்ளாமற்போனால், அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவான்" என்றான். (தானி 3:5,6)

4. கல்தேயரில் சிலர் நேபுகாத்நேச்சாரிடம் அனனியா, மீஷாவேல், அசரியா பற்றி என்ன குற்றஞ்சாட்டினார்கள்?

"ராஜாவாகிய உம்மை யூதரான மனுஷர் மதிக்கவுமில்லை, அவர்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும் நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளாமலும் இருக்கிறார்கள்" என்று குற்றஞ்சாட்டினார்கள். (தானி 3:12)

5. அனனியா, மீஷாவேல், அசரியா கட்டுண்டவர்களாய் எரிகிற அக்கினி சூளையின் நடுவிலே போடப்பட்டபோது அவர்கள் தரித்திருந்த வஸ்திரங்கள் யாவை?

அனனியா, மீஷாவேல், அசரியா தங்கள் சால்வைகளோடும் நிசார்களோடும் பாகைகளோடும் மற்ற வஸ்திரங்களோடும் கட்டப்பட்டு எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்பட்டார்கள். (தானி 3:21)

6. அனனியா, மீஷாவேல், அசரியாவை அக்கினியில் தூக்கிக் கொண்டுபோன புருஷருக்கு என்ன சம்பவித்தது? ஏன்?

ராஜாவின் கட்டளை கடுமையாயிருந்தபடியினாலும், சூளை மிகவும் சூடாக்கப்பட்டிருந்த படியினாலும், அக்கினி ஜுவாலையானது அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களைத் தூக்கிக் கொண்டு போன புருஷரைக் கொன்று போட்டது. (தானி 3:22)

7. கட்டுண்டவர்களாய் எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்பட்டவர்கள் எத்தனை பேர்? அக்கினியின் நடுவிலே விடுதலையாய் உலாவினவர்கள் எத்தனை பேர்?

மூன்று பேர் கட்டுண்டவர்களாக அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்பட்டார்கள். நான்குபேர் அக்கினியின் நடுவிலே விடுதலையாய் உலாவினார்கள். (தானி 3:24)

8. இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஏன் பிரமித்தான்?

இராஜாவாகிய நேபுகாத்நேச்சார், மூன்று யூதரைக் கட்டுண்டவர்களாய் அக்கினியிலே போட்டான். ஆனால் நான்கு பேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் கண்டு பிரமித்தான். (தானி 3:24)

9. ஏழுமடங்கு சூடாக்கப்பட்டிருந்த அக்கினிச் சூளையி- ருந்து வெளியே வந்த மூன்று புருஷர்கள், அக்கினியி- ருந்து வெளியே வந்ததும், எப்படிக் காணப்பட்டார்கள்?

அந்த மூன்று புருஷருடைய சரீரங்களின் மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும் அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் காணப்பட்டார்கள். (தானி 3:27)

V. *சுருக்கமான விடையளி* : (4 Marks)

1. நேபுகாத்நேச்சார் தான் நிறுத்தின பொற்சிலையை அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் பணிந்து கொள்ளாததை அறிந்தபோது அவர்களை அழைத்து விசாரித்ததையும், அவர்கள் கொடுத்த பதிலையும் எழுது.

நேபுகாத்நேச்சார், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களை நோக்கி, "நீங்கள் என் தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளாமலும் இருந்தது மெய்தானா? இப்போதும் கீத வாத்தியங்களின் சத்தத்தை கேட்கும் போது, சிலையை பணிந்து கொள்ளாதிருந்தீர்களேயாகில் அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்; உங்களை என் கைக்குத் தப்புவிக்கிற தேவன் யார்" என்றான்.

அப்பொழுது அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் ராஜாவை நோக்கி, "நேபுகாத்நேச்சாரே, இந்த காரியத்தைக்குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். எரிகிற அக்கினி சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதும் இல்லை. நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்கு தெரிந்திருக்கக்கடவது" என்றார்கள். (தானி 3:14-18)

2. அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களைக் குறித்து நேபுகாத்நேச்சார் புகழ்ந்து கூறியதையும் அவனால் தீர்மானிக்கப்பட்டவைகளையும் எழுது,

அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார். இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை என்று நேபுகாத்நேச்சார் புகழந்து கூறினான்.

மேலும் நேபுகாத்நேச்சார் கீழ்கண்ட தீர்மானங்களைக் கட்டளையாகத் தன் ஜனங்களுக்கு அறிவித்தான். அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப்போடப்படுவான். அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று அறிவித்தான். (தானி 3:29)

VI. <u>போதனை:</u>

அக்கினி போன்ற சோதனைகள் மத்தியில், தேவன் நமக்குத் தந்திருக்கும் வெளிப்படுத்தல்களுக்கு நாம் உண்மையாய் நிற்போமாயின், தேவன் நம்மை அற்புதமாக விடுதலையாக்குவார்.

❖❖❖❖❖❖❖❖❖

சிங்கங்களின் கெபியில் தானியேல்

(தானியேல் அதிகாரம் 6)

I *<u>மனப்பாட வசனம் :</u>* (2 Marks)

<u>எபிரெயர் 11 : 33-35</u>

விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்,

அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள்:, யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்.

ஸ்திரீகள் சாகக் கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடேழுந்திருக்கப் பெற்றார்கள்:, வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்.

II *<u>யார் யாரிடம் எப்போது கூறியது</u>*: (2 ½ Marks)

1. "நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத்தப்புவிப்பார்." (தானியேல் 6 : 16)

யார் : ராஜாவாகிய தரியு

யாரிடம் : தானியேலிடம்

எப்போது : தரியு ராஜாவின் நாட்களில் தானியேலின் மீது பொறாமை கொண்ட பிரதானிகளும் தேசாதிபதிகளும் தானியேலைக் குற்றப்படுத்தும்படி சதி ஆலோசனை செய்து முப்பது நாள் வரை எவனாகிலும் ராஜாவைத் தவிர எந்த தேவனையானாலும், மனுஷனையானாலும் நோக்கி விண்ணப்பம் செய்தால் அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட வேண்டும் என்ற புதிய கட்டளையை பிறப்பிக்கவும் அது மாற்றப்படாதபடிக்கு அதற்குக் ராஜா கையெழுத்து போடும்படியாகவும் செய்தார்கள். ஆனால் தானியேலோ முன் செய்து வந்தபடியே தினமும் மூன்று வேளை தன் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி விண்ணப்பம் செய்தான். இதைக் கண்ட அந்த மனுஷர் ராஜாவிடம் சென்று தானியேலின் மீது குற்றம் சாட்டினார்கள். தானியேலைக் காப்பாற்றும்படிக்கு தரியுராஜா பிரயாசப்பட்டும் இயலாமல் போயிற்று. ஆகவே ராஜா கட்டளையிட அந்த மனுஷர் தானியேலை சிங்கங்களின் கெபியிலே கொண்டு வந்து போட்டார்கள். அப்பொழுது ராஜா தானியேலை நோக்கி இவ்வாறு கூறினான்.

2. "நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களின் கெபிக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா" (தானியேல் 6 : 20)

யார் : ராஜாவாகிய தரியு

யாரிடம் : தானியேலிடம்

எப்போது : ராஜாவாகிய தரியு கட்டளையிட்டபடி பிரதானிகளும் தேசாதிபதிகளும் தானியேலைக் கொண்டு வந்து சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். பின்பு ராஜா தன் அரமணைக்குப் போய் இரா முழுவதும் போஜனம் பண்ணாமலும், கீதவாத்தியம் முதலானவைகளைத் தனக்கு முன்பாக வரவொட்டாமலும் இருந்தான். அவனுக்கு நித்திரையும் வராமற்போயிற்று. காலமே கிழக்கு வெளுக்கும் போது ராஜா எழுந்திருந்து சிங்கங்களின் கெபிக்குத் தீவிரமாய்ப் போய், துயர சத்தமாய்த் தானியேலைக் கூப்பிட்டு இந்த வார்த்தைகளைக் கூறினான்.

3. **a)** "அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன".

b) "ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை". (தானியேல் 6 : 22)

யார் : தானியேல்

யாரிடம் : ராஜாவாகிய தரியுவிடம்

எப்போது : *பிரதானிகள் தேசாதிபதிகளின் சதி ஆலோசனையினால், தானியேலை சிங்கக் கெபியிலே போட்டபின்பு, ராஜா தன் அரண்மனைக்குப் போய், இராமுழுதும் போஜனம் பண்ணாமலும், கீதவாத்தியம் முதலானவைகளைத் தனக்கு முன்பாக வரவொட்டாமலும் இருந்தான். அவனுக்கு நித்திரையும் வராமற்போயிற்று. காலமே கிழக்கு வெளுக்கும் போது ராஜா கெபியின் கிட்டவந்து, துயரசத்தமாய்த் தானியேலைக் கூப்பிட்டு, "தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா" என்று கேட்ட போது அவன் இவ்வாறு கூறினான்.*

4. **a)** "அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்".
   b) "அவருடைய ராஜ்யம் முடிவில்லாதது. அவருடைய கர்த்தத்துவம் முடிவு பரியந்தமும் நிற்கும்.(தானியேல்" 6 : 26)

   யார் : ராஜாவாகிய தரியு

   யாரிடம் : தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்கள், ஜாதியார், பாஷைக்காரருக்கும் எழுதினது

   எப்போது : பிரதானிகள், தேசாதிபதிகளின் சதி ஆலோசனைப்படி, ராஜா கட்டளையிட சிங்கங்களின் கெபியிலே போடப்பட்ட தானியேலை, தேவன் தம்முடைய தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயைக் கட்டிப் போட்டுப் பாதுகாத்தார். அதைக்கண்ட ராஜா தன்னில் மிகவும் சந்தோஷப்பட்டு தன் தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் இவ்வாறு எழுதி அனுப்பினான்.

III ***<u>ஓரிரு வார்த்தைகளில் விடையளி :</u>*** (2 Mark)

1. தரியு தன் ராஜ்யத்தில் எத்தனை தேசாதிபதிகளையும், பிரதானிகளையும் ஏற்படுத்தினான்?
   120 தேசாதிபதிகள், 3 பிரதானிகள். (தானியேல் 6 : 1, 2)

2. தரியு ராஜா ஏற்படுத்திய மூன்று பிரதானிகளில் முதலாவது பிரதானி யார்?
   தானியேல் (தானியேல் 6 : 3)

3. தரியு ராஜா தானியேலை தன்னுடைய ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த வேண்டும் என்று ஏன் நினைத்தான்?
   தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தபடியால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த வேண்டும் என்று ராஜா நினைத்தான். (தானியேல் 6 : 3)

4. தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால், ராஜா அவனை எந்த பதவிக்கு ஏற்படுத்த நினைத்தான்?
   தானியேலை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த வேண்டும் என்று ராஜா நினைத்தான்.(தானியேல் 6 : 3)

5. தானியேலிடத்தில் குற்றம் கண்டு பிடிக்க, பிரதானிகளும், தேசாதிபதிகளும் எதிலே முகாந்தரத்தைத் தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை?
   ராஜ்யத்தின் விசாரிப்பில் (தானியேல் 6 : 4)

6. ராஜ்யத்தின் விசாரிப்பில் தானியேல் எப்படிப்பட்டவனாயிருந்தான்?
   ராஜ்யத்தின் விசாரிப்பில் தானியேல் உண்மையுள்ளவனாயிருந்தான். (தானியேல் 6 : 4)

7. பிரதானிகளும், தேசாதிபதிகளும் ஏன் தானியேலிடத்தில் குற்றங்கண்டு பிடிக்கத் தேடினார்கள்?
   பொறாமையினால் தானியேலிடத்தில் குற்றங்கண்டு பிடிக்கத் தேடினார்கள். (பாடத்திட்டம்)

8. தானியேலின் மீது பொறாமை கொண்டவர்கள் யார்?
   பிரதானிகளும், தேசாதிபதிகளும் தானியேலின் மீது பொறாமை கொண்டார்கள். (பாடத்திட்டம்)

9. தானியேலின் மீது பொறாமை கொண்ட மனிதர் ராஜ்யத்தின் விசாரிப்பிலே அவனிடம் யாதொரு குற்றமும் கண்டு பிடிக்க முடியாதபடியால் எந்த விஷயத்தில் குற்றப்படுத்த முகாந்தரம் தேடினார்கள்?

ராஜ்யத்தின் விசாரிப்பிலே அவனிடம் யாதொரு குற்றமும் கண்டுபிடிக்க முடியாதபடியால் தேவனைப்பற்றிய வேத விஷயத்திலே குற்றப்படுத்த முகாந்தரம் தேடினார்கள் (தானியேல் 6 : 5)

10. தினம் மூன்று வேளையும் எருசலேமுக்கு நேராக, தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தியது யார்?
தானியேல் (தானியேல் 6 : 10)

11. தானியேல் தினமும் எத்தனை வேளை ஜெபித்தான்?
மூன்று வேளை (தானியேல் 6 : 10)

12. *தானியேலின் மேல் பிரதானிகளும், தேசாதிபதிகளும் குற்றஞ்சாட்டிய போது மிகவும் சஞ்சலப்பட்டது யார்?*
தரியு ராஜா (தானியேல் 6 : 14)

13. ராஜாவின் கட்டளையை மீறின தானியேலை ராஜா எங்கே போடச் சொன்னான்?
சிங்கங்களின் கெபியில் போடச் சொன்னான். (தானியேல் 6 : 16)

14. தானியேல் சிங்கங்களின் கெபியில் போடப்பட்ட போது ராஜா தானியேலிடம் கூறியது என்ன?
ராஜா தானியேலை நோக்கி, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னை தப்புவிப்பார் என்றான். (தானியேல் 6 : 16)

15. ஒரு இராமுழுவதும் போஜனம் பண்ணாமலும் நித்திரை செய்யாமலுமிருந்த ராஜா யார்?
தரியு இராஜா (தானியேல் 6 : 18)

16. இடைவிடாமல் தேவனை ஆராதிக்கிறவன் என்று தரியு ராஜாவால் சாட்சிபெற்ற மனுஷன் யார்?
தானியேல் (தானியேல் 6 : 20)

17. தேவனுக்கு முன்பாக குற்றமற்றவனாய் காணப்பட்டது யார்?
தானியேல் (தானியேல் 6 : 22)

18. தரியுவின் ராஜ்யபார காலத்திலும் கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும் யாருடைய காரியம் ஜெயமாயிருந்தது?
தானியேலுடைய காரியம் (தானியேல் 6 : 28)

19. தரியு ராஜாவுக்கு முன்பாக நீதிக்கேடு செய்யாதிருந்த பிரதானி யார்?
தானியேல் (தானியேல் 6 : 22)

20. நாம் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக குற்றமற்ற மனச்சாட்சி உடையவர்களாய் இருந்தால் மனுஷருடைய சதிகள் ஒன்றும் நம்மை சேதப்படுத்தாது என்பதற்கு யாருடைய வாழ்க்கை நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது?
தானியேலுடைய வாழ்க்கை (போதனை)

IV *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*

1. தரியு ராஜா தன் ராஜ்யத்தின் மேல் தேசாதிபதிகளையும் பிரதானிகளையும் ஏன் ஏற்படுத்தினான்?
தரியு ராஜா தன் இராஜ்யம் முழுவதையும் ஆளும்படிக்குத் தேசாதிபதிகளையும், ராஜாவுக்கு நஷ்டம் வராதபடிக்கு தேசாதிபதிகள் கணக்கு ஒப்புவிக்கிறதற்காக அவர்களுக்கு மேலாக பிரதானிகளையும் ஏற்படுத்தினான். (தானியேல் 6 : 2)

2. தானியேலை குற்றம்படுத்தும்படி முகாந்தரம் தேடினவர்கள் யார்? தானியேலின் மேல் சுமத்த யாதொரு குற்றமும், குறையும் ஏன் காணப்படவில்லை?
பிரதானிகளும், தேசாதிபதிகளும், தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடிஎவர்கள்.
தானியேல் உண்மையுள்ளவனாய் இருந்தபடியினால் அவன் மேல் சுமத்த யாதொரு குற்றமும், குறைவும் காணப்பட வில்லை. (தானியேல் 6 : 4)

3. தானியேல் சிங்கங்களின் கெபியில் போடப்பட வேண்டும் என்று அவன் மேல் குற்றம் சாட்டினவர்கள் கூறிய போது தரியு என்ன செய்தான்?

இராஜாவாகிய தரியு தன்னில் மிகவும் சஞ்சலப்பட்டு தானியேலைக் காப்பாற்றும் படிக்கு அவன் பேரில் தன் மனதை வைத்து, அவனைத் தப்புவிக்கிறதற்காகச் சூரியன் அஸ்தமிக்கு மட்டும் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தான். (தானியேல் 6 : 14)

4. தானியேல் சிங்கங்களின் கெபியில் போட்ட பின்பு தரியு ராஜா என்ன செய்தான்?

தரியு ராஜா தன் அரண்மனைக்குப் போய், இராமுழுதும் போஜனம் பண்ணாமலும், கீதவாத்தியம் முதலானவைகளைத் தனக்கு முன்பாக வரவொட்டாமலும் இருந்தான். அவனுக்கு நித்திரையும் வராமற்போயிற்று.. (தானியேல் 6 : 18)

5. தானியேலை சிங்கங்கள் சேதப்படுத்தாதபடிக்கு, தேவன் ஏன் தம் தூதனை அனுப்பி அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார்?

1. *தானியேல் தேவனுக்கு முன்பாக குற்றமற்றவராக இருந்தார். (தானி 6 : 22)*
2. *தேவன் பேரில் விசுவாசித்திருந்தார். (தானி 6 : 23)*

6. தானியேலின் மேல் குற்றம் சாட்டின மனுஷரை ராஜா என்ன செய்யச் சொன்னான்? அவர்களுக்கு என்ன சம்பவித்தது?

தானியேல் மேல் குற்றம் சாட்டின மனுஷர்களையும், அவர்கள் குமாரரையும் அவர்கள் மனைவிகளையும் சிங்கங்களின் கெபியிலே போடச் சொன்னான். அவர்கள் கெபியின் அடியிலே சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள் மேல் பாய்ந்து அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப் போட்டது. (தானியேல் 6 : 24)

V *சுருக்கமான விடையளி :* (4 Marks)

1. தானியேலை அவன் தேவனைப்பற்றிய விஷயத்தில் குற்றப்படுத்தும்படியாக தரியு ராஜாவின் ராஜ்யத்திலுள்ள தேசாதிபதிகளும் பிரதானிகளும் சதி ஆலோசனை பண்ணி பிறப்பித்த கட்டளை யாது? கட்டளையை அறிந்த பின்னரும் தானியேல் என்ன செய்தான்? பிரதானிகளும் தேசாதிபதிகளும் ராஜாவுக்கு முன்பாக தானியேல் மீது எவ்வாறு குற்றம் சாட்டினார்கள்?

தேசாதிபதிகளும், பிரதானிகளும் சதி ஆலோசனை பண்ணி, முப்பது நாள் வரையிலும் எவனாகிலும் ராஜாவைத் தவிர எந்த தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி யாதொரு காரியத்தைக் குறித்தும் விண்ணப்பம் பண்ணக் கூடாது என்ற கட்டளையை பிறப்பித்தார்கள்.

அந்தக் கட்டளையை தானியேல் அறிந்தபின்னரும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேலறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்.

தானியேலை அவன் தேவனைப்பற்றிய விஷயத்தில் குற்றப்படுத்தும் படியாக தரியு ராஜாவின் ராஜ்யத்திலுள்ள தேசாதிபதிகளும் பிரதானிகளும் ராஜாவுக்கு முன்பாக வந்து ராஜா பிறப்பித்த கட்டளையை அவனுக்கு ஞாபகப்படுத்தி சிறைபிடிக்கப்பட்ட யூதேயா தேசத்தின் புத்திரரில் தானியேல் என்பவன் உம்மையும் நீர் கையெழுத்து வைத்துக் கொடுத்த கட்டளையையும் மதியாமல் தினமும் மூன்று வேளையும் தான் பண்ணும் விண்ணப்பத்தைப் பண்ணுகிறான் என்று குற்றம் சாற்றினார்கள். (தானியேல் 6 : 7 – 10, 11, 13)

2. சிங்கங்களின் கெபியில் தானியேல் என்ற பாடத்திலிருந்து நீ அறியும் தானியேலின் குணநலன்களை எழுது.

1. *ராஜாவாகிய தரியுவின் இராஜ்யமெங்கும் உள்ள நூற்றிருபது தேசாதிபதிகளும் கணக்கொப்புவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மூன்று பிரதானிகளில் தானியேல் முதலாவதானவனாயிருந்தான். (தானியேல் 6 : 2)*
2. *ராஜாவுக்கு நஷ்டம் வராதபடிக்கு கண்காணிப்பதில் அவன் கருத்துள்ளவனாயிருந்தான். ஆகவே அவன் பிரதானிகளுக்கும், தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாயிருந்தான். (தானியேல் 6 : 2,3)*
3. *தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தது. எனவே இராஜா அவனை தன் இராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த நினைத்தான். (தானியேல் 6 : 3)*
4. *ராஜ்யத்தின் விசாரிப்பில் தானியேல் உண்மையுள்ளவனாய் இருந்தான். அவன் மீது பொறாமைக் கொண்ட பிரதானிகளும், தேசாதிபதிகளும் அவன் மேல் சுமத்த யாதொரு குற்றமும், குறைவும் அவனிடத்தில் காண முடியவில்லை. (தானியேல் 6 : 4)*
5. *தானியேல் மனுஷருக்கோ சிங்கங்களின் கெபிக்கோ, ராஜாவின் கட்டளைக்கோ பயப்படாதவனாய் (தேவனுக்கு மட்டும் பயப்படுகிறவனாய்) இருந்தான். எனவே*

பத்திரத்திற்கு கையெழுத்து வைக்கப்பட்டதை அறிந்த போதிலும் தைரியமாக, எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, தான் முன் செய்து வந்தபடியே தினம் மூன்று வேளையும் ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான். தானியேல் அசைக்க முடியாத ஜெப ஜீவியம் உள்ளவனாய் இருந்தான். தன் உயிருக்கே ஆபத்து நேரிடும் என்று அறிந்த போதிலும் தன் ஜெபநேரத்தைத் தவற விடாமல் தினம் மூன்று வேளையும் ஜெபித்தான். (தானியேல் 6 : 10)

6. *தானியேல் தரியு ராஜாவினால் மிகவும் நேசிக்கப்பட்டவனாகவும் கனம் பண்ணப்பட்டவனாகவும் இருந்தான். எனவே தான் பிரதானிகளும், தேசாதிபதிகளும் அவனுக்கு விரோதமாய்ச் சதி ஆலோசனை பண்ணி அவன் மீது குற்றம் சுமத்திய போது ராஜா தன்னில் மிகவும் கலங்கி அவன் பேரில் தன் மனதை வைத்து, அவனைத் தப்புவிக்கிறதற்காக மிகவும் பிரயாசப்பட்டான். (தானியேல் 6 : 14, 18, 20, 23)*
7. *தானியேல் தன் தேவனை இடைவிடாமல் ஆராதிக்கிறவன் என்று ராஜாவினிடத்தில் சாட்சி பெற்றவனாயிருந்தான். (தானியேல் 6 : 16, 20)*
8. *தானியேல் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக குற்றமற்ற மனசாட்சி உடையவனாயிருந்தான். தேவனுக்கு முன்பாகக் குற்றமற்றவனாய்க் காணப்பட்டான். தானியேல் இராஜாவுக்கு முன்பாகவும் நீதிகேடு செய்யாதவனாக இருந்தான்.(தானி 6: 22)*
9. *தானியேல் தன்தேவன் பேரில் விசுவாசம் உள்ளவனாயிருந்தான் ஆகவே அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை.(தானியேல் 6 : 23)*
10. *மேதியனாகிய தரியு ஆளுகை செய்த நூற்றிருபது தேசங்களிலுமுள்ள ஜனங்கள் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கி பயப்பட வேண்டுமென்ற கட்டளைப் பிறப்பிக்கப்படவும் கர்த்தரின் நாமம் மகிமைப்படவும் புறஜாதி ராஜா கூட தேவனைப் புகழவும் தானியேல் காரணமாயிருந்தான். (தானியேல் 6 : 26)*

இப்படிப்பட்ட விசேஷ குணநலன்கள் தானியேலிடத்தில் காணப்பட்டன.

VI <u>போதனை :</u>

நாம் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக குற்றமற்ற மனச்சாட்சியுள்ளவர்களாயிருக்கும் போது, மனுஷருடைய சதிதிட்டங்கள் ஒன்றும் நம்மைச் சேதப்படுத்த முடியாது.

****

யோனா மீன் வயிற்றில் இருந்தது
(யோனா அதிகாரம் 1-4)

I *மனப்பாட வசனம் :* (2 Marks)
லூக்கா 12 : 47
தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்.

II *யார் யாரிடம் எப்போது கூறியது:* (2 ½ Marks)

1. a."நீ நித்திரை பண்ணுகிறது என்ன"?
b."எழுந்திருந்து உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள்."
c. "நாம் அழிந்து போகாதபடிக்குச் சுவாமி ஒரு வேளை நம்மை நினைத்தருளுவார்". (யோனா 1 : 6)
யார் : தர்ஷீசுக்கு போகிற கப்பலின் மாலுமி
யாரிடம : யோனாவிடம்
எப்போது : மகா நகரமாகிய நினிவேயின் அக்கிரமம் கர்த்தருடைய சமூகத்தில் வந்து எட்டியதால் கர்த்தர் யோனாவிடம், ''நீ நினிவேக்குப் போய் அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி'' என்று சொன்னார். அப்போது யோனா கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி தரிஷீசுக்குப் ஓடிப்போகும்படி எழுந்து யோப்பாவுக்குப் போய், தர்ஷீசுக்குப் போகிற கப்பலைக் கண்டு, கூலிக் கொடுத்து, தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான். கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார். கடலிலே கப்பல் உடையும் என்று நினைக்கத் தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. அப்பொழுது கப்பற்காரர் பயந்து அவனவன் தன் தன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்து சரக்குகளைக் கப்பலில் எறிந்து விட்டார்கள். யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப் போய் படுத்துக் கொண்டு, அயர்ந்த நித்திரை பண்ணினான். அப்பொழுது கப்பலின் மாலுமி அவனிடத்தில் வந்து இவ்வாறு கூறினான்.

2. a."யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நீ எங்களுக்குச் சொல்லவேண்டும்"
b. "உன் தொழில் என்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்?"
c. "உன் தேசம் எது? நீ என்ன ஜாதியான் ?" (யோனா 1 : 8)
யார் : கப்பற்காரர்
யாரிடம் : யோனாவிடம்
எப்போது : கர்த்தர் யோனாவை நினிவேக்குப் போகச் சொன்னபோது, அவன் கர்த்தருடைய சமூகத்தை விட்டு விலகும்படி தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினதினால் கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார். அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. அப்பொழுது கப்பற்காரார், ''யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நாம் அறியும்படிக்கு சீட்டுப் போடுவோம் வாருங்கள்'' என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டு சீட்டுப்போட்டார்கள். யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது. அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி இவ்வாறு கேட்டார்கள்.

3. "நான் எபிரேயன்: சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன்." (யோனா 1 : 9)
யார் : யோனா
யாரிடம் : கப்பற்காரரிடம்

எப்போது : *யோனா கர்த்தருடைய வார்த்தையின்படி நினிவேக்குப் போகாமல் கர்த்தருடைய சமூகத்தை விட்டு விலகும்படி தர்ஷீசுக்குப் போக கப்பல் ஏறியதால் கர்த்தர் சமுத்திரத்தின் மீது பெருங்காற்றை வரவிட்டார். கடலிலே பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. கப்பற்காரர் மிகவும் பயந்து யார் நிமித்தம் தங்களுக்கு இந்த ஆபத்து நேரிட்டதென்று அறியும் படி அவர்கள் சீட்டுப் போட்டபோது சீட்டு யோனாவின் பேருக்கு விழுந்தது. அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, ''யார் நிமித்தம் இந்த ஆபத்து நேரிட்டதென்று நீ எங்களுக்குச் சொல்ல வேண்டும். உன் தொழில் என்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது? நீ என்ன ஜாதியான்?'' என்று கேட்டார்கள். அதற்கு மறுமொழியாக யோனா இவ்வாறு கூறினான்.*

4. a)"நீ ஏன் இதைச் செய்தாய்?**"**

b)"சமுத்திரம் நமக்கு அமரும்படி நாங்கள் உனக்கு என்ன செய்ய வேண்டும்**"**(யோனா1:11)

யார் : *கப்பற்காரர்*

யாரிடம் : *யோனாவிடம்*

எப்போது : *யோனா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து நினிவேக்கு போகாமல் தர்ஷீசுக்குப் போகப் புறப்பட்டபடியால் கர்த்தர் சமுத்திரத்தின் மீது பெருங்காற்றை வரவிட்டார்.அப்பொழுது கப்பற்காரர் யார் நிமித்தம் தங்களுக்கு இந்த ஆபத்து நேரிட்டதென்று அறியும் படி அவர்கள் சீட்டுப் போட்டபோது சீட்டு யோனாவின் பேருக்கு விழுந்தது. ஆகவே அவர்கள் யோனாவிடம், ''உன் தொழில் என்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது? நீ என்ன ஜாதியான்?'' என்று கேட்டார்கள். அதற்கு அவன், ''நான் எபிரெயன் சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன். கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகிறவன்'' என்று அறிவித்தான். அப்போது அவர்கள் அவனிடம் இவ்வாறு கேட்டார்கள்.*

5. "என்னிமித்தம் இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள் மேல் வந்ததென்பதை நான் அறிவேன்.**"** (யோனா 1 : 12)

யார் : *யோனா*

யாரிடம் : *கப்பற்காரரிடம்*

எப்போது : *யோனா கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப் போகிறவன் என்று தங்களுக்கு அறிவித்ததினால் கப்பற்காரர் மிகவும் பயந்து, ''நீ ஏன் இதைச் செய்தாய்'' என்றார்கள். பின்னும் சமுத்திரம் அதிகமாய்க் கொந்தளித்துக் கொண்டிருந்தபடியால் அவர்கள் அவனை நோக்கி ''சமுத்திரம் நமக்கு அமரும்படி நாங்கள் உனக்கு என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டார்கள். அப்பொழுது யோனா, ''நீங்கள் என்னை எடுத்து சமுத்திரத்திலே போட்டு விடுங்கள். அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்திருக்கும். என்னிமித்தம் இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள் மேல் வந்ததென்பதை நான் அறிவேன்'' என்றான்.*

6. a) "இந்த மனுஷனுடைய ஜீவனினிமித்தம் எங்களை அழித்துப் போடாதேயும்.**"**

b) "குற்றமில்லாத இரத்தப்பழியை எங்கள் மேல் சுமத்தாதேயும்.**"**

c) "தேவரீர் கர்த்தர். உமக்குச் சித்தமாயிருக்கிறபடி செய்கிறீர்**"** (யோனா 1 : 14)

யார் : *கப்பற்காரர்கள்*

யாரிடம் : *கர்த்தரிடம்*

எப்போது : *யோனா கப்பற்காரர்களிடத்தில, ''என்னை எடுத்துக் சமுத்திரத்தில் போட்டு விடுங்கள் . அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்திருக்கும்'' என்று கூறினான். அப்போது அந்த மனுஷர் யோனாவை சமுத்திரத்தில் போட மனதின்றி, கரைசேரும்படி வேகமாய்த் தண்டுவலித்தார்கள். ஆனாலும் சமுத்திரம் வெகு மும்முரமாய்க் கொந்தளித்துக் கொண்டேயிருந்தபடியால் அவர்களால் கூடாமற் போயிற்று. அப்பொழுது அவர்கள் கர்த்தரை நோக்கி இவ்வாறு கூறினார்கள்.*

7. "சமுத்திரத்தின் நடுமையமாகிய ஆழத்திலே நீர் என்னைத் தள்ளிவிட்டீர்**"** (யோனா2 : 3)

யார் : *யோனா*

யாரிடம் : *கர்த்தரிடம்*

எப்போது : கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி கப்பல் ஏறினான். கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார். கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. கப்பற்காரர் யார் நிமித்தம் இந்த ஆபத்து நேரிட்டதென்று அறியும்படிக்கு சீட்டு போட்டு, யோனாவின் நிமித்தம் வந்ததென்று அறிந்து கொண்டார்கள். பின்பு அவர்கள் யோனாவிடம், ''சமுத்திரம் நமக்கு அமரும்படி நாங்கள் உனக்கு என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டார்கள். அதற்கு அவன், ''என்னை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டு விடுங்கள். அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்திருக்கும்'' என்றான். அதன்படி அவர்கள் யோனாவை எடுத்து சமுத்திரத்தில் போட்டு விட்டார்கள். கர்த்தர் யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தியிருந்தார். அந்த மீனின் வயிற்றிலிருந்து யோனா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி இவ்வாறு விண்ணப்பம் பண்ணினான்.

8. "இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்." (யோனா 3 : 4)

யார் : யோனா
யாரிடம் : நினிவேயிலுள்ள ஜனங்களிடம்
எப்போது : கர்த்தருடைய வார்த்தை இரண்டாந்தரம் யோனாவுக்கு உண்டாகி, ''நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய் நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி'' என்றார். அப்பொழுது யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான். யோனா நகரத்தில் பிரவேசித்து ஒருநாள் பிரயாணம் பண்ணி இவ்வாறு பிரசங்கம் பண்ணினான்.

9. "யாருக்குத் தெரியும், நாம் அழிந்து போகாதபடி ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிர கோபத்தை விட்டுத் திரும்பினாலும் திரும்புவார்". (யோனா 3 : 9)

யார் : நினிவேயின் ராஜா
யாரிடம் : நினிவேயின் ஜனங்களுக்குக் கட்டளையாகச் சொன்னது.
ஏப்போது : யோனாவுக்கு இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தையுண்டான போது அவன் எழுந்து நினிவேக்குப் போய் இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று பிரசங்கித்தான். அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்களும், நினிவேயின் இராஜாவும் தேவனை விசுவாசித்து தங்களைத் தாழ்த்தினார்கள். பெரியோர் முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் இராஜாவுக்கு எட்டின போது அவன் தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திக் கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும் ராஜா தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம் பண்ணின கட்டளையாக இந்த வார்த்தைகளை கூறினான்.

10. "நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ." (யோனா 4 : 4)

யார் : கர்த்தர்
யாரிடம் : யோனாவிடம்
எப்போது : நினிவேயின் ஜனங்கள் தங்கள் பொல்லாத வழியை விட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து தான் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு செய்யாதிருந்தார். இதனால் யோனா மிகவும் விசனமடைந்து, கடுங்கோபங்கொண்டு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி, 'ஆ, கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும் போதே நான் இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன். நீர் இரக்கமும் மனஉருக்கமும் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவர் என்று அறிவேன். இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னை விட்டு எடுத்துக் கொள்ளும். நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும்'' என்றான். அதற்குக் கர்த்தர், ''நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ'' என்றார்.

11. "நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ". (யோனா 4 : 9)

யார் : கர்த்தர்

யாரிடம் : யோனாவிடம்

எப்போது : யோனாவுடைய தலையின்மேல் நிழலுண்டாயிருக்கவும், அவனை அவனுடைய மனமடிவுக்கு நீங்கலாக்கவும் தேவனாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டு அதை அவன்மேல் ஓங்கிவளரப் பண்ணினார். அந்த ஆமணக்கின்மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான். மறுநாளிலே தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார், அது ஆமணக்குச் செடியை அரித்துப் போட்டது. அதினால் அது காய்ந்து போயிற்று. சூரியன் உதித்தபோது தேவன் உஷ்ணமான கீழ்க் காற்றைக் கட்டளையிட்டார். அப்பொழுது வெயில் யோனாவுடைய தலையின் மேல் படுகிறதினால் அவன் சோர்ந்து போய், தனக்குள்ளே சாவை விரும்பி, 'நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும்" என்றான். அப்பொழுது தேவன் யோனாவை நோக்கி இவ்வாறு கேட்டார்.

12. **a)** "நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்து போனதுமான ஆமணக்குக்காக பரிதபிக்கிறாயே".(யோனா 4 : 10)

b) "வலது கைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ". (யோனா 4 : 11)

யார் : கர்த்தர்

யாரிடம் : யோனாவிடம்

எப்போது : ஆமணக்குச் செடி காய்ந்து போய் வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால் அவன் சோர்ந்து போன போது தேவன் யோனாவை நோக்கி, "நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ" என்றார். அதற்கு யோனா, "நான் மரணபரியந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லது தான்" என்றான். அப்பொழுது கர்த்தர் யோனாவிடம் இந்த வார்த்தைகளைக் கூறினார்.

III <u>ஓரிரு வார்த்தைகளில் விடையளி :</u> (2 Mark)

1. யோனா யாருடைய குமாரன்?
   யோனா அமித்தாயின் குமாரன் (யோனா 1 : 1)

2. கர்த்தர் யோனாவை எந்த நகரத்துக்கு விரோதமாகப் பிரசங்கிக்கச் சொன்னார்?
   மகா நகரமாகிய நினிவேக்கு விரோதமாகப் பிரசங்கிக்கும்படி கர்த்தர் யோனாவிடம் கூறினார். (யோனா 1 : 2)

3. யாருடைய அக்கிரமம் தன்னுடைய சமூகத்தில் வந்து எட்டினது என்று கர்த்தர் யோனாவிடம் கூறினார்?
   நினிவேயிலுள்ள ஜனங்களுடைய அக்கிரமம் தன்னுடைய சமூகத்தில் வந்து எட்டினது என்று கர்த்தர் யோனாவிடம் கூறினார். (யோனா 1 : 2)

4. யோனா கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி எங்கு ஓடிப்போகும்படி கப்பல் ஏறினான்?
   யோனா தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி கப்பல் ஏறினான். (யோனா 1 : 3)

5. யோனா எங்கு போய்த் தர்ஷீசுக்கு கப்பல் ஏறினான்?
   யோனா யோப்பாவிற்குப் போய் தர்ஷீசுக்குப் போகும்படி கப்பல் ஏறினான். (யோனா 1 : 3)

6. யோனா தர்ஷீசுக்கு போகக் கப்பல் ஏறின போது கர்த்தர் சமுத்திரத்தின் மேல் எதை வரவிட்டார்?
   கர்த்தர் சமுத்திரத்தின் மேல் ஒரு பெருங்காற்றை வரவிட்டார். (யோனா 1 : 4)

7. கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப் போய் படுத்துக் கொண்டு அயர்ந்த நித்திரை பண்ணிய தேவனுடைய தீர்க்கதரிசி யார்?
யோனா (யோனா 1 : 5)

8. தர்ஷீசுக்குப் போகிற கப்பலின் கப்பற்காரர் சீட்டுப் போட்டபோது சீட்டு யார் பேருக்கு விழுந்தது?
சீட்டு யோனாவின் பேருக்கு விழுந்தது. (யோனா 1 : 7)

9. சமுத்திரம் தன் மும்முரத்தை விட்டு அமர்ந்த போது, கர்த்தருக்கு மிகவும் பயந்து, கர்த்தருக்குப் பலியிட்டுப் பொருத்தனைகளைப் பண்ணினது யார்?
கப்பற்காரர்கள் (யோனா 1 : 5, 15,16)

10. யோனாவை விழுங்கும்படி தேவன் எதை ஆயத்தப்படுத்தியிருந்தார்?
ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தியிருந்தார். (யோனா 1 : 17)

11. யோனா மீனின் வயிற்றில் எத்தனை நாள் இருந்தான்?
யோனா இராப்பகல் மூன்று நாள் மீனின் வயிற்றில் இருந்தான். (யோனா 1 : 17)

12. இன்னமும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் என்று விண்ணப்பம் பண்ணியது யார்? எங்கேயிருந்து விண்ணப்பம் பண்ணினான்?
யோனா மீனின் வயிற்றிலிருந்து விண்ணப்பம் பண்ணினான். (யோனா 2 : 4)

13. யார் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்?
பொய்யான மாயையைப் பற்றிக் கொண்டிருக்கிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள். (யோனா 2 : 8)

14. துதியின் சத்தத்தோடே கர்த்தருக்குப் பலியிடுவேன் என்று கூறியது யார்?
யோனா. (யோனா 2 : 9)

15. மூன்று நாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது எது?
நினிவே பட்டணம். (யோனா 3 : 3)

16. யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு தேவனை விசுவாசித்து உபவாசம் செய்யும்படி கூறியது யார்?
நினிவேயிலுள்ள ஜனங்கள். (யோனா 3 : 5)

17. யோனாவுடைய தலையின்மேல் நிழல் உண்டாயிருக்கவும் அவனை அவனுடைய மனமடிவுக்கு நீங்கலாக்கவும் தேவனாகிய கர்த்தர் என்ன செய்தார்?
தேவன் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டார். (யோனா 4 : 6)

18. ஆமணக்கினால் மிகவும் சந்தோஷப்பட்டது யார்? ஆமணக்கை அழிக்கும்படி கர்த்தர் யாருக்கு கட்டளையிட்டார் ?
1 . யோனா 2. பூச்சிக்கு கட்டளையிட்டார். (யோனா 4 : 6, 7)

19. வலது கைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரைக் கொண்ட நினிவே பட்டணத்திற்காக பரிதபித்தது யார்?
கர்த்தர். (யோனா 4 : 11)

IV <u>*ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*</u>

1. யோனாவுக்கு முதலாந்தரம் உண்டான கர்த்தருடைய வார்த்தை என்ன?
முதலாந்தரம் யோனாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி. அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது என்றார். (யோனா 1 : 1, 2)

2. கர்த்தருடைய சமூகத்தினின்று விலகும்படி யோனா என்ன செய்தான்?
கர்த்தருடைய சமூகத்தினின்று விலகும்படியாக யோனா யோப்பாவுக்குப் போய் தர்ஷீசுக்கு போகிற ஒரு கப்பலைக் கண்டு கூலி கொடுத்து அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான். (யோனா 1 : 3)

3. யோனா தர்ஷீசுக்குப் போகும்படி கப்பல் ஏறிய போது என்ன நடந்தது?

கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார். அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று.(யோனா 1 : 4)

4. கடலிலே பெரிய கொந்தளிப்பு உண்டானவுடன் கப்பற்காரர் என்ன செய்தார்கள்? யோனா என்ன செய்தான்?

கடலிலே பெரிய கொந்தளிப்பு உண்டான போது கப்பற்காரர் பயந்து அவனவன் தன் தன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்து பாரத்தை லேசாக்கும்படிக் கப்பலில் இருந்த சரக்குகளைச் சமுத்திரத்தில் எறிந்து விட்டார்கள். (யோனா 1 : 5)

யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப் போய்ப் படுத்துக் கொண்டு, அயர்ந்த நித்திரை பண்ணினான். (யோனா 1 : 5)

5. அயர்ந்த நித்திரை பண்ணிய யோனாவை நோக்கி மாலுமி கூறியது என்ன?

மாலுமி யோனாவை நோக்கி, ''நீ நித்திரை பண்ணுகிறது என்ன? எழுந்திருந்து உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள். நாம் அழிந்து போகாதபடிக்குச் சுவாமி ஒருவேளை நம்மை நினைத்தருளுவார்'' என்றான். (யோனா 1 : 6)

6. சமுத்திரம் அமரும்படி யோனா கப்பற்காரர்களுக்குக் கொடுத்த ஆலோசனை என்ன?

சமுத்திரம் அமரும்படி யோனா கப்பற்காரர்களுக்கு ஆலோசனையாக அவர்களை நோக்கி, ''நீங்கள் என்னை எடுத்து சமுத்திரத்திலே போட்டு விடுங்கள். அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்திருக்கும். என்னிமித்தம் இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள் மேல் வந்ததென்பதை நான் அறிவேன்'' என்றான். (யோனா 1 : 12)

7. சமுத்திரம் எப்பொழுது அமர்ந்தது?

கப்பற்காரர்கள் யோனாவை எடுத்து சமுத்திரத்திலே போட்டார்கள். அப்பொழுது சமுத்திரம் தன் மும்முரத்தை விட்டு அமர்ந்தது. (யோனா 1 : 15)

8. சமுத்திரத்தில் போடப்பட்ட யோனா எவ்வாறு தப்புவிக்கப்பட்டான்?

சமுத்திரத்தில் போடப்பட்ட யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தம் பண்ணியிருந்தார். அந்த மீனின் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான். மீனின் வயிற்றிலிருந்து தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். அப்போது கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார். அது யோனாவைக் கரையிலே கக்கி விட்டது. (யோனா 1 : 17, 2 : 1,10)

9. யோனா கர்த்தரை எப்போது நினைத்தான்? அப்போது அவனுக்கு கிடைத்த ஆசீர்வாதம் என்ன?

யோனா தன்னுடைய ஆத்துமா தன்னில் தொய்ந்து போகையில் கர்த்தரை நினைத்தான். அப்போது அவனுடைய விண்ணப்பம் கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்திலே அவரிடத்தில் வந்து சேர்ந்தது. (யோனா 2 : 7)

10. மீனின் வயிற்றிலிருந்த யோனா கர்த்தரிடத்தில் செய்த தீர்மானங்கள் என்ன?

1. இன்னமும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன். (யோனா 2 : 4)

2. துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன். (யோனா 2 : 9)

3. நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன் என்று தீர்மானம் பண்ணினான். (யோனா 2 : 9)

11. கர்த்தருடைய வார்த்தை இரண்டாந்தரம் யோனாவுக்கு உண்டாகி அவர் கூறியது என்ன?

இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி, ''அவர் நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய் நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி'' என்றார். (யோனா 3 :1,2)

12. யோனா நினிவேயில் செய்த பிரசங்கம் என்ன?

யோனா நினிவேயில் பிரவேசித்து ஒரு நாள் பிரயாணம்பண்ணி, இன்னும் நாற்பது நாள் உண்டு. அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டு போம் என்று பிரசங்கித்தான். (யோனா 3 : 4)

13. யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டபோது நினிவேயிலுள்ள ஜனங்கள் என்ன செய்தார்கள்?

யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டதும் நினிவேயிலுள்ள் ஜனங்கள் தேவனை விசுவாசித்து உபவாசஞ் செய்யும்படிக் கூறினார்கள். பெரியோர் முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள். (யோனா 3 : 5)

14. யோனாவின் பிரசங்கத்தைக் கேட்ட போது நினிவேயின் இராஜா தன்னை எவ்வாறு தாழ்த்தினான்?
நினிவேயின் இராஜா தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக் கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான்.(யோனா 3 : 6)

15. கர்த்தர் நினிவேயின் ஜனங்களுக்கு செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கை ஏன் செய்ய வில்லை?
நினிவேயின் ஜனங்கள் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டு திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து , தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார் (யோனா 3 : 10)

16. தேவனாகிய கர்த்தரை யோனா எப்படிப்பட்டவரென்று அறிந்திருந்தான்?
யோனா தன் தேவனாகிய கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவன் என்று அறிந்திருந்தான். (யோனா 4 : 2)

17. தேவன் ஏன் ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டார்?
யோனாவுடைய தலையின் மேல் நிழலுண்டாயிருக்கவும் அவனை அவனுடைய மனமடிவுக்கு நீங்கலாக்கவும் தேவனாகிய கர்த்தர் ஓர் ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டார். (யோனா 4 : 6)

18. கர்த்தர் யாருக்கு இரக்கங்காட்ட ஆயத்தமாயிருக்கிறார்?
கர்த்தர் தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிற எந்த மனிதனுக்கும் இரக்கங்காட்ட ஆயத்தமாயிருக்கிறார். (போதனை)

19. பாடத்திலிருந்து நீ கற்றுக்கொள்வது யாது?
நினிவேயின் ஜனங்கள் கொடிய பாவிகளாயிருந்த போதிலும், அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, தங்களைத் தாழ்த்தி உபவாசித்து தேவனிடம் திரும்பியபோது அவர் அவர்கள் மேல் இரக்கங்கொண்டார். அது போல தன் பாவங்களுக்காக மனஸ்தாப்படுகிற எந்த மனிதனுக்கும் இரக்கங்காட்ட அவர் ஆயத்தமாயிருக்கிறார். (போதனை)

V <u>*சுருக்கமான விடையளி*</u> **:** (4 Marks)

1. யோனாவின் கீழ்ப்படியாமையைப் பற்றி எழுது.

யோனாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர், "நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி. அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது" என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி தர்ஷீசுக்கு போகிற ஒரு கப்பலைக் கண்டு கூலி கொடுத்து தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும் படி அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்.(யோனா1:1 - 3) இவ்விதம் யோனா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமையைக் காட்டினான்.

2. யோனாவினிமித்தம் சமுத்திரத்தில் பெரிய சொந்தளிப்பு ஏற்பட்டது என்பதை கப்பற்காரர் எவ்வாறு அறிந்து கொ்ண்டார்கள்? அப்போது அவர்கள் என்ன கேட்டார்கள்? அவன் கொடுத்த மறுமொழி என்ன?
கப்பலில் இருந்தவர்கள் யார் நிமித்தம் இந்த ஆபத்து நேரிட்டதென்று அறியும் படிக்குச் சீட்டுப் போடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டே சீட்டு போட்டார்கள். சீட்டு யோனாவின் பேருக்கு விழுந்தது. அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, "யார் நிமித்தம் இந்த ஆபத்து நேரிட்டதென்று நீ எங்களுக்குச் சொல்ல வேண்டும் . உன் தொழில் என்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது? நீ என்ன ஜாதியான்?" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "நான்

எபிரெயன் சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன்'' என்றான். (யோனா 1 : 7-9)

3. யோனாவை காப்பாற்றும்படியாக கப்பற்காரர் என்ன செய்தார்கள்? யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே போடுவதற்கு முன்பு அவர்கள் கர்த்தரை நோக்கி எவ்வாறு விண்ணப்பம் பண்ணினார்கள்?

யோனாவை காப்பாற்றும்படி அந்த மனுஷர் வேகமாய்த் தண்டு வலித்தார்கள். ஆனாலும் சமுத்திரம் வெகுமும்முரமாய்ச் கொந்தளித்துக் கொண்டேயிருந்தபடியால் அவர்களால் கூடாமற்போயிற்று.

யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே போடுவதற்கு முன்பு அவர்கள் கர்த்தரை நோக்கி, ''ஆ கர்த்தாவே, இந்த மனுஷனுடைய ஜீவனினிமித்தம் எங்களை அழித்துப் போடாதேயும். குற்றமில்லாத இரத்தப் பழியை எங்கள் மேல் சுமத்தாதேயும். தேவரீர் கர்த்தர்: உமக்குச் சித்தமாயிருக்கிறபடி செய்கிறீர்'' என்று விண்ணப்பம் பண்ணினார்கள். (யோனா 1 : 13, 14)

4. நாற்பது நாளில் நினிவே கவிழ்க்கப்பட்டுபோம் என்ற செய்தியைக் கேட்ட நினிவேயின் ராஜா என்ன செய்தான்? அவனும் அவன் பிரதானிகளும் நிர்ணயம் பண்ணின கட்டளையாக நினிவே பட்டணத்தாருக்கு கூறச் சொன்னது என்ன?

நினிவேயின் ராஜா தான் சிங்காசனத்தை விட்டு எழுந்து தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திக் கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான்.

மேலும் இராஜா தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம் பண்ணின கட்டளையாக, ''நினிவேயிலெங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி, உரத்த சத்தமாய்ச் கூப்பிடவும் அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம் தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள்.

யாருக்குத் தெரியும் நாம் அழிந்து போகாதபடிக்கு ஒரு வேளை தேவன் மனஸ்தாப்பட்டு தம்முடைய உக்கிர கோபத்தை விட்டுத் திரும்பினாலும் திரும்புவார்'' என்று கூறச் சொன்னான். (யோனா 3 : 6-9)

5. கர்த்தர் நினிவேக்குத் தாம் சொல்லியிருந்த தீங்கைச் செய்யாததால் கடுங்கோபங்கொண்ட யோனாவிற்கு ஆமணக்குச் செடி மூலம் தேவன் கற்பித்த பாடம் என்ன?

கர்த்தர் நினிவேக்குத் தாம் சொல்லியிருந்த தீங்கைச் செய்யாதபடியால், விசனமும் கடுங்கோபங்கொண்ட யோனாவிற்குத், தேவன் ஆமணக்கு செடி மூலம் ஒரு பாடம் கற்பித்தார். யோனா நகரத்துக்குக் கிழக்கே போய், அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு, நகரத்துக்குச் சம்பவிக்கப் போகிறதைத் தான் பார்க்கும் மட்டும் அதின் நிழலில் உட்கார்ந்தான். யோனாவுடைய தலையின்மேல் நிழலுண்டாயிருக்கவும், அவனை அவனுடைய மனமடிவுக்கு நீங்கலாக்கவும் தேவனாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டு, அதை அவன் மேல் ஓங்கி வளரப் பண்ணினார். அந்த ஆமணக்கின் மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான். மறுநாளிலோ கிழக்கு வெளுக்கும் நேரத்தில் தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார். அது ஆமணக்குச் செடியை அரித்துப் போட்டது. அதினால் அது காய்ந்து போயிற்று. தேவன் உஷ்ணமான கீழக்காற்றைக் கட்டளையிட்டார். வெயில் தலையின்மேல் படுகிறதினால் யோனா சோர்ந்து போய், தனக்குள்ளே சாவை விரும்பி, ''நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும்'' என்றான். அப்போது கர்த்தர் யோனாவிடம், ''நீ பிரயாசப்படாததும் நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும் ஒரு இராத்திரியிலே அழிந்து போனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே. வலது கைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ'' என்றார். (யோனா 4 : 5 - 11)

VI <u>*விரிவான விடையளி :*</u> (10 Marks)

1. நினிவேயின் அக்கிரமம் தேவ சமூகத்தில் வந்து எட்டிய போது தேவன் அந்த பட்டணத்தை இரட்சிக்கும்படி செய்த கிரியைகளை விவரி?

யோனாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர், ''நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி. அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது என்றார். அப்போது யோனா கர்த்தருக்குக்

கீழ்படியாமல் அவர் சமுகத்தினின்று விலகி யோப்பாவுக்குப் போய், தர்ஷீசுக்குப் போகிற கப்பலைக் கண்டு, கூலிக் கொடுத்து, தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான். கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டதால் சமுத்திரத்தில் பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. அப்பொழுது கப்பற்காரர் பயந்து சீட்டுப் போட்டார்கள். யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது. உடனே யோனாவின் ஆலோசனைப்படி யோனாவை எடுத்து சமுத்திரத்தில் போட்டு விட்டார்கள். யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார். அந்த மீனின் வயிற்றில் யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான். அந்த மீனின் வயிற்றிலிருந்து யோனா தன் குற்றத்திற்காக மனஸ்தாபப்பட்டு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிடார். அது யோனாவைக் கரையிலே கக்கி விட்டது.

இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி, ''நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப்போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி'' என்றார்.

யோனா எழுந்து நினிவேக்குப் போய், ''இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப் போம்.'' என்று கூறினான்.

அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசம் செய்யும்படிக்கு கூறினார்கள். பெரியோர் முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள். நினிவேயின் ராஜாவும் தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திக் கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும் ராஜாவும , பிரதானிகளும் சேர்ந்து நினிவேயிலெங்கும் மனுஷரும் மிருகங்களும் மாடுகளும், ஆடுகளும், ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும் அவரவர் தம் தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள் என்று நிர்ணயம் பண்ணிக் கொண்டார்கள்.

அப்போது தேவன், அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். (யோனா அதி : 1 - 3)

இவ்வாறாக வலது கைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக பரிதபித்த கர்த்தர் அந்த பட்டணத்தை இரட்சித்தார்.

VII <u>போதனை:</u>

நாம் தேவசித்தத்தின் மத்தியிலிருந்து விலகிச் செல்வோமாயின், நமக்கும் மற்றவர்களுக்கும் கலக்கத்தை வருவிக்கிறவர்களாயிருப்போம்..

****

அப். பவுலின் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணம்

(அப்போஸ்தலருடைய நடபடிகள். 15 : 35 - 18 : 22)

I *மனப்பாடவசனம் :* (2 Marks)

2 கொரிந்தியர் 4 : 8 - 10

நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை: கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை:

துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை: கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.

கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.

II *யார் யாரிடம் எப்போது கூறியது:* (2 ½ Marks)

1. "நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால் என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள்.". (அப். 16 : 15)

யார் : தியத்தீரா ஊராளாகிய லீதியாள்

யாரிடம் : பவுல், சீலாவிடம்

எப்போது : பவுலும், சீலாவும் தங்கள் இரண்டாவது சுவிசேஷப் பிரயாணத்தின் போது பிலிப்பி பட்டணத்தில் தங்கியிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் ஓய்வு நாளில் பட்டணத்துக்கு வெளியே போய் ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து அங்கே கூடி வந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தார்கள். அப்பொழுது தியத்தீரா ஊராளும், இரத்தாம்பரம் விற்கிறவளும், தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள். பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்ற பின்பு அவள் பவுலையும் சீலாவையும் நோக்கி இவ்வாறு கேட்டுக் கொண்டாள்.

2. **a.**"நீ உனக்கு கெடுதி ஒன்று செய்து கொள்ளாதே"

b."நாங்கள் எல்லாரும் இங்கே தான் இருக்கிறோம்."(அப். 16 : 28)

யார் : பவுல்

யாரிடம் : சிறைச்சாலைக்காரனிடம்

எப்போது : பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலையில் இருக்கையில் நடு ராத்திரியிலே ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று. சிறைச் சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப் போனார்களென்று எண்ணி பட்டயத்தை உருவித் தன்னைக் கொலை செய்து கொள்ள போனான். அப்பொழுது பவுல் மிகுந்த சத்தமிட்டு, ''நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்து கொள்ளாதே: நாங்கள் எல்லாரும் இங்கே தான் இருக்கிறோம்'' என்று கூறினான்.

3. "ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்.". (அப். 16 : 30)

யார் : சிறைச் சாலைக்காரன்

யாரிடம் : பவுல், சீலா ஆகியோரிடம்

எப்போது : பிலிப்பி பட்டணத்து சிறைச் சாலையில் பவுலும் சீலாவும் நடு ராத்திரியில் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடின போது சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி அதிர்ந்தது. உடனே கதவுகள் திறவுண்டு எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று. சிறைச் சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப் போனார்களென்று எண்ணி பட்டயத்தை உருவித் தன்னைக் கொலை செய்து கொள்ள போனான். அப்பொழுது பவுல் மிகுந்த சத்தமிட்டு, ''நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்து கொள்ளாதே: நாங்கள் எல்லாரும் இங்கே தான் இருக்கிறோம்'' என்றான். உடனே அவன் தீபங்களைக் கொண்டு

வரச்சொல்லி, உள்ளே ஓடி நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து அவர்களை வெளியே அழைத்து வந்து இவ்வாறு கேட்டான்.

4. **"**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்**"**. (அப். 16 : 31)

யார் : *பவுல்*

யாரிடம் : *சிறைச்சாலைக்காரனிடம்*

எப்போது : *பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலையில் நடுராத்திரியில் பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடிய போது சிறைச்சாலையின் கதவுகள் திறந்தது. பவுலும், சீலாவும் தப்பி ஓடாமல், தன்னைத் தானே கொலை செய்து கொள்ளப் போன சிறைச்சாலைக்காரனிடம் "நீ உனக்குக் கொடுதி ஒன்றுஞ் செய்து கொள்ளாதே" என்று கூறினார்கள். அதைக் கண்டபோது சிறைச்சாலைக்காரன் நடு நடுங்கி அவர்கள் முன்பாக விழுந்து அவர்களை வெளியே அழைத்துக் கொண்டு வந்து "ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டான். அப்பொழுது பவுல் இவ்வாறு கூறினான்.*

5. **"**உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள் **"**. (அப். 17 : 6)

யார் : *தெசலோனிக்கே பட்டணத்திலுள்ள விசுவாசியாத யூதர்கள்*

யாரிடம் : *தெசலோனிக்கே பட்டணத்து அதிகாரிகளிடம்*

எப்போது : *பவுலும் சீலாவும் தங்களது இரண்டாவது சுவிசேஷப் பிரயாணத்தில் தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்த போது பவுல் யூதருடைய ஜெப ஆலயத்தில் இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான், பக்தியுள்ள கிரேக்கரும் அநேக கனம் பொருந்திய ஸ்திரீகளும் விசுவாசித்து பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள். விசுவாசியாத யூதர்கள் வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக் கொண்டு பட்டணத்தில் அமளியுண்டாக்கி யாசோனுடைய வீட்டை வளைந்து கொண்டு பவுலையும் சீலாவையும் தேடினார்கள். அவர்களைக் காணாமல் யாசோனையும் சில சகோதரரையும பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக் கொண்டு வந்து அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்.*

6. **a)** **"**நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமா?.**"**

b) **"**நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப் பண்ணுகிறாய் அவைகளின் கருத்து இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம்.**"** (அப் . 17 : 19, 20)

யார் : *அத்தேனே பட்டணத்திலுள்ள எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர்*

யாரிடம் : *பவுலிடம்*

எப்போது : *பவுல் அத்தேனே பட்டணத்தில் வந்தபோது விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து, ஜெப ஆலயத்தில் யூதரோடும் பக்தியுள்ளவர்களோடும் சந்தை வெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணினான். அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம் பண்ணினார்கள். பவுல் இயேசுவையும் உயிர்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினால் சிலர் இந்த வாயாடி என்ன பேசப் போகிறான் என்றனர். சிலர் இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறது என்றனர். பின்பு அவர்கள் பவுலை மார்ஸ் மேடைக்கு அழைத்துக் கொண்டு வந்து அவனிடம் இவ்வாறு கூறினார்கள்.*

7. **a)** **"**எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன்**"** (அப். 17 : 22)

b) **"**நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்.**"** (அப் 17 : 23)

c) **"**அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே**"** (அப். 17 : 27)

யார் : *பவுல்*

யாரிடம் : *அத்தேனே பட்டணத்தாரிடம்*

எப்போது : *பவுலுடைய இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் பவுல் அத்தேனே பட்டணத்துக்கு வந்த போது அந்தப் பட்டணத்திலுள்ள எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்து வந்து நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப் பண்ணுகிறாய். அவைகளின் கருத்து இன்னதென்று அறிய*

மனதாயிருக்கிறோம் என்றனர். அப்பொழுது பவுல், மார்ஸ் மேடை நடுவிலே நின்று அத்தேனராகிய அந்தப் பட்டணத்தாரிடம் இவ்வாறு கூறினான்.

8. **a)** "உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின் மேல் இருக்கும் நான் சுத்தமாயிருக்கிறேன்."
   b) "இது முதல் புறஜாதியாரிடத்திற்குப் போகிறேன்,."(அப். 18 : 6)
   யார் : பவுல்
   யாரிடம் : கொரிந்து பட்டணத்திலுள்ள யூதரிடம்
   எப்போது : பவுல் தனது இரண்டாவது சுவிசேஷப் பிரயாணத்தின் போது ஓய்வு நாள் தோறும் ஜெப ஆலயத்திலே சம்பாஷணை பண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்தி சொன்னான். மக்கதோனியாவிலிருந்து சீலாவும் தீமோத்தேயுவும் வந்தபோது பவுல் ஆவியில் வைராக்கியங் கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தம் பண்ணினான். அவர்கள் எதிர்த்து நின்று தூஷித்த போது பவுல் தன் வஸ்திரங்களை உதறி அவர்களை நோக்கி இந்த வார்த்தைகளைக் கூறினார்.

9. **a)** "நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே."(அப். 18 : 9)
   b) "நான் உன்னுடனே கூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை."
   c) "இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு" (அப். 18 : 10)
   யார் : கர்த்தர்
   யாரிடம் : பவுலிடம்
   எப்போது : பவுல் தனது இரண்டாவது சுவிசேஷப் பிரயாணத்தின் போது ஓய்வு நாள் தோறும் ஜெப ஆலயத்திலே சம்பாஷணை பண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்தி சொன்னார். ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான். கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்கு தரிசனமாகி இந்த வார்த்தைகளைக் கூறினார்

10. **a)** "வருகிற பண்டிகையிலே எப்படியாயினும் நான் எருசலேமில் இருக்க வேண்டும்"
   b) "தேவனுக்குச் சித்தமானால் திரும்பி உங்களிடத்திற்கு வருவேன்"(அப். 18 : 21)
   யார் : பவுல்
   யாரிடம் : யூதர்களிடம்
   எப்போது : பவுல் தனது இரண்டாவது சுவிசேஷப்பிரயாணத்தில் எபேசுக்கு வந்த போது, அங்கே ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாவையும் விட்டு நீங்கினார். பின்பு ஜெப ஆலயத்தில் பிரவேசித்து யூதருடனே சம்பாஷணை பண்ணினான். அவன் இன்னும் சில காலம் தங்களுடனே இருக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்ட போது பவுல் அதற்குச் சம்மதியாமல் இந்த வார்த்தைகளைக் கூறினான்.

III <u>ஓரிரு வார்த்தைகளில் விடையளி :</u> (2 Mark)

1. பர்னபா மாற்குவை அழைத்துக் கொண்டு எங்கு போனார்?
   பர்னபா மாற்குவை அழைத்துக் கொண்டு சீப்புரு தீவுக்குப் போனார்.(அப்15 : 39)

2. பவுல் யாரைத் தெரிந்து கொண்டு சீரியாவிற்கும் சிலிசியாவிற்கும் போனார்?
   பவுல் சீலாவைத் தெரிந்து கொண்டு சீரியாவிற்கும் சிலிசியாவிற்கும் போனார். (அப். 15 : 40, 41)

3. பவுல் தீமோத்தேயு என்னும் சீஷனை எங்கு சந்தித்தார்?
   பவுல் தீமோத்தேயுவை லீஸ்திராவில் சந்தித்தார். (அப். 16 : 1)

4. யூதர்கள் நிமித்தம் விருத்தசேதனம் பண்ணப்பட்டது யார்?
   யூதர்கள் நிமித்தம் தீமோத்தேயு விருத்தசேதனம் பண்ணப்பட்டான். (அப். 16 : 3)

5. பவுலும் சீலாவும் எந்த இடத்திலே வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியினாலே தடை பண்ணப்பட்டார்கள்?
   பவுலும் சீலாவும் ஆசியாவில் வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியினாலே தடை பண்ணப்பட்டார்கள்.(அப். 16 : 6)

6. பவுலும் சீலாவும் எந்த நாட்டிற்குப் போவதை ஆவியானவர் தடை பண்ணினார்?

பவுலும் சீலாவும் பித்தினியாவுக்கு போவதை ஆவியானவர் தடைபண்ணினார். (அப். 16 : 7)

7. யார் தன்னை அழைத்ததாக பவுல் தரிசனத்திலே கண்டார்?
மக்கதோனியா தேசத்தான் ஒருவன் தன்னை அழைத்ததாக பவுல் தரிசனம் கண்டார். (அப். 16 : 9)

8. பவுல் எந்த ஊரில் இருக்கையில் மக்கதோனியா தேசத்தான் ஒருவன் வந்து தன்னை அழைப்பதாகத் தரிசனம் கண்டார்?
துரோவா தேசத்தில் இருக்கும் போது தரிசனம் கண்டார். (அப். 16 : 8, 9)

9. பிலிப்பி பட்டணத்தில் யாருடைய இருதயத்தைக் கர்த்தர் திறந்தருளினார்?
லீதியாளின் இருதயத்தைக் கர்த்தர் திறந்தருளினார். (அப். 16 : 14)

10. பவுலும் சீலாவும் எந்த ஊரிலுள்ள சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த போது பூமி மிகவும் அதிர்ந்தது?
பிலிப்பி பட்டணத்தில் உள்ள சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த போது பூமி அதிர்ந்தது. (அப். 16 : 12,26)

11. விசுவாசியாத யூதர்கள் யாருடைய வீட்டை தெசலோனிக்கேயில் வளைந்து கொண்டார்கள்?
யாசோனுடைய வீட்டை வளைந்து கொண்டார்கள். (அப். 17 : 5)

12. எந்தப் பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டார்கள்? (அல்லது) எந்தப் பட்டணத்தார் தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனர்.(அல்லது) தெசலோனிக்கே பட்டணத்தாரைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தவர்கள் யார்?
பெரோயா பட்டணத்தார். (அப். 17 : 11)

13. விக்கிரகங்கள் நிறைந்த பட்டணமாயிருந்தது எது?
அத்தேனே பட்டணம் (அப். 17 : 16)

14. அத்தேனே பட்டணத்தில் பவுல் எங்கிருந்து பிரசங்கித்தார்?
மார்ஸ் மேடையின் நடுவில் நின்று பிரசங்கித்தார். (அப். 17 : 22)

15. அத்தேனே பட்டணத்தின் பலிபீடத்தில் என்ன எழுதியிருந்தது?
அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருந்தது. (அப். 17 : 23)

16. அத்தேனே பட்டணத்தில் பவுலின் பிரசங்கத்தைக் கேட்டு விசுவாசிகளானது யார்?
மார்ஸ் மேடையின் நியாயாதிபதியாகிய தியொனீசியுவும் தாமரி என்னும் பேருள்ள ஸ்திரீயும் விசுவாசிகளானார்கள். (அப். 17 : 34)

17. யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கட்டளையிட்டது யார்?
யூதரெல்லாம் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கிலவுதிராயன் கட்டளையிட்டான். (அப். 18 : 2)

18. கொரிந்து பட்டணத்தில் பவுல் யாருடன் தங்கியிருந்தான்?
பொந்து தேசத்தானாகிய ஆக்கில்லா, அவன் மனைவி பிரிஸ்கில்லா ஆகியோருடன் பவுல் தங்கியிருந்தான் (அப். 18 : 2, 3)

19. கொரிந்து பட்டணத்தில் பவுல் என்ன தொழில் செய்தான்? ஆக்கில்லா பிரிஸ்கில்லா ஆகியோருடைய தொழில் என்ன?
பவுல் கூடாரம் பண்ணுகிற தொழில் செய்து வந்தான.
கூடாரம் பண்ணுகிறது ஆக்கில்லா பிரிஸ்கில்லாவின் தொழிலாயிருந்தது. (அப். 18 : 3)

20. கொரிந்து பட்டணத்தில் யாருடைய வீடு தேவாலயத்துக்கு அடுத்ததாயிருந்தது?
தேவனை வணங்குகிறவனாகிய யுஸ்து என்பவனுடைய வீடு தேவாலயத்துக்கு அடுத்ததாயிருந்தது. (அப். 18 : 7)

21. கொரிந்துவில் தன் வீட்டாரனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனான ஜெப ஆலயத் தலைவன் யார்?
ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு (அப். 18 : 8)

22. கிரேக்கர்கள் எல்லாரும் நியாயாசனத்துக்கு முன்பாக யாரை அடித்தார்கள்?
ஜெப ஆலயத்தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து அடித்தார்கள்.(அப்18: 17)

23. பவுல் எங்கே வந்தபோது ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவையும் விட்டு நீங்கினான்?

எபேசு பட்டணத்திற்கு வந்தபோது அவர்களை விட்டு நீங்கினான். (அப். 18 : 19)

24. அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தை எப்போது தொடங்கினார்? எப்போது முடித்தார்?
அப்போஸ்தலனாகிய பவுல் கிபி 49 ஆம் வருடம் தன்னுடைய இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தை தொடங்கினார். கி.பி. 54 ஆம் வருடம் முடித்தார். (அப்.15:35,40, 18 : 21,22)(பாடத்திட்டம்)

25. அப்போஸ்தலனாகிய பவுல் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தை எங்கு யாரோடு துவங்கினார்?
அப்போஸ்தலனாகிய பவுல் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தை அந்தியோகியாவிலிருந்து சீலாவுடன் துவங்கினார். (அப்.15:35,40)

IV <u>*ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*</u>

1. பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலே செய்த ஊழியம் என்ன?
பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலே சஞ்சரித்து கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். (அப் 15 : 35)

2. பவுல் லீஸ்திராவில் சந்தித்த சீஷன் யார்? அவன் எப்படிப்பட்டவனாயிருந்தான்?
பவுல் லீஸ்திராவில் தீமோத்தேயு என்னும் சீஷனைச் சந்தித்தான். அவன் லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான். (அப். 16 : 1, 2)

3. பவுல் ஏன் தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் பண்ணினார்?
பவுல் தீமோத்தேயுவைத் தன்னுடனே கூட்டிக் கொண்டு போக விரும்பினான். அவனுடைய தகப்பன் கிரேக்கனென்று அவ்விடங்களிலிருக்கும் யூதர்களெல்லாரும் அறிந்திருந்த படியால் அவர்கள் நிமித்தம் அவனுக்கு விருத்தசேதனம் பண்ணினான். (அப். 16 : 3)

4. பவுல் இரண்டாவது சுவிசேஷப் பிரயாணம் செய்த போது சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகக் காரணம் என்ன?
பவுலும் சீலாவும் பட்டணங்கள் தோறும் போகையில் எருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு ஒப்புவித்தார்கள். அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின. (அப். 16 : 4,5)

5. எந்த இடங்களில் பவுலும் சீலாவும் பரிசுத்த ஆவியானவராலே தடை பண்ணப்பட்டார்கள்?
ஆசியா, பித்தினியா ஆகிய நாடுகளில் பவுலும் சீலாவும் ஆவியானவரால் தடைபண்ணப்பட்டார்கள்.(அப். 16 : 6,7)

6. பவுல் துரோவா பட்டணத்திலிருக்கையில் கண்ட தரிசனம் என்ன?
பவுல் துரோவா பட்டணத்தில் இருக்கையில் தரிசனத்தில் மக்கதோனியா தேசத்தான் ஒருவன் வந்து நின்று நீர் மக்கதோனியாவிற்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக் கொண்டதாக தரிசனம் கண்டான்.(அப் 16 : 9)

7. பிலிப்பி பட்டணத்தில் லீதியாள் எவ்விதம் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளானாள்?
பிலிப்பி பட்டணத்தில் பவுலும் சீலாவும் ஆற்றினருகே கூடி வருகிற ஸ்திரீகளுக்கு உபதேசித்தார்கள். தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாயிருந்த லீதியாள் அதைக் கேட்டாள். பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றனர். இவ்வாறாக அவள் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளானாள். (அப். 16 : 13,14,15)

8. பிலிப்பி பட்டணத்தில் பவுலும் சீலாவும் சிறையிலடைக்கப்படக் காரணம் என்ன?
பிலிப்பி பட்டணத்தில் குறி சொல்ல ஏவுகிற ஆவியையுடைய ஒரு பெண் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தாள் பவுல் கட்டளையிட அந்த ஆவி அவளை விட்டு நீங்கியது. அப்பொழுது அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்தின் நம்பிக்கை அற்றுப் போயிற்றென்று கண்டு, பவுலையும் சீலாவையும் பிடித்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக் கொண்டு போனார்கள். ஜனங்களும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். ஆகையால் அதிகாரிகள் அவர்களை அடித்து அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்து சிறைச்சாலையில் வைக்கும்படி கட்டளையிட்டார்கள். (அப். 16 : 16 - 23)

9. நடு ராத்திரியில் பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடிய போது என்ன நடந்தது?

பிலிப்பி பட்டணத்தில் சிறைச்சாலையில் பவுலும் சீலாவும் நடு ராத்திரியில் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடிய போது காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று. (அப். 16 : 25, 26)

10. தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் பெரோயா பட்டணத்தார் நற்குணசாலிகளாயிருந்ததின் காரணமென்ன?
பெரோயா பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தபடியினால் தெலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள். (அப் 17 : 11)

11. அத்தேனே பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்ட பவுல் என்ன செய்தார்? யார் யாரோடு சம்பாஷணை பண்ணினார்?
அத்தேனே பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு பவுல் ஆவியில் வைராக்கியமடைந்து ஜெப ஆலயத்தில் யூதரோடும் பக்தியுள்ளவர்களோடும் சந்தை வெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணினார். (அப். 17 :16,17)

12. அத்தேனே பட்டணத்தில் பவுலோடு வாக்குவாதம் பண்ணினவர்கள் யார்?
எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலரும் அத்தேனே பட்டணத்தில் பவுலோடு வாக்குவாதம் பண்ணினார்கள்.(அப் 17 : 18)

13. அத்தேனே பட்டணத்தார் தங்கள் பொழுதை எவ்வாறு போக்கினார்கள்?
அத்தேனே பட்டணத்தார் நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலும் தங்கள் பொழுதைப் போக்கினார்கள். (அப். 17 : 21)

14. கொரிந்து பட்டணத்தில் கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி என்ன கூறினார்?
இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி, "நீ பயப்படாமல் பேசு மவுனமாயிராதே. நான் உன்னுடனே கூட இருக்கிறேன். உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன் மேல் கை போடுவதில்லை. இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு" என்றார். (அப். 18 : 9, 10)

V **சுருக்கமான விடையளி :** (4 Marks)

1. பிலிப்பி பட்டணத்தில் பவுலும் சீலாவும் செய்த ஊழியத்தைப் பற்றி எழுது.
பிலிப்பு மக்கதோனியாவிலுள்ள ஒரு பட்டணம். பவுலும் சீலாவும் பட்டணத்துக்கு வெளியே ஆற்றின் அருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்திற்குச் சென்றனர். இங்கு தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளுமான லீதியாள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றாள். குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த ஒரு பெண்ணிலிருந்து அவர்கள் அந்த அசுத்த ஆவியைத் துரத்தினர். அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப் போயிற்று என்று கண்டு பவுலையும் சீலாவையும் பிடித்து அதிகாரிகளிடத்தில் ஒப்புக் கொடுத்தனர். அவர்கள் இருவரும் அடிக்கப்பட்டு சிறைச் சாலையில் வைக்கப்பட்டனர். இராத்திரியில் அவர்கள் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடிய போது கதவுகள் திறவுண்டன. கட்டுகள் கழன்றன. சிறைச் சாலைக்காரனும் அவன் வீட்டாரும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றனர். கர்த்தர் பவுலையும் சீலாவையும் அற்புதமாக விடுதலையாக்கினார். (அப். 16 : 12 - 40)

2. பவுலும் சீலாவும் அத்தேனே பட்டணத்தில் செய்த ஊழியத்தை விவரி?
அத்தேனே பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து, ஜெப ஆலயத்தில் யூதரோடும் பக்தியுள்ளவர்களோடும் சந்தை வெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷனை பண்ணினான். அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம் பண்ணினார்கள். பவுல் மார்ஸ் மேடையில் நின்று பிரசங்கம் பண்ணினார். இயேசுவையும் மரித்தோரின் உயிர்தெழுதலையும், குறித்து கேட்டபோது சிலர் இகழ்ந்தார்கள். சிலர் வசனத்தை ஏற்றுக் கொண்டு விசுவாசிகளானார்கள். அவர்களுள் மார்ஸ் மேடையின் நியாயதிபதியாகிய தியொனீசியு என்பவனும் தாமரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயும் இருந்தனர். (அப். 17 : 16 - 34)

3. கொரிந்து பட்டணத்தில் பவுலும் சீலாவும் செய்த ஊழியத்தைக் குறித்து எழுதுக.
கொரிந்து ரோம பேரரசின் பிரதானமான ஒரு பட்டணமாயிருந்தது. பவுல்,தானும் அவர்களைப் போல கூடாரம் பண்ணுகிற தோழில் செய்கிறவராய் இருந்தபடியினால் ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் ஆகியோருடன் சேர்ந்து கூடாரத்தொழில் செய்து வந்தார். அவர் ஓய்வு நாள் தோறும் ஜெப ஆலயத்திலே சம்பாஷித்து யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்தி சொன்னார். சில யூதர்கள் எதிர்த்த போது அவர் அவ்விடத்தை விட்டு ஜெப

ஆலயத்திற்கு அடுத்திருந்த யுஸ்துவின் வீட்டிலே வந்து தங்கினார். ஜெப ஆலய தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் தன் வீட்டாரனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசம் உள்ளவன் ஆனான். அநேக கொரிந்தியரும் சுவிசேஷத்தை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர். இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்கு தரிசனமாகி அப்பட்டணத்தில் தமக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றும் பவுல் பயப்படாமல் பேச வேண்டும் என்றும் கூறினார். எனவே பவுல் அங்கே ஒரு வருஷமும் ஆறு மாதமும் தங்கி அவர்களுக்கு தேவ வசனத்தை போதித்தார். சில யூதர்கள் கல்லியோன் என்னும் அதிபதிக்கு முன்பாக பவுலைக் குற்றஞ் சாட்டினார்கள். அவனோ அது அவர்களுடைய வேதத்திற்கு அடுத்தக் காரியமானபடியினால் பவுலை விசாரணை செய்ய மறுத்து அவர்களை துரத்தி விட்டான். (அப். 18 : 1 - 17)

VI ***விரிவான விடையளி :*** (10 Marks)

1. பவுலும் சீலாவும் இரண்டாவது சுவிசேஷப் பிரயாணத்தை எப்பொழுது, எங்கு ஆரம்பித்தனர்? எப்பொழுது எங்கு முடித்தனர்? பவுலின் இரண்டாவது சுவிசேஷப் பிரயாணத்தின் நோக்கம் என்ன? அவர்கள் எந்தெந்த பட்டணங்களுக்குப் போனார்கள் என்பதை வரிசையாக எழுது. பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்தில் சிறைச் சாலையில் போடப்பட காரணம் என்ன? சிறைச்சாலையில் இருக்கையில் நடந்தது என்ன? சிறைச்சாலைக்காரன் எவ்வாறு தன் வீட்டாரோடு ஞானஸ்நானம் பெற்றான் என்பதை விவரி?

1. பவுலும் சீலாவும் கிபி 49ல் அந்தியோகியா பட்டணத்தில் வைத்து சுவிசேஷப் பயணத்தை ஆரம்பித்தனர். கிபி 54ம் வருடம் தங்கள் பிரயாணத்தை துவங்கி அந்தியோகியாவில் அதை முடித்தனர். (பாடத்திட்டம்)

2. நோக்கம்: பவுல் பர்னபாவிடம் நாம் (முதலாவது பிரயாணத்தில்) கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகலபட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று போய் பார்ப்போம் என்றார் இதுவே இரண்டாவது சுவிசேஷப் பிரயாணத்தின் நோக்கமாகும்.(அப் 15:36)

3. கீழ்க்கண்ட பட்டணங்களுக்கு அவர்கள் இரண்டாவது பிரயாணமாகச் சென்றார்கள்.

1.	அந்தியோகியா	7.	பிலிப்பி
2.	சிரியா, சிலிசியா	8.	தெசலோனிக்கே
3.	தெர்பை, லீஸ்திரா	9.	பெரோயா
4.	பிரிகியா, கலாத்தியா	10.	அத்தேனே
5.	மீசியா	11.	கொரிந்து
6.	துரோவா	12.	எபேசு

4. பவுலும் சீலாவும் சிறையில் அடைக்கப்பட்டதற்கான காரணம் :

பவுல் பிலிப்பு பட்டணத்தில் குறி சொல்ல ஏவுகிற ஆவியை கொண்டிருந்த ஒரு பெண்ணிடம் இருந்து அந்த ஆவியை துரத்தினபடியால் அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப் போயிற்று எனக் கண்டு பவுலையும் சீலாவையும் பிடித்து அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்தனர். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்து அவர்களை அநேக அடிகள் அடித்து சிறைச்சாலையில் பத்திரமாய் வைத்து காக்கும்படி கட்டளையிட்டார்கள். சிறைச்சாலைக்காரன் பவுலையும் சீலாவையும உட்காவல் அறையில் அடைத்து அவர்கள் கால்களை தொழு மரத்திலே மாட்டி வைத்தான். (அப் 16:18 - 24)

5. சிறைச்சாலைத் தலைவன் இரட்சிக்கப்பட்ட விதம் :

நடுராத்திரியில் பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடினார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. கதவுகள் திறவுண்டு, கட்டுகள் கழன்றன, காவலில் வைக்கப்பட்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, சிறைச் சாலைக்காரன் தன்னைக் கொலை செய்து கொள்ளப் போகையில் பவுல் அவனைத் தடை செய்து எல்லாரும் அங்கேயே இருப்பதாகக் கூறினார். சிறைச் சாலைக்காரன் உள்ளே ஓடி நடுநடுங்கி அவர்கள் முன்பாக விழுந்து அவர்களை வெளியே அழைத்து வந்து, ''ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்றான். அதற்கு அவர்கள் ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்.

மேலும் இராத்திரியில் அந்நேரத்தில் தானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டு போய் அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப் 16:25 - 33)

2. பவுல் அப்போஸ்தலனுடைய இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் தேவனுடைய கிரியையும் ஆவியானவருடைய நடத்துதலையும் எந்த இடங்களில் காண்கிறோம் என உதாரணங்களுடன் எழுது.

பவுலும் சீலாவும் சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு புறப்பட்டுப் போன போது கர்த்தரின் கிரியையும் ஆவியானவரின் நடத்துதலும் பல சந்தர்ப்பங்களில் விளங்கினது:

1. லீஸ்திராவில் நற்சாட்சி பெற்றவனும் பின்பு ஊழியத்திலே பவுலுக்கு மிகவும் உதவியாயிருந்தவனுமான தீமோத்தேயு என்னும் சீஷனை கர்த்தர் பவுலுக்குக் கொடுத்தார். (அப் 16 : 1,3)

2. ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியினாலே தடை பண்ணப்பட்டார்கள். (அப் 16 : 5)

3. அவர்கள் பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனப்பட்ட போது ஆவியானவரோ அவர்களைப் போக வொட்டாதிருந்தார். (அப். 16 : 7)

4. ஒரு தரிசனத்தில் மக்கதோனியா தேசத்தான் ஒருவன், மக்கதோனியாவிற்குப் பவுலை அழைத்தான். அதனால் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் தங்களை அழைத்தாரென்று நிச்சயப்படுத்திக் கொண்டு உடனே அங்கு புறப்பட்டனர்.(அப் 16 : 9,10)

5. பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் பிலிப்பி பட்டணத்து ஆற்றங்கரையில் லீதியாளின் இருதயத்தை திறந்தருளினார். தன் வீட்டார் அனைவரோடும் ஞானஸ்நானம் பெற்றாள். (அப். 16 : 14, 15)

6. பவுல் இயேசுகிறிஸ்து நாமத்தில் கட்டளையிட குறிசொல்ல ஏவுகிற ஆவி அந்தப் பெண்ணை விட்டுப் புறப்பட்டு போயிற்று. (அப். 16 : 18)

7. பிலிப்பில் சிறைச் சாலையில் நடுராத்திரியில் பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி தேவனை துதித்துப் பாடியதும் பூமி மிகவும் அதிர்ந்தது. கதவுகள் திறவுண்டது, கட்டுகள் கழன்றன (அப். 16 : 25, 26)

8. சிறைச் சாலைக்காரன் இராத்திரியிலே கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்படிந்து தன் வீட்டார் அனைவரோடும் ஞானஸ்நானம் பெற்றான். (அப். 16 : 33)

9. பவுல் மார்ஸ் மேடையில் நின்று பிரசங்கம் பண்ணியதும் மார்ஸ் மேடையின் நியாயாதிபதி ஒருவனும், தாமரி என்னும் பெண்ணும் உட்பட சிலர் விசுவாசிகளானார்கள். (அப். 17 : 34)

10. ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்புவும் அவன் வீட்டாரும் கொரிந்தியரில் அநேகரும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர். (அப். 18 : 8)

11. கொரிந்துவில் பவுல் இருக்கையில் கர்த்தர் இராத்திரியில் தரிசனமாகி, "நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே" என்று கூறி அந்தப் பட்டணத்தில் தனக்கு அநேக ஜனங்கள் இருப்பதாக கூறினார். (அப். 18 : 9, 10)

இவ்வாறு பவுலின் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் தேவனுடைய கிரியைகளையையும் ஆவியானவருடைய நடத்தலையும் பல சந்தர்ப்பங்களில் நாம் காண்கிறோம்.

VII <u>போதனை:</u> (2 Marks)

ஆவியானவர் குறிப்பான சில இடங்களுக்குப் போகும்படி சொன்னாலும், அல்லது தடை செய்தாலும், அப்போஸ்தலர் முழுவதுமாய் பரிசுத்த ஆவியின் நடத்துதலில் சார்ந்திருந்தனர். நாமும் கூட நம் அனுதின ஜீவியத்தில் எல்லாக் காரியங்களிலும் பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிய மனமுவந்திருக்க வேண்டும்.

****

மனந்திரும்புதல்
(மறுபடியும் பிறக்கும் அனுபவம்)

I *மனப்பாடவசனம் :* (2 Marks)

ரோமர் 6 : 23

பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.

ரோமர் 10 : 9, 10

என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.

II *யார் யாரிடம் எப்போது கூறியது:* (2 ½ Marks)

1. "சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்? " (அப்போ. 2 : 37)

யார் : எருசலேமில் கூடிவந்த இஸ்ரவேலர்

யாரிடம் : பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்துக் கேட்டது

எப்போது : பெந்தேகோஸ்தே நாளில் சகல தேசத்தாரிலுமிருந்து வந்த பக்தியுள்ள யூதர்கள் எருசலேமில் கூடி வந்திருந்தனர். அவர்கள் எருசலேமில் கூடியிருந்த சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்து வெவ்வேறு பாஷைகளில் பேசினதைக் கேட்ட பொழுது அவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள் என்று எண்ணி பரியாசம் பண்ணினார்கள். அப்பொழுது அப். பேதுரு எழும்பி பதினொருவரோடுங் கூட நின்று, அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணினான். அதைக் கேட்ட ஜனங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் நோக்கி இவ்வாறு கேட்டார்கள்.

2. "நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்." (லூக்கா 19 : 8)

யார் : சகேயு என்ற ஆயக்காரன்

யாரிடம் : இயேசுவிடம்

எப்போது : இயேசு எரிகோ என்னும் பட்டணத்தில் பிரவேசித்து நடந்து போகையில் சகேயு எனப்பட்ட ஆயக்காரன் இயேசு எப்படிப்பட்டவரோ என்று பார்க்கும்படி வழியிலுள்ள காட்டத்தி மரத்தில் ஏறினான். இயேசு அந்த இடத்தில் வந்த போது அண்ணாந்து பார்த்து, "சகேயுவே நீ சீக்கிரமாய் இறங்கி வா: நான் இன்றைக்கு உன் வீட்டிலே தங்க வேண்டும்" என்றார். சகேயு கீழே இறங்கி அவரை தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனான். மற்ற மனுஷர்கள் முறுமுறுக்கையில் சகேயு நின்று கர்த்தரை நோக்கி இவ்வாறு கூறினான்.

3. "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்". (மத். 18 : 35)

யார் : இயேசு

யாரிடம் : பேதுருவிடம்

எப்போது : பேதுரு இயேசுவினிடத்தில், "ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமோ" என்று கேட்டான். அதற்கு இயேசு ஒரு உவமையைக் கூறி விட்டு இந்த வார்த்தைகளை பேதுருவிடம் கூறினார்.

III ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி :*** (2 Mark)

1. இரட்சிப்பின் முதல் படி என்ன?
மனந்திரும்புதல் (பாடத்திட்டம்)

2. பாவ சுபாவம் என்றால் என்ன?
பாவ சுபாவம் என்பது பிறக்கும் போதே ஒருவனிலிருக்கும் சுபாவம் ஆகும். (சங்கீதம் 51 : 5 ; எபேசி 2 : 3)

3. பாவக் கிரியைகள் என்றால் என்ன?
கிரியைகளினால் செய்யும் பாவங்கள் பாவக்கிரியைகள் எனப்படுகிறது. (கொலோ 1 : 21 ; கலா 5 : 19 - 21)

4. மனந்திரும்புதலின் அனுபவத்திற்கு வழி நடத்தும் ஏழுபடிகளில் முதல் படி என்ன?
பாவ உணர்வு (பாடத்திட்டம்)

5. மனஸ்தாபம் என்றால் என்ன?
ஒருவனில் உண்டாகும் பாவ உணர்வானது அவன் தான் செய்தவற்றிற்காக அவனை மிகவும் வருந்தச் செய்கிறது. பாவியான மனுஷன் தேவனுடைய இரக்கத்தையும் மன்னிப்பையும் தேடி அவரிடம் திரும்புகிறான். இது 'மனஸ்தாபம்' என்று அழைக்கப்படுகிறது. (2 கொரி 7 : 10, 11)

6. திருப்பிக் கொடுத்தலின் பிரமாணத்தைக் கைக் கொண்டது யார்? எப்போது?
சகேயு என்ற ஆயக்காரன். இரட்சிக்கப்பட்ட போது திருப்பிக் கொடுத்தலின் பிரமாணத்தைக் கைக்கொண்டான். (லூக்கா 19 : 8)

7. நாம் எப்படி தேவனோடு ஒப்புரவாக முடியும்?
நம் பாவங்களை மெய் மனஸ்தாபத்தோடுஅறிக்கையிடுவதின் மூலம் தேவனிடத்திலிருந்து மன்னிப்புக் பெற்றுக் கொண்டு தேவனோடு ஒப்புரவாக முடியும். (பாடத்திட்டம்)

8. நீதிகரிக்கப்படுதல் என்றால் என்ன?
நீதிகரிக்கப்படுதல் என்பது ஒரு பாவமும் செய்யாதவர்களை போல் எண்ணப்படுவதாகும். (ரோமர் 3 : 24)

9. பரிசுத்தமாகுதல் என்பது எதைக் காட்டுகிறது?
பரிசுத்தமாகுதல் என்பது நாம் கர்த்தருக்காக முற்றிலும் வேறு பிரிக்கப்படுதலைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

10. நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டது யார்? நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டது யார்?
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (ரோமர் 3 : 24)

11. நாம் எப்பொழுது பாவத்திலிருந்தும் பாவிகளிலிருந்தும் வேறு பிரிக்கப்படுகிறோம்?
நாம் இரட்சிக்கப்படும் போது பாவத்திலிருந்தும் பாவிகளிலிருந்தும் வேறு பிரிக்கப்படுகிறோம். (பாடத்திட்டம்)

12. இஸ்ரவேல் ஜனங்கள் எப்போது கர்த்தருக்காக முற்றிலும் வேறுபிரிக்கப்பட்டார்கள்?
இஸ்ரவேல் ஜனங்கள் பஸ்கா ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினாலே மீட்கப்பட்ட அந்த நாளிலே எகிப்திலிருந்தும் எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு, கர்த்தருக்காக முற்றிலும் வேறு பிரிக்கப்பட்டார்கள். (பாடத்திட்டம்)

13. நாம் எப்போது கர்த்தருடைய ஜனங்களாகிறோம்?
கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாம் பாவக்கிரியைகளிலிருந்தும் பாவிகளிலிருந்தும் வேறு பிரிக்கப்படும் போது கர்த்தருடைய ஜனங்களாகிறோம். (பாடத்திட்டம்)

14. பரிசுத்தப்படுதலின் கிரியை நம்மில் எப்பொழுது ஆரம்பமாகிறது?

இரட்சிப்பில் நாம் பெற்றுக் கொள்ளுகிற வேறு பிரிக்கப்படும் அனுபவத்தின் மூலமாக பரிசுத்தமாக்கப்படுதலின் கிரியை நம்மில் ஆரம்பமாகிறது. (பாடத்திட்டம்)

IV <u>ஓரிரு வாக்கிய□களில் விடையளி :</u>

1. பாவ மன்னிப்பாகிய இரட்சிப்புக்கு உபயோகிக்கப்படும் பல்வேறு பதங்கள் யாவை?
   மனந்திரும்புதல், புதிதாகப் பிறத்தல், மறுபடியும் பிறத்தல், இரட்சிப்பு என்னும் பதங்கள் யாவும் பாவங்கள் மன்னிக்கப்படுதலாகிய இரட்சிப்பைக் குறிக்கும் பல்வேறு பதங்கள் ஆகும். (பாடத்திட்டம்)

2. இவ்வுலகில் பிறந்த எந்த மனிதனும் தேவனுக்கு முன்பாக எப்படிப்பட்டவனாய் இருக்கிறான்? மனுஷரைக் குறித்து தேவனுடைய சித்தம் என்ன?
   இவ்வுலகில் பிறந்த எந்த மனிதனும் தேவனுக்கு முன்பாக பாவியாகவே இருக்கிறான். (ரோமர்3 : 23) மனிதன் பாவியாகவே தொடர்ந்து ஜீவிக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமல்ல. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். (1தீமோ2:4)

V <u>சுருக்கமான விடையளி</u> **:** (4 Marks)

1. மனிதன் எந்த இரண்டு விதங்களில் பாவியாயிருக்கிறான்? அவற்றிலிருந்து அவன் எவ்வாறு விடுதலை பெற்றுக் கொள்ள முடியும் ?
   மனிதன், பாவ சுபாவம், பாவகிரியை என்ற இரண்டு விதங்களில் பாவியாயிருக்கிறான்.
   1. <u>பாவ சுபாவம்</u>: பாவ சுபாவம் என்பது பிறக்கும்போதே ஒருவனில் இருக்கும் சுபாவம் ஆகும். (சங்கீதம் 51 : 5 ; எபேசி 2 : 3)
   ஒரு மனிதன் மறுபடியும் பிறந்து பாவக்கிரியைகளிலிருந்து விடுதலை பெற்றுக் கொண்டபின் பாவ சுபாவத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ளும் படியாக, அவன் கட்டாயமாய் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்.
   2. <u>பாவக்கிரியைகள்</u> : கிரியைகளினால் ஒருவன் செய்யும் பாவங்கள் மூலம் ஒரு மனிதன் பாவியாயிருக்கிறான். (கொலோ 1 : 21 ; கலா 5 : 19 - 21). அவன் தேவனுடைய வசனத்தினால் மறுபடியும் பிறந்து, பாவக்கிரியைகளிலிருந்து விடுதலை பெற வேண்டும். (பாடத்திட்டம்)

2. அறிக்கையிடுதல் என்றால் என்ன?
   <u>அறிக்கையிடுதல்</u> (1 யோவான் 1 : 9 ; நீதி 28 : 13)
   நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு நம் வாயினால் அவரை அறிக்கை செய்ய வேண்டும் (ரோமர் 10 : 9, 10) மேலும் கடந்த காலத்தில் நாம் செய்த பாவங்களை உண்மையான மனஸ்தாபத்துடன் அறிக்கை செய்து விட்டு விட வேண்டும். அப்போது நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நம் பாவங்கள் நீங்க நம்மைக் கழுவி சுத்திகரிக்கிறது.

3. குறிப்பு வரைக : பாவ உணர்வு , திருப்பிக் கொடுத்தல்
   <u>பாவ உணர்வு</u> *: மனந்திரும்புதலின் அனுபவத்திற்கு வழிநடத்தும் படிகளில் முதல் படியாகும். பெந்தேகோஸ்தே நாளில் ஜனங்கள் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டபோது, இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, சகோதரரே, (இரட்சிக்கப்படுவதற்கு) நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அப்படிக் கேட்கும்படி அவர்களைத் தூண்டியது அவர்கள் இருதயங்களில் ஏற்பட்ட பாவ உணர்வேயாகும். (அப்போ. 2 : 37)*

   <u>திருப்பிக் கொடுத்தல்</u> *: இது மனந்திரும்புதலின் அனுபவத்திற்கு வழி நடத்தும் ஏழுபடிகளில் நாலாவது படியாகும். (எசே 33 : 15 ; லூக் 19 : 8) நாம் அநியாயமாய் யாரிடமிருந்தாவது எதையாவது எடுத்திருந்தால், அவர்களிடம் மன்னிப்புக் கேட்டால் மட்டும் போதாது. அந்தப் பொருட்கள் அவர்களிடம் திருப்பித்தரப்பட வேண்டும். ஏனென்றால் அது தேவனுடைய கற்பனையாகும். (யாத்20:17). சகேயு இரட்சிக்கப்பட்டபோது அவன் அநியாயமாய் எடுத்துக் கொண்டவற்றை திருப்பிக் கொடுத்தான் என்று நாம் காண்கிறோம்.*

4. குறிப்பு வரைக : ஒப்புரவாகுதல், நீதிகரிக்கப்படுதல்

ஒப்புரவாகுதல் : (மத் 5 : 23, 24 ; 18 : 35)

நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிடுவதின் மூலம் தேவனிடத்திலிருந்து மன்னிப்புக் பெற்றுக் கொண்டு, அவரோடு ஒப்புரவாகிறோம். நாம் மனிதரிடத்திலிருந்தும் கூட மன்னிப்புப் பெற்று, அவர்களோடு ஒப்புரவாக வேண்டும். நாம் மற்றவர்களுக்கு அவர்களுடைய குற்றங்களை மன்னிக்க வேண்டும்.

<u>நீதிகரிக்கப்படுதல்</u> : (ரோமர் 3 : 24 ; 4 : 24 , 25 ; 5 : 1, 19)

நீதிகரிக்கப்படுதல் என்பது நாம் ஒரு பாவமும் செய்யாதவர்களைப் போல் எண்ணப்படுவதாகும்.கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார். கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் மேலுள்ள நம்முடைய விசுவாசம் நீதியாக எண்ணப்படுகிறது. கர்த்தராகிய இயேசு மரித்து உயிர்த்தெழுந்தபடியால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். (ரோமர் 4 : 21 - 25)

VI <u>விரிவான விடையளி :</u> (10 Marks)

1. மனந்திரும்புதலின் அனுபவத்திற்கு வழிநடத்தம் ஏழு படிகளை வரிசையாக வசன ஆதாரத்துடன் குறிப்பிட்டு முதல் மூன்று படிகளை பற்றி விரிவாக எழுது. (அல்லது) மனந்திரும்புதலின் கடைசி நான்கு படிகளை வசன ஆதாரத்துடன் விவரி?

<u>மனந்திரும்புதலின் அனுபவத்திற்கு வழி நடத்தும் ஏழு படிகள்:</u>

1. *பாவ உணர்வு (அப் 2 : 37)*
2. *மனஸ்தாபம் (2 கொரி 7 : 10, 11)*
3. *அறிக்கையிடுதல் (1 யோவான் 1 : 9 ; நீதி 28 : 13)*
4. *திருப்பிக் கொடுத்தல் (எசேக்கி 33 : 15 ; லூக்கா 19 : 8)*
5. *ஒப்புரவாகுதல்(பரிசுத்தமாக்கப்படுதல்) (மத் 5 : 23, 24 ; 18 : 35)*
6. *நீதிகரிக்கப்படுதல் (ரோமர் 3 : 24 ; 4 : 24, 25 ; 5 : 1, 18)*
7. *பரிசுத்தமாகுதல் (1 யோவான் 1 : 7) (எபி 13 : 12)*

1. <u>பாவ உணர்வு</u> (அப் 2 : 37)

பெந்தெகொஸ்தே நாளில் ஜனங்கள் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டபோது, இருதயத்தில் குத்தப்படடவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, (இரட்சிக்கப்படுவதற்கு) நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்ற கேட்டார்கள். அப்படிக் கேட்கும்படி அவர்களைத் தூண்டியது அவர்கள் இருதயங்களில் ஏற்பட்ட பாவ உணர்வேயாகும். (அப்போ. 2 : 37)

2. <u>மனஸ்தாபம்</u> (2 கொரி 7 : 10, 11)

ஒருவனில் உண்டாகும் பாவ உணர்வானது அவன் தான் செய்தவற்றிற்காக அவனை மிகவும் வருந்தச் செய்கிறது. பாவியான மனுஷன் தேவனுடைய இரக்கத்தையும் மன்னிப்பையும் தேடி அவரிடம் திரும்புகிறான். இது 'மனஸ்தாபம்' என்று அழைக்கப்படுகிறது. (2 கொரி 7 : 10, 11)

3. <u>அறிக்கையிடுதல்</u> (1 யோவான் 1 : 9 ; நீதி 28 : 13)

நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு நம் வாயினால் அவரை அறிக்கை செய்ய வேண்டும் (ரொமர் 10 : 9, 10) மேலும் கடந்த காலத்தில் நாம் செய்த பாவங்களை உண்மையான மனஸ்தாபத்துடன் அறிக்கை செய்து விட்டு விட வேண்டும். அப்போது நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நம் பாவங்கள் நீங்க நம்மைக் கழுவி சுத்திகரிக்கிறது.

4. <u>திருப்பிக் கொடுத்தல்</u>. (எசே 33 : 15 ; லூக் 19 : 8)

நாம் அநியாயமாய் யாரிடமிருந்தாவது எதையாவது எடுத்திருந்தால், அவர்களிடம் மன்னிப்புக் கேட்டால் மட்டும் போதாது. அந்தப் பொருட்கள் அவர்களிடம் திருப்பித்தரப்பட வேண்டும். ஏனென்றால் அது தேவனுடைய கற்பனையாகும்.(யாத்20:17) சகேயு இரட்சிக்கப்பட்டபோது அவன் அநியாயமாய் எடுத்துக் கொண்டவற்றை திருப்பி கொடுத்தான் என்று நாம் காண்கிறோம்.

5. <u>ஒப்புரவாகுதல்</u> : (மத் 5 : 23, 24 ; 18 : 35)

நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிடுவதின் மூலம் தேவனிடத்திலிருந்து மன்னிப்புக் பெற்றுக் கொண்டு, அவரோடு ஒப்புரவாகிறோம். நாம் மனிதரிடத்திலிருந்துங்கூட

மனிதரிடமும் மன்னிப்புப் பெற்று, அவர்களோடு ஒப்புரவாக வேண்டும். நாம் மற்றவர்களுக்கு அவர்களுடைய குற்றங்களை மன்னிக்க வேண்டும் .

6. நீதிகரிக்கப்படுதல் : (ரோமர் 3 : 24 ; 4 : 24 , 25 ; 5 : 1, 19)

நீதிகரிக்கப்படுதல் என்பது நாம் ஒரு பாவமும் செய்யாதவர்களைப் போல எண்ணப்படுவதாகும். கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார். கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர்மேலுள்ள நம்முடைய விசுவாசம் நீதியாக எண்ணப்படுகிறது, கர்த்தராகிய இயேசு மரித்து உயிர்த்தெழுந்தபடியால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். (ரோமர் 4 : 21 - 25)

7. பரிசுத்தமாகுதல் (1 யோவான் 1 : 7 , எபிரெயர் 13 : 12)

இந்த அனுபவம் நாம் கர்த்தருக்காக முற்றிலும் வேறுபிரிக்கப்படுவதைக் காட்டுகிறது. இந்த இரட்சிப்பில் நாம் பாவத்திலிருந்தும் பாவிகளிலிருந்தும் வேறு பிரிக்கப்படுகிறோம். இஸ்ரவேலர் பஸ்கா ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினாலே மீட்கப்பட்ட அந்த நாளிலே எகிப்திலிருந்தும், எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு, கர்த்தருக்காக முற்றிலும் வேறுபிரிக்கப்பட்டது போலவே கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாமும் பாவக் கிரியைகளிலிருந்தும் பாவிகளிலிருந்தும் வேறுபிரிக்கப்பட்டு தேவனுடைய ஜனங்களாகிறோம். இவ்விதம் பரிசுத்தமாக்கப்படுதலின் கிரியை நம்மில் ஆரம்பமாகிறது.

VII போதனை:

ஆதாம் பாவம் செய்து, நித்திய ஜீவனை இழந்தான். நாம் மனஸ்தாபத்துடன் நம் பாவங்களை அறிக்கை செய்யும் போது, இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறோம்.

****

வகுப்பு : 8

பாடம்-11

தண்ணீர் ஞானஸ்நானம்

(பகுதி I)

I ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

கொலோசெயர் 2 : 12

ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.

கலாத்தியர் 5:24

கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

II ***யார் யாரிடம் எப்போது கூறியது:*** (2 ½ Marks)

1. **"**இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது**"**(மத்தேயு.3:15,16)

யார் : கர்த்தராகிய இயேசு

யாரிடம் : யோவான் ஸ்நானனிடம்

எப்போது : கர்த்தராகிய இயேசு யோவானால் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து, ''நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா'' என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக இவ்வாறு கூறினார்.

2. **"**ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.**"** (யோவான் 3 : 5)

யார் : கர்த்தராகிய இயேசு

யாரிடம் : யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்ற பரிசேயனிடம்

எப்போது : நிக்கொதேமு இராக்காலத்திலே கர்த்தராகிய இயேசுவிடம் வந்து: ''ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களை செய்ய மாட்டான்'' என்றான். கர்த்தராகிய இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ''ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்'' என்றார். அதற்கு நிக்கொதேமு, ''ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ'' என்றான் . அதற்கு இயேசு பிரதியுத்தரமாக இவ்வாறு கூறினார்.

3. நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப். 2 : 38)

யார் : பேதுரு

யாரிடம் : யூதர்கள் மற்றும் எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களிடம்

எப்போது : பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதைக் கண்ட ஜனங்கள் பிரமித்தனர், சந்தேகப்பட்டனர். சிலர் பரியாசம் செய்தனர். அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங் கூட எழும்பி நின்று யோவேலினால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் எவ்வாறு நிறைவேறிற்றென்றும் இயேசுவை எவ்வாறு தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று அவர்களுக்கு விவரித்துச் சொன்னார். ஜனங்கள் அதைக் கேட்டபொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, ''சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்'' என்றார்கள். அதற்குப் பேதுரு அவர்களை நோக்கி இவ்வாறு கூறினார்.(அப். 2 : 12, 13, 37)

III ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி :*** (2 Mark)

1. நமக்கு மாதிரியாக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டது யார்?

நம் கர்த்தராகிய இயேசு (மத்தேயு 3 : 15, 16)

2. தண்ணீர் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்பது யாருடைய ஆலோசனையா இருக்கிறது?
   தேவனுடைய ஆலோசனையாக இருக்கிறது (லூக்கா 7 : 30)

3. (யோவானிடம்) தண்ணீர் ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளி விட்டது யார்?
   பரிசேயரும், நியாயசாஸ்திரிகளும் (லூக்கா 7 : 30)

4. தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை யாது?
   தண்ணீர் ஞானஸ்நானம் (1 பேதுரு 3 : 21))

5. நாம் எப்பொழுது பாவ சுபாவத்திற்கு மரிக்கிறோம்?
   தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் பாவ சுபாவத்திற்கு மரிக்கிறோம். (ரோமர்6: 2, 3)

6. மறுபடியும் பிறந்த ஒருவனுடைய பாவக்கிரியைகள் மன்னிக்கப்பட்டு கழுவப்பட்டிருந்தாலும் ஏன் அவன் மறுபடியும் பாவம் செய்கிறான்?
   அவனுக்குள்ளிருக்கும் பாவ சுபாவத்தினிமித்தம் அவன் மறுபடியும் பாவஞ் செய்கிறான். (எபே. 2 : 3, சங்கீதம் 51 : 5)

7. நாம் எப்போது ஜெயஜீவியம் செய்ய ஆரம்பிக்கிறோம் ?
   நாம் தண்ணீர் ஞானஸ்நானத்தில் ஜெய ஜீவியம் செய்ய ஆரம்பிக்கிறோம் (ரோமர்6:6, 7, 9)

8. நாம் எப்போது கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறோம்?
   நாம் தண்ணீர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறோம். (கலாத். 3 : 26 – 28)

9. நாம் எப்பொழுது தேவ புத்திரராகிறோம்?
   தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டு அதன் மூலம் விசுவாசத்தினால் தேவபுத்திரராகிறோம். (கலாத். 3 : 26 – 28)

10. கர்த்தருடைய வருகையில் நம் சரீரம் உயிர்த்தெழுவதற்கு ஒரு முன் நிபந்தனை என்ன?
    தண்ணீர் ஞானஸ்நானம் . (ரோமர் 6 : 4, 5)

11. எல்லா நீதியையும் நிறைவேற்றும்படி தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டது யார் ? தங்களுக்கு கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையை தள்ளி விட்டது யார்?
    1. இயேசு (மத்தேயு 3 : 15).
    2. பரிசேயரும், நியாயசாஸ்திரிகளும் (லூக்கா 7 : 30)

IV *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*

1. கர்த்தருடைய வருகையில் சரீரம் உயிர்தெழுவதற்கு தண்ணீர் ஞானஸ்நானம் ஒரு முன் நிபந்தனையாயிருக்கிறது என்பதை வசன ஆதாரத்துடன் விவரி.
   அவருடைய மரணத்தின் சாயலில் (ஞானஸ்நானத்தில்) நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம் (ரோமர் 6 : 4, 5) (மூல பாஷையில் உயிர்த்தெழுதலின் சாயலில் என்று கூறப்படாமல் உயிர்த்தெழுதல் என்று தான் கூறப்பட்டுள்ளது.) (பாடத்திட்டம்.)

2. நாம் எப்போது பாவ சுபாவத்துக்கு மரித்து, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடக்கக் கூடியவர்களாயிருப்போம் ?
   நாம் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் செயலோடு நின்று விடாது நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு அவயத்தையும் தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதின் மூலம் தண்ணீர் ஞானஸ்நான சத்தியத்தை விசுவாசத்தினால் நம் அனுதின ஜீவியத்தில் கொண்டு வர வேண்டும். அப்போது நாம் பாவ சுபாவத்திற்கு மரித்தவர்களாய் கிரியைகளில் பாவமில்லாதவர்களாய் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடக்கக் கூடியவர்களாயிருப்போம். (போதனை) இது கர்த்தருடைய வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு நம் சரீரத்தை ஆயத்தமாய்க் காத்துக் கொள்ளும் .

V *சுருக்கமான விடையளி :* (4 Marks)

1. நாம் ஏன் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் (அல்லது) தண்ணீர் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம் என்ன? வசன ஆதாரங்களுடன் விவரி.
   கர்த்தராகிய இயேசு தாமே இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்று கூறி நமக்கு மாதிரியாக தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். (மத். 3 : 15, 16)

தண்ணீர் ஞானஸ்நானம் என்பது நம் ஆண்டவருடைய கட்டளைக்கு நாம் கீழ்ப்படிகிற செயலாயிருக்கிறது. (மத். 28 : 19)

தண்ணீர் ஞானஸ்நானம் தேவனுடைய ஆலோசனையாயிருக்கிறது (லூக்கா 7 : 30)

தண்ணீர் ஞானஸ்நானம் தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருக்கிறது. (1 பேதுரு 3 : 21)

அதுமட்டுமின்றி மேலான அனுபவத்திற்கும் ஆழமான ஜீவியத்திற்கும் அது நம்மை ஆயத்தப்படுத்துகிறது. எனவே நாம் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2. பாவ சுபாவத்திற்கும் நமக்கும் இடையில் எப்பொழுது எவ்வாறு ஒரு வேறுபாடு சம்பவிக்கிறது?

தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் பாவ சுபாவத்திற்கு மரிக்கிறோம் (ரோமர்6: 2, 3) ஒருவன் மறுபடியும் பிறந்து பாவக்கிரியைகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருந்தாலும் அவனுக்குள்ளிருக்கும் பாவ சுபாவம் (எபே. 2 : 3; சங்கீதம் 51 : 5) நீக்கப்படாவிட்டால் அவன் மறுபடியும் பாவக்கிரியைகள் செய்ய ஏதுவுண்டாகும் (ரோமர் 6 : 6). தண்ணீர் ஞானஸ்நானத்தில் பழைய மனுஷன் பாவ சரீரத்துடன் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக அடக்கம் பண்ணப்படுகிறான் (ரோமர் 6 : 4 – 6). இதினால் பாவசுபாவத்திற்கும் நமக்கும் இடையில் ஒரு வேறுபாடு (மரணம்) சம்பவிக்கிறது

VI *விரிவான விடையளி :* (10 Marks)

1. நாம் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுவதால் நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள் யாவை?

1. தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க தண்ணீர் ஞானஸ்நானம் ஒரு படியாகும் (யோவான் 3 : 5)

2. தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் பாவ சுபாவத்திற்கு மரிக்கிறோம்(ரோமர்6:2,3) ஒருவன் மறுபடியும் பிறந்து பாவக்கிரியைகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருந்தாலும் அவனுக்குள்ளிருக்கும் பாவ சுபாவம் (எபே. 2 : 3 ;சங்கீதம் 51 : 5) நீக்கப்படாவிட்டால் அவன் மறுபடியும் பாவக்கிரியைகள் செய்ய ஏதுவுண்டாகும் (ரோமர் 6 : 6). தண்ணீர் ஞானஸ்நானத்தில் பழைய மனுஷன் பாவ சரீரத்துடன் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக அடக்கம் பண்ணப்படுகிறான் (ரோமர் 6 : 4 – 6). இதினால் நமக்கும் பாவசுபாவத்திற்கும் இடையில் ஒரு வேறுபாடு (மரணம்) சம்பவிக்கிறது

3.பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெற தண்ணீர் ஞானஸ்நானம் ஒரு ஆயத்தபடியாயிருக்கிறது (அப். 2 : 38 ; 5 : 32)

4.தண்ணீர் ஞானஸ்நானம் ஒரு இரட்சிப்பு எனவும் அழைக்கப்படுகிறது(மாற்கு16:16). இந்த இரட்சிப்பு பாவ சுபாவத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் விடுதலையாகும்.

5. தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் ஜெய ஜீவியம் செய்ய ஆரம்பிக்கிறோம் (ரோமர் 6 : 6, 7, 9)

6. தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டு விசுவாசத்தினால் தேவ புத்திரராகிறோம், இதிலே வித்தியாசங்கள் யாவும் அகற்றப்படுகின்றன. (கலா. 3 : 26 – 28)

7. கர்த்தருடைய வருகையில் சரீரம் உயிர்த்தெழுவதற்கு தண்ணீர் ஞானஸ்நானம் ஒரு முன் நிபந்தனையாயிருக்கிறது. அவருடைய மரணத்தின் சாயலில் (ஞானஸ்நானத்தில்) நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம் (ரோமர் 6 : 4, 5). (மூல பாஷையில் உயிர்தெழுதலின் சாயல் என்பதற்குப் பதிலாக உயிர்த்தெழுதல் என்று தான் கூறப்பட்டுள்ளது.)

****

தண்ணீர் ஞானஸ்நானம்

(பகுதி II)

I *மனப்பாட வசனம் :* (2 Marks)

மாற்கு 16 : 16

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்: விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

ரோமர் 6 : 2 - 4

பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல ,நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

II *யார் யாரிடம் எப்போது கூறியது:* (2½ Marks)

1. "நீங்கள் விசுவாசிகளான போது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?" (அப். 19 *: 2)*
யார் : பரி. பவுல்
யாரிடம் : எபேசுவிலுள்ள சில சீஷரிடம்
எப்போது : பரி, பவுல் தனது மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தின் போது மேடான தேசங்கள் வழியாய்ப் போய் எபேசுவுக்கு வந்தார். அங்கே சில சீஷரைக் கண்டு அவர்களிடம் இவ்வாறு கேட்டார்.

2. "பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை.." *(அப். 19 : 2)*
யார் : எபேசுவிலுள்ள சில சீஷர்கள்
யாரிடம் : பரி. பவுல்
எப்போது : பரி. பவுல் தனது மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தின் போது மேடான தேசங்கள் வழியாய்ப் போய் எபேசுவுக்கு வந்தார். அங்கே சில சீஷரைக் கண்டு, நீங்கள் விசுவாசிகளான போது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர்கள் : பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்..

3. அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் . (அப். 19 : 3)
யார் : பரி. பவுல்
யாரிடம் : எபேசுவிலுள்ள சில சீஷரிடம்
எப்போது : பரி. பவுல் தனது மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தின் போது மேடான தேசங்கள் வழியாய்ப் போய் எபேசுவுக்கு வந்தார். அங்கே சில சீஷரைக் கண்டு, நீங்கள் விசுவாசிகளான போது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? என்று கேட்டான். அதற்கு அவர்கள் : பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். அப்பொழுது பவுல் அவர்களிடம் இவ்வாறு கேட்டான்.

III *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Marks)

1. தண்ணீர் ஞானஸ்நானம் என்னும் பதம் எந்த மூல பாஷையிலிருந்து வந்தது?
ஞானஸ்நானம் என்னும் பதம் கிரேக்க பாஷையிலிருந்து வந்தது. (பாடத்திட்டம்)

2. பாப்டைஸோ **(Baptiso)** என்ற பதத்தின் அர்த்தம் என்ன?
பாப்டைஸோ என்றால் முழுகுதல் என்று அர்த்தமாகும். (பாடத்திட்டம்)

3. யோவான்ஸ்நானன் எந்த இடத்தில் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்?
சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியால் அங்கு ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் (யோவான்3:23)

4. சரியான ஞானஸ்நானம் எது ?
முழுக்கு ஞானஸ்நானம் தான் சரியான ஞானஸ்நானமாகும் (பாடத்திட்டம்)

5. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எந்த ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டார்?
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். (மாற்கு 1 : 9 , 10)

6. அப்பொல்லோ எந்த பட்டணத்தில் வசித்து வந்தான்? அங்கு எத்தனை பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்?
அப்பொல்லோ எபேசு பட்டணத்தில் வசித்து வந்தான். அங்கு பன்னிரெண்டு பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். (அப். 19 : 7)

7. வேதாகமங்களில் வல்லவனும், ஆவியில் அனலுள்ளவனுமாயிருந்தும், பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறாமலிருந்த யூதன் யார்? அவனுக்கு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் விவரித்துக் காண்பித்தவர்கள் யார்?
   1. *அப்பொல்லோ*
   2. *ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் (அப். 18 : 24, 26)*

IV <u>ஓரிரு வாக்கிய□ களில் விடையளி :</u>

1. தண்ணீர் ஞானஸ்நானம் யார் பெற்றுக் கொள்ள வேண்டும்?
ஒருவன் மனந்திரும்பி (அப். 2:38) தன் பாவங்களை அறிக்கை செய்து (மாற்கு 1:5) விசுவாசித்து (மாற்கு 16:16) அதன் பின்பு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2. இயேசு தம்மிடத்தில் வந்த குழந்தைகளுக்கு என்ன செய்தார்?
இயேசு தம்மிடம் வந்த குழந்தைகளின் மேல் தம் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வில்லை. (மத். 19 : 13 - 15)

3. குழந்தை ஞானஸ்நானம் தேவ வசனத்துக்கு ஒத்ததாக இல்லை ஏன்?
ஒருவன் மனந்திரும்பி (அப். 2:38) தன் பாவங்களை அறிக்கை செய்து (மாற்கு 1:5) விசுவாசித்து (மாற்கு 16 : 16) அதன் பின்பு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்.
சிறு குழந்தைகள் இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாதாகையால் குழந்தை ஞானஸ்நானம் தேவ வசனத்துக்கு ஒத்ததல்ல (பாடத்திட்டம்)

4. தண்ணீர் ஞானஸ்நானம் என்னும் பதம் எந்த மூல பாஷையிலிருந்து வந்தது? அதின் பொருள் என்ன?
தண்ணீர் ஞானஸ்நானம் என்னும் பதம் பாப்டைஸோ (Baptiso) என்னும் மூல கிரேக்க பாஷையிலிருந்து வந்தது. இதற்கு முழுகுதல் என்று பொருள்படும். எனவே தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்.

5. தண்ணீர் ஞானஸ்நானம் எந்த நாமத்தில் கொடுக்கப்பட வேண்டும் ? யார் கொடுக்க வேண்டும்?
தண்ணீர் ஞானஸ்நானம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே கொடுக்கப்பட வேண்டும். பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்ற தேவ ஊழியர்கள் கொடுக்க வேண்டும்.(மத். 28 : 19)

6. பவுல் எபேசுவிலே அப்பொல்லோ ஞானஸ்நானம் கொடுத்த பன்னிரண்டு பேருக்கு ஏன் மறுபடியும் தண்ணீர் ஞானஸ்நானம் கொடுத்தார்?,
பவுல் எபசேுவுக்குச் சென்ற போது, அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றிராதவரிடத்தில் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டிருந்ததை அறிந்து, அவர்களுக்கு மறுபடியும் தண்ணீர் ஞானஸ்நானம் கொடுத்தார். (அப். 19 : 1 - 7)

V <u>சுருக்கமான விடையளி :</u> (4 Marks)

1. தண்ணீர் ஞானஸ்நானம் யார் பெற்றுக் கொள்ள வேண்டும்?.
ஒருவன் மனந்திரும்பி (அப். 2 : 38) தன் பாவங்களை அறிக்கை செய்து (மாற்கு 1 : 5) விசுவாசித்து (மாற்கு 16 : 16) அதன் பின்பு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள

வேண்டும். சிறு குழந்தைகள் இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாதாகையால் குழந்தை ஞானஸ்நானம் தேவ வசனத்துக்கு ஒத்ததல்ல. கர்த்தராகிய இயேசு, குழந்தை ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவோ, கொடுக்கவோ இல்லை. அவர், தம்மிடம் வந்த குழந்தைகளின் மேல் தம் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தாரேயொழிய அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வில்லை. (மத். 19 : 13 - 15) (பாடத்திட்டம்.)

2. தண்ணீர் ஞானஸ்நானம் எப்படிக் கொடுக்கப்பட வேண்டும்?

தண்ணீர் ஞானஸ்நானம் என்னும் பதம் பாப்டைஸோ என்னும் மூல கிரேக்க பாஷையிலிருந்து வருவதாகும். இதற்கு முழுகுதல் என்று பொருள்படும். கர்த்தராகிய இயேசு முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். (மாற். 1 : 9, 10) அயினோன் என்னுமிடத்தில் தண்ணீர் மிகுதியாயிருந்தபடியால் அங்கு யோவான் ஸ்நானன் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். (யோவான் 3 : 23) ஆகவே ஒரு மனிதன் தண்ணீரில் முழுவதும் மூழ்குமாறு கொடுக்கப்படும் முழுக்கு ஞானஸ்நானமே சரியான ஞானஸ்நானமாகும். ஞானஸ்நானம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே கொடுக்கப்பட வேண்டும். (மத். 28 : 19)

3. யார் தண்ணீர் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்?

பரிசுத்த ஆவியின், பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்ற தேவ ஊழியர்கள் மட்டுமே தண்ணீர் ஞானஸ்நானம் கொடுக்கலாம். பரிசுத்தாவியைப் பெறாதவர்களால் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் சரியானதல்ல. அப்படிப்பட்ட ஞானஸ்நானம் பெற்றவர்கள் மறுபடியும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பொல்லோ என்பவன் வேதாகமங்களில் வல்லவனும், ஆவியில் அனலுள்ளவனுமாயிருந்தும், அவன் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்றிருக்க வில்லை. அவன் எபேசுவிலே பன்னிரண்டு பேருக்குத் தண்ணீர் ஞானஸ்நானம் கொடுத்தான். பவுல் எபசேவுக்குச் சென்ற போது, அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றிராதவரிடத்தில் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டிருந்ததை அறிந்து, அவர்களுக்கு மறுபடியும் தண்ணீர் ஞானஸ்நானம் கொடுத்தான். (அப். 18 : 24 - 28 : 19 : 1 - 7)

VI __போதனை:__ *நாம்*

தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் செயலளவோடு நின்றுவிடக்கூடாது. நாம் தண்ணீர் ஞானஸ்நான உபதேசத்தை சரியாகக் கற்றுக் கொண்டு அச்சத்தியத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு நாம் ஒவ்வொரு நாளும் நம்மைப் பாவத்துக்கு மரித்தவர்களாக எண்ணிக்கொண்டு, நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். இது கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப் படுவதற்கு நம் சரீரத்தை ஆயத்தமாய்க் காத்துக்கொள்ளும்.

****

வகுப்பு : 8

பாடம்-13

வேறுபிரிதல்

(பகுதி I)

I *மனப்பாட வசனம் :* (2 Marks)

II கொரிந்தியர் 6 : 16 - 18

தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.

ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக் கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.

II *யார் யாரிடம் எப்போது கூறியது:* (2 ½ Marks)

1. "மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டுவிலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்" (அப். 2 *: 40)*

யார் : பேதுரு

யாரிடம் : ஜனங்களிடம்

எப்போது : பெந்தேகொஸ்தே நாளில் பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களிடம், இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று பிரசங்கம் பண்ணினார். இதை ஜனங்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, ''சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்'' என்றார்கள். அப்பொழுது பேதுரு அவர்களை நோக்கி இவ்வாறு கூறினான்.

III *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Mark)

1. நாம் எதினால் மீட்கப்பட்டிருக்கிறோம்?

நாம் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டிருக்கிறோம். (1 பேதுரு 1 : 19)

2. நாம் எதினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம்?

நாம் தேவ வசனமாகிய அழியாத வித்தினாலே அல்லது சுவிசேஷத்தினாலே ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம். (1 பேதுரு 1 : 23, 25)

3. யார் வாழ்வடைய மாட்டான்? யார் இரக்கம் பெறுவான்?

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதி. 28 : 13)

4. நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறவர் யார்?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (1 யோவான் 1 : 9)

5. இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு , நாம் என்ன செய்ய வேண்டும்?

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட வேண்டும். (1 யோவான் 1 : 9)

6. அன்பின் சீஷன் யார்?
யோவான் (பாடத்திட்டம்)

7. நாம் யாருக்கு வாழ்த்துதல் சொல்லக் கூடாது ?
உபதேசத்தில் மாறுபாடுள்ளவர்களுக்கு நாம் வாழ்த்துதல் சொல்லக் கூடாது. (11 யோவான் 10, 11)

8. திரித்துவத்தை விசுவாசியாத இரு கூட்டத்தாரின் பெயர்களை குறிப்பிடு.
1) ஒருத்துவக் கொள்கைக்காரர் 2) இயேசு நாமக்காரர் (பாடத்திட்டம்)

9. மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகும்படி கூறிய அப்போஸ்தலன் யார்? அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்ல வேண்டாம் என்று கூறிய அப்போஸ்தலன் யார்?
1) பேதுரு (அப். 2 : 40) 2) யோவான் (11 யோவான் 10, 11)

IV <u>ஓரிரு வாக்கிய□ களில் விடையளி :</u>

1. மாறுபாடுள்ள சந்ததியை எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கலாம் ? அவை யாவை ?
மாறுபாடுள்ள சந்ததியை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம் அவையாவன :
1) உபதேசத்தில் மாறுபாடுள்ளவர்கள்
2) ஜீவியத்தில் மாறுபாடுள்ளவர்கள் (பாடத்திட்டம்)

2. இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் எனப்படுபவன் யார்?
இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் எனப்படுபவன், சுவிசேஷத்தின் மூலம் கர்த்தராகிய இயேசுவைத் தன் சொந்த இரட்சகராகவும், கர்த்தராகவும் ஏற்றுக் கொண்டு (யோவான் 1 : 12 : ரோமர் 10 : 9) தன் சகல பாவங்களுக்காகவும் மன ஸ்தாபப்பட்டு, அவற்றை அறிக்கை செய்து விட்டு விட்டவன் ஆவான். (நீதி 28 : 13)

3. பிழையான ஞானஸ்நானங்களை குறிப்பிடுக?
1) குழந்தை ஞானஸ்நானம்
2) தெளித்தல் ஞானஸ்நானம்
3) பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறாதவர்கள் கொடுக்கும் ஞானஸ்நானம்
4) திரித்துவத்தில் விசுவாசமில்லாது, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் கொடுக்கும் ஞானஸ்நானம் ஆகியவை சில பிழையான ஞானஸ்நானங்களாகும். (பாடத்திட்டம்)

4. அந்நிய பாஷை அடையாளத்துடன் பெற்றுக் கொள்ளுகிற பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை விசுவாசியாத கூட்டத்தாரின் பெயர்களை குறிப்பிடுக.
பிரதரன் மிஷன், யெகோவா சாட்சிகள், ஏழாம் நாட்காரர், ஆகியோர் அந்நிய பாஷை அடையாளத்துடன் பெற்றுக் கொள்ளுகிற பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை விசுவாசியாத கூட்டத்தார் ஆவர்.

5. அன்பின் சீஷனாகிய யோவான் நாம் யாருக்கு வாழ்த்துதல் சொல்ல வேண்டாம் என்று கூறியிருக்கிறார் ? இது எதைக் காண்பிக்கிறது?
அன்பின் சீஷனாகிய யோவான், உபதேசத்தில் மாறுபாடுள்ள ஒருவனுக்கு நாம் வாழ்த்துதல் சொல்லக் கூடாது என்று சொல்லுகிறார்.
இது அப்படிப்பட்டவர்களை விட்டு விலக வேண்டியது எவ்வளவு முக்கியமானது என்பதை காண்பிக்கிறது. (11 யோவான் 10 , 11)

6. மாறுபாடான உபதேசத்தைப் போதிக்கிறவர்களோடு நாம் ஏன் ஐக்கியம் வைக்கக் கூடாது?
கிறிஸ்துவின் உபதேசம் நம்மை இரட்சிப்புக்குள் நடத்துவது மட்டுமல்ல அது நமக்குள் பரிசுத்தமாகுதலின் கிரியையையும் நடப்பிக்கிறது. மாறுபாடான உபதேசங்கள் தேவனிடத்திலிருந்து வராதபடியினால் இந்நோக்கங்களை அவை நிறைவேற்றுவதில்லை. ஆகையினால் மாறுபாடான உபதேசத்தைப் போதிக்கிறவர்களோடு நாம் ஐக்கியம் வைக்கக் கூடாது. (போதனை)

V <u>சுருக்கமான விடையளி :</u> (4 Marks)

1. உபதேசத்தில் மாறுபாடுள்ளவர்கள் யார்? வசன ஆதாரம் தருக.

1) மனந்திரும்புதலின் உபதேசம் இல்லாதவர்கள் (யோவான் 1 : 9, 12, ரோமர் 10 : 9)
2) தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றிப் பிழையான உபதேசமுள்ளவர்கள்.

3) அந்நிய பாஷை அடையாளத்துடன் பெற்றுக் கொள்ளுகிற பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை விசுவாசியாதவர்களும், அதற்கு விரோதமாகப் பிரசங்கிக்கிறவர்களும், போதிக்கிறவர்களும் (பிரதரன் மிஷன், யெகோவா சாட்சிகள், ஏழாம் நாட்காரர்)
4) திரித்துவத்தை விசுவாசியாதவர்கள் (ஒருத்துவ கொள்கைக்காரர், இயேசு நாமக்காரர்) முதலியவர்கள்.
5) பூரண பிரதிஷ்டையுள்ள அப்போஸ்தல ஊழியத்தை விசுவாசியாதவர்கள் (லூக்கா 14 : 26, 33) ஆகியோர் உபதேசத்தில் மாறுபாடுள்ளவர்கள் ஆவர்.

2. மனந்திரும்புதலின் உபதேசம் இல்லாதவர்கள் பற்றி குறிப்பு எழுது.

ஒருவன் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்ததினாலும், கிறிஸ்தவப் பெற்றோர்களால் வளர்க்கப்பட்டதினாலும், கிறிஸ்தவப் பெயர் வைத்திருப்பதினாலும், ஒழுங்காக ஆலயத்திற்குச் செல்வதினாலும், சன்மார்க்க ஜீவியம் செய்வதினாலும், காணிக்கைக் கொடுப்பது போன்றவற்றினாலும் தன்னை ஒரு கிறிஸ்தவன் என்று அழைத்துக் கொள்ள முடியாது. சிலர் இப்படிப்பட்ட ஜீவியம் செய்தால் போதும் என்று போதிக்கிறார்கள் அப்படிப்பட்ட போதனை வேத வசனத்திற்கு முரண்பாடானது. பேதுரு தன் நிருபத்தில் நாம் பாரம்பரியமாய் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டிருக்கிறோம் என்றும் (1 பேதுரு 1 : 18, 19), தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே அல்லது சுவிசேஷத்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம் என்று விவரிக்கிறார் (1 பேதுரு 1 : 23, 25). எனவே, இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் எனப்படுபவன், சுவிசேஷத்தின் மூலம் கர்த்தராகிய இயேசுவைத் தன் சொந்த இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக் கொண்டு (யோவான் 1 : 12 : ரோமர் 10 : 9), தன் சகல பாவங்களுக்காவும் மனஸ்தாபப்பட்டு, அவற்றை அறிக்கை செய்து விட்டு விட்டவன் ஆவான்.(நீதி 28 : 13 : 1 யோவான் 1 : 9)

VI <u>போதனை:</u>

கிறிஸ்துவின் உபதேசம் நம்மை இரட்சிப்புக்குள் நடத்துவது மட்டுமல்ல அது நமக்குள் பரிசுத்தமாகுதலின் கிரியையையும் நடப்பிக்கிறது. மாறுபாடான உபதேசங்கள் தேவனிடத்திலிருந்து வராதபடியினால் இந்நோக்கங்களை அவை நிறைவேற்றுவதில்லை. ஆகையினால் மாறுபாடான உபதேசத்தைப் போதிக்கிறவர்களோடு நாம் ஐக்கியம் வைக்கக் கூடாது.

****

வகுப்பு : 8

பாடம்-14

வேறுபிரிதல்

(பகுதி II)

I *மனப்பாட வசனம் :* (2 Marks)

ரோமர் 16 : 17

அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

II *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*

1. யாரை சபையை விட்டுத் தள்ளிப் போட வேண்டும் என்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறார்?

விபச்சாரம், பொருளாசை, விக்கிரகாராதனை, உதாசீனம், வெறி, கொள்ளை போன்ற பாவத்தில் ஜீவிக்கிற விசுவாசி சகோதரனை சபையை விட்டுத் தள்ளிப்போட வேண்டும் என்று பவுல் குறிப்பிடுகிறார். (1 கொரி 5 : 11, 13)

2. ஒழுங்கற்ற சகோதரர் என்பவர்கள் யாா ? அவர்களை என்ன செய்ய வேண்டும்?

ஒரு காலத்தில் தேவனுடைய வசனத்தின் படி ஜீவித்து, பின்பு தாங்கள் ஏற்றுக் கொண்ட முறைமையின்படி நடவாமல், தேவனுடைய வசனத்துக்கு கீழ்படியாமல் போன சகோதரர் ஒழுங்கற்ற சகோதரர் எனப்படுவர்.

அவர்களைக் குறித்துக் கொண்டு, அவர்கள் வெட்கப்படும்படிக்கு அவர்களுடனே கலவாதிருக்க வேண்டும் (2 தெச 3 : 6, 14)

3. நாம் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களை என்ன செய்ய வேண்டும்?

நாம் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டும். (ரோமர் 16 : 17)

4. ஒரு தேவனுடைய பிள்ளையை தான் பெற்றுக் கொண்டிருக்கும் திவ்விய சுபாவங்களை இழந்து போகச் செய்வது எது?

அவிசுவாசிகளோடும், ஒழுங்கற்ற ஜீவியம் செய்கிற சகோதரரோடும் ஐக்கியமாயிருப்பது ஒரு தேவனுடைய பிள்ளையை தான் பெற்றுக் கொண்டிருக்கும் திவ்விய சுபாவங்களை இழந்து போகச் செய்யும். (போதனை)

III *சுருக்கமான விடையளி :* (4 Marks)

1. ஜீவியத்தில் மாறுபாடுள்ளவர்கள் யார்? வசன ஆதாரம் தருக.

1) குணப்படாதவர்கள் (2 கொரிந்தியர் 6 : 14 - 17)
2) பொல்லாத சகோதரர் (1 கொரிந்தியர் 5 : 11, 13)
3) ஒழுங்கற்ற சகோதரர் (2 தெச. 3 : 6, 14)
4) சபையில் பிரிவினைகளை உண்டாக்குகிற சகோதரர் (ரோமர் 16 : 17)
5) தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிறவர்கள் (2 தீமோ. 3 : 1 - 5) ஆகியோர் ஜீவியத்தில் மாறுபாடுள்ளவர்கள் ஆவர்.

2. ஜீவியத்தில் மாறுபாடுள்ளவர்கள் பற்றி விரிவாக எழுது.

ஜீவியத்தில் மாறுபாடுள்ளவர்கள் :

1) குணப்படாதவர்கள் : குணப்படாத மனுஷரினின்று நாம் வேறுபிரிந்து ஜீவிக்க வேண்டும். (2 கொரி. 6 : 14 - 17)

2) பொல்லாத சகோதரர் : சபையிலுள்ள விசுவாசிகளில் யாரேனும் விபசாரம் போன்ற பாவங்களில் ஜீவிப்பார்களாயின் அப்படிப்பட்டவளை சபையை விட்டுத் தள்ளிப் போடப்பட வேண்டும். (1 கொரி. 5 : 11, 13)
3) ஒழுங்கற்ற சகோதரர் : ஒரு காலத்தில் தேவனுடைய வசனத்தின்படி ஜீவித்து, பின் ஒழுங்கற்று நடக்கும் விசுவாசிகள் (2 தெச. 3 : 6, 14)
4) சபையில் பிரிவினை உண்டாக்குகிற சகோதரர். (ரோமர் 16 : 17)
5) தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிறவர்கள் (2தீமோ. 3 : 1 - 5)

3. நாம் ஏன் குணப்படாத மனுஷரின்று வேறுபிரிந்து ஜீவிக்க வேண்டும்?

நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமில்லை. ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமில்லை. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவில்லை. அவிசுவாசியுடன் விசுவாசிக்குப் பங்கில்லை. தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமில்லை.

மேலும் தேவன், 'நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்' என்று சொல்லியிருக்கிறார். நாம் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம்.

ஆனபடியால், நாம் அவர்கள் நடுவிலிருந்து வேறு பிரிந்து, அசுத்தமானதைத் தொடாமல் ஜீவிக்க வேண்டும். (2 கொரி. 6 : 14 - 17)

IV <u>போதனை:</u>

அவிசுவாசிகளோடும், ஒழுங்கற்ற ஜீவியம் செய்கிற சகோதரரோடும் ஐக்கியமாயிருப்பது ஒரு தேவனுடைய பிள்ளையை, தான் பெற்றுக் கொண்டிருக்கும் திவ்விய சுபாவங்களை இழந்து போகச் செய்யும். எனவே அப்படிப்பட்டவர்களிலிருந்து நாம் வேறு பிரிய வேண்டும்

****

வகுப்பு : 8

பாடம்-15

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்

I *மனப்பாட வசனம் :* (2 Marks)

1 கொரிந்தியர் 6 : 19, 20

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா?

கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

III *யார் யாரிடம் எப்போது கூறியது:* (2 ½ Marks)

1. "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்" (யோவான். 7 *: 38)*

யார் : இயேசு

யாரிடம் : யூத ஜனங்களிடம்

எப்போது : கூடார பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளில் இயேசு தேவாலயத்தில் உபதேசிக்கையில், தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார்.

2. **a.** "அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல" (மத் 3 : 11)

b. "அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத் 3 : 11)

யார் : யோவான் ஸ்நானன்

யாரிடம் : தம்மிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வந்த பரிசேயர் மற்றும் சதுசேயரிடம்

எப்போது : யோவான் ஸ்நானன் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருக்கும்போது பரிசேயரிலும், சதுசேயரிலும் அநேகர் அவனிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வந்தார்கள். அப்பொழுது அவன் அவர்களைக் கண்டு, மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன் எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார்; அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல என்றான்.

IV *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Mark)

1. ஆதி அப்போஸ்தலர்களின் அனுபவங்களில் ஒன்றைக் கூறு.
பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம். (எபி 6 : 1, 2) (பாடத்திட்டம்)

2. பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதின் வெளிப்படையான அடையாளம் என்ன?
அந்நியபாஷை பேசுதல் (அப். 2 : 4)

3. எதன் மூலம் திரித்துவதேவன் நமக்குள் வாசம் பண்ண வருகிறார்?
பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலம். (யோவான் 14 : 16, 20)

4. நாம் எப்போது தேவனுடைய வாசஸ்தலமாகிறோம்?
பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது. (1கொரிந்தியர்3:16,17)

5. ஆதி அப்போஸ்தலர்கள் எப்போது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றனர்?
பெந்தெகொஸ்தே என்னும் நாளில். (அப். 2 : 1 -3)

6. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆசாரியர்களும் ராஜாக்களும் எதினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள்?

பரிசுத்த அபிஷேக தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். (லேவி 8:12; 1 சாமு. 10 : 1)

V ஓரிரு வாக்கிய□களில் விடையளி:

1. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள பற்பல பெயர்களைக் குறிப்பிடு.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்குப்

a. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல். (அப். 9 : 17)
b. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் (அப். 10 : 38)
c. பரிசுத்த ஆவியின் பொழிந்தருளுதல் (அப். 2 : 33; 10 : 46)
d. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுதல் (கலா 3 : 2)
e. பரிசுத்த ஆவியின் முத்திரை (எபே 1 : 13 ; 4 : 30)
f. ஆவியின் அச்சாரம் (2கொரி 5 : 5 ; 1 : 22 ; எபே 1 : 14)

போன்ற பற்பல பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

2. பரிசுத்த ஆவி எவற்றிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது?

பரிசுத்த ஆவி அக்கினி (மத். 3 : 11), தண்ணீர் (யோவான் 7 : 38,39) தைலம் (சங்.89 : 20) காற்று (யோவான் 3 : 8) ஆவியவற்றிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

3. மகா பரிசுத்தஸ்தலம் எப்பொழுது தேவனுடைய தாபர ஸ்தலமாயிற்று?

தேவனுடைய மகிமை ஆலயத்தில் வந்து இறங்கிய பின்பு மகா பரிசுத்தஸ்தலம் தேவனுடைய தாபர ஸ்தலமாயிற்று. (2நாளா 6 : 41 ; 7 :1)

4. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பரிசுத்த அபிஷேக தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் யார்? இந்த அபிஷேகம் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் எதற்கு நிழலாட்டமாயிருக்கிறது?

பழைய ஏற்பாட்டுக்காலத்து ஆசாரியர்களும், இராஜாக்களும் பரிசுத்த அபிஷேகத் தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். இது புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதற்கு நிழலாட்டமாயிருக்கிறது. (லேவி 8:12;1சாமு 10:1)

VI விரிவான விடையளி : (10 Marks)

1. பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்வதின் வெளிப்படையான அடையாளம் - "அந்நிய பாஷை பேசுதல்" இதனை வசன ஆதாரத்துடன் விளக்குக.

1) பெந்தெகொஸ்தே என்னும் நாளில் 120 சீஷர்கள் கூடியிருந்தபோது, அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். (அப். 2 : 1, 4)

2) பேதுரு, கொர்நேலியு வீட்டில் தேவனுடைய வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கையில், வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும்,, பேதுருவோடுகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள். (அப். 10 : 44 - 46)

3) எபேசுவிலிருந்த சீஷர்கள்மேல் பவுல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார் ; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். (அப். 19 : 6)

4) பரியாச உதடுகளினாலும் அந்நியபாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல்; இதுவே ஆறுதல் என்று அவர்களோடே அவர் சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறாாக்ள். (ஏசாயா 28 11, 12):

5) மறுபாஷைக்காரராலும், மறுஉதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன்; ஆகிலும் அவாக்ள் எனக்குச் செவிக்கொடுப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே என்று பரி.பவுல் 1 கொரி 14 : 21 ல் குறிப்பிடுகிறார்.

மேலே குறிப்பிட்டுள்ள வசன ஆதாரங்களைக் காணும்போது பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்வதின் வெளிப்படையான அடையாளம் அந்நிய பாஷைகளைப் பேசுதல் என்பது விளங்குகிறது.

2. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்றால் என்ன? அதற்கு கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு பெயர்கள் யாவை? பழைய ஏற்பாட்டில் இதற்கு ஒத்த அனுபவம் யாது? விளக்குக.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது ஆதி அப்போஸ்தலரின் அனுபவங்களில் ஒன்று. அவர்கள் இதைத் தங்கள் உபதேசங்களிலொன்றாகப் பிரசங்கித்தனர். (எபி6:1,2) தம்மை விசுவாசிக்கிறவனுடைய உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் புறப்படும் என்று கர்த்தராகிய இயேசு இந்த அனுபவத்தைக் குறித்துக் கூறினார். (யோவான் 7 : 38, 39). பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்வதின் வெளிப்படையான அடையாளம் அந்நியபாஷைகளைப் பேசுதலாகும். (அப். 2 : 4 ; 10 : 44 - 46 ; 19 : 6 ; ஏசாயா 28 : 11, 12 ; 1 கொரி 14 : 21)

பரிசுத்தஆவியின் ஞானஸ்நானத்திற்கு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், பரிசுத்தாவியின் பொழிந்தருளுதல், பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுதல், பரிசுத்தாவியின் முத்திரை மற்றும் ஆவியின் அச்சாரம் போன்ற பற்பல பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பரிசுத்தாவி, அக்கினிக்கும் (மத். 3 : 11, அப். 2 : 3), தண்ணீருக்கும் (யோவான் 7 : 38, 39) காற்றுக்கும் (யோவான் 3 : 8), தைலத்துக்கும் (சங் 89 : 20) ஒப்பிடப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவனுடைய மகிமை ஆலயத்தில் வந்து இறங்கியபின்பே, மகா பரிசுத்த ஸ்தலம் தேவனுடைய தாபர ஸ்தலமாயிற்று (2 நாளா 6 : 41, 7 : 1 , சங் 132 :8). இது புதிய ஏற்பாட்டின் உண்மைப் பொருளுக்கு நிழலாட்டமாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலம் திரித்துவ தேவன் நமக்குள் வாசம்பண்ணவருகிறார் (யோவான்14:16,20). நாம் தேவனுடைய வாசஸ்தலமாயிருக்கிறோம் (1கொரி3: 16, 17, எபே. 2 : 21,22). பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆசாரியர்களும் ராஜாக்களும் பரிசுத்த அபிஷேக தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டனர். இது புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு நிழலாட்டமாயிருக்கிறது.

VII <u>போதனை:</u>

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய சரீரம் தேவனுடைய ஆலயமாகிறது. எனவே, நம் சரீரத்தைப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்வதைக் குறித்து நாம் அதிகக் கவனமாயிருக்க வேண்டும்.

****

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் நடப்பிக்கும் கிரியைகள்

I *மனப்பாட வசனம் :* (2 Marks)

எபேசியர் 4 : 30,31

அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.

சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது.

II *யார் யாரிடம் எப்போது கூறியது?* (2 ½ Marks)

1. "....... நீங்கள் இந்த மலையிலும், எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது" (யோவான் 4 : 21).
   யார் : இயேசு
   யாரிடம் : சமாரிய ஸ்திரீயிடம்
   எப்போது : இயேசு சமாரிய ஸ்திரீயிடம் தண்ணீர் கேட்ட அந்த சந்தர்ப்பத்தில் அவள் அவரை தீர்க்கதரிசி என்று அறிந்து, எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டு வந்தார்கள், நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ள வேண்டும் என்கிறீர்களே என்று கூறியபோது இயேசு அவளிடம் இவ்வாறு கூறினார்.

2. "....... பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் " (யோவான் 14 : 26)
   யார் : இயேசு
   யாரிடம் : சீஷர்களிடம்
   எப்போது : இயேசு, சீஷர்களிடம், 'நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்' என்று பிதா நமக்கு அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியைக்குறித்து கூறும்போது இவ்வாறு சொன்னார்.

3. "கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்" (எபே. 6 : 10)
   யார் : பரி, பவுல்
   யாரிடம் : எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களிடம்.
   எப்போது : பரி பவுல் எபேசு சபையிலுள்ள விசுவாசிகளுக்கு புத்தி சொல்லுகிற போது, கடைசியாக இவ்விதமாக சொன்னார்.

III *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Mark)

1. நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறவர் யார்?
   பரிசுத்த ஆவியானவர் (எபே. 1 : 14).
2. நாம் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாக கொடுக்கப்பட்டது எது?
   பரிசுத்த ஆவி (எபே. 4 : 30).
3. 'இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல்' எது?
   பரிசுத்த ஆவி (ஏசாயா 28 : 12).
4. ஒருவனை பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்குவது எது?
   தேவனுடைய ஆவியின் பிரமாணம் (ரோமர் 8 : 2).
5. 'இனிவரும் உலகம்' என்பது எது?
   பரிசுத்தவான்களின் இராஜ்ஜியம் (பாடத்திட்டம்)
6. பரிசுத்த ஆவியானவர் நம்மை ஏன் பெலனைடையச் செய்கிறார்?
   கிறிஸ்துவுக்கு நாம் சாட்சிகளாயிருக்கும்படியாக நம்மை பெலனடையச் செய்கிறார் (அப். 1 : 8).

7. யாருக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை?
தேவனுடைய ஆவியின் பிரமாணத்தின் கீழ் ஜீவிக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை (ரோமர் 8 : 1,2).

8. உள்ளான மனுஷனில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வதால் என்ன உண்டாகிறது?
பரிசுத்தமாகுதல் உண்டாகிறது (பாடத்திட்டம்)

9. ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்திற்குள் கொண்டுவரப்பட்டவர்கள் மேல் எந்த பிரமாணத்திற்கு அதிகாரம் இல்லை?
பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்திற்கு அதிகாரமில்லை (ரோமர் 8 : 2).

10. பரிசுத்த ஆவியானவர் பரிசுத்தவான்களுடன் சேர்ந்து கொடுக்கும் சாட்சி என்ன?
இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர் பரிசுத்தவான்களுடன் சேர்ந்து சாட்சிக் கொடுக்கிறார் (அப். 1 : 8).

11. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஆவியுடனேகூட கொடுக்கும் சாட்சி என்ன?
நாம் தேவனுடைய புத்திரராயிருக்கிறோம் என்று அவர் நம்முடைய ஆவியுடனே கூட சாட்சி கொடுக்கிறார் (ரோமா 8 : 16).

IV <u>ஓரிரு வாக்கிய□களில் விடையளி :</u>

1. பரிசுத்த ஆவியானவர் எப்பொழுது நமக்குள்ளிருந்து வேண்டுதல் செய்கிறார்?
பலவித கவலைகளினாலும், பெலவீனங்களினாலும் நாம் எவ்விதம் எதற்காக ஜெபிக்க வேண்டும் என அறியாதவர்களாயிருக்கும்போது பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளிலிருந்து வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8 : 26).

2. பரிசுத்த ஆவியானவர் நம்மை எப்படி பரிசுத்தாவிக்குள் ஜெபம்பண்ண செய்கிறார்?.
பரிசுத்த ஆவியானவர் நம் மூலமாக ஜெபித்து, நம் கவலைகளை மாற்றி, நம் ஆவியை உயிர்ப்பித்து, நம்மை பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணச் செய்கிறார் (பாடத்திட்டம்) (யூதா 20).

3. பரிசுத்த ஆவியானவர் சரீரத்தின் செய்கைகளை எப்போது அழிக்கிறார்? எவற்றை அழிக்கிறார்?
நாம் நம்மை அவருக்கு ஒப்புக் கொடுக்கும்போது சரீரத்தின் செய்கைகளாகிய தீய பழக்கவழக்கங்களையும் மாம்சத்தின் கிரியைகளையும் அழிக்கிறார் (ரோமர் 8 : 13) (பாடத்திட்டம்).

4. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சாவுக்கேதுவான சரீரங்களை எப்போது உயிர்ப்பிக்கிறார்? .
நாம் வியாதிப்படும்போது அல்லது கிறிஸ்துவிற்காக உபத்திரவங்களின் பாதைகளின் வழியாகச் செல்லும்போது அவர் நம்முடைய சரீரங்களை உயிர்ப்பிக்கிறார் (ரோ. 8 : 11) (பாடத்திட்டம்).

5. எதற்காக நமக்கு உள்ளான பெலன் தேவையாயிருக்கிறது?
சோதனைகளின் மத்தியில் நாம் சந்தோஷத்துடனும் பொறுமையுடனும் இருக்கவும், சாத்தானை எதிர்த்து அவனை மேற்கொள்ளவும் நமக்கு உள்ளான பெலன் தேவையாயிருக்கிறது. (எபே. 6 : 10, 11; கொலோ. 1 : 11).

6. பரிசுத்த ஆவியானவர் சபைகளில் செய்யும் கிரியைகள் என்ன?
தேவனுடைய ஊழியக்காரரை தேவ சித்தத்தின்படி சபைகளுக்கு நியமிப்பதும், அவர்கள் மூலம் சபைகளுக்குத் தேவையான தூதுகளைக் கொடுப்பதும் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் ஆகும் (அப். 13 : 2; 20 : 28; வெளி. அதி. 2, 3).

7. பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மனதை நமக்கு எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
சபையில் ஒன்பதுவிதமான வரங்கள் கிரியை செய்வதின் மூலம் வெளிப்படுத்துகிறார்.(1 கொரி 12:8-11)

V <u>சுருக்கமான விடையளி</u> : (4 Marks)

1. பரிசுத்த ஆவியானவர் சபையில் நடப்பிக்கும் கிரியைகள் யாவை?
   i) பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலம் சபையில் அநேகராகிய நாம் ஒரே சரீரமாக்கப்படுகறோம் (I கொரி. 12 : 13)
   ii) பரிசுத்த ஆவியானவர் தமது சித்தத்தின்படியே வரங்களைப் பகிர்ந்து கொடுக்கிறார் (I கொரி. 12 : 7-11)

iii) தேவனுடைய ஊழியக்காரரை தேவசித்தப்படி சபைகளுக்கு நியமிப்பதும். (அப். 13:2; 20 : 28) அவர்கள் மூலம் சபைகளுக்குத் தேவையான தூதுகளைக் கொடுப்பதும் பரிசுத்த ஆவியானவரே ஆவார் (வெளி. 2, 3 அதிகாரங்கள்).

2. ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்யவும், ஆவியினாலே ஜெபிக்கவும் பரிசுத்த ஆவியானவர் நமக்கு எவ்விதம் உதவி செய்கிறார்?.

1. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற தேவனுடைய பிள்ளையாகிய நாம், நம்முடைய ஆவியை பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்போது தேவ சமூகத்திற்குள், பிரவேசிக்கிறோம் (யோவான் 4 : 24; பிலி. 3 : 3). அப்பொழுது நாம் ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்யக்கூடியவர்களாகிறோம்.

2. பலவித கவலைகளினாலும் பெலவீனங்களினாலும் நாம் எவ்விதம், எதற்காக ஜெபிக்க வேண்டும் என அறியாதவர்களாயிருக்கும்போது பரிசுத்தாவியானவர் நமக்குள்ளிருந்து வேண்டுதல் செய்கிறார். மேலும், நம் மூலமாக ஜெபித்து, நம் கவலைகள் மாற்றி, நம் ஆவியை உயிர்ப்பித்து நம்மை பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணச் செய்கிறார் (ரோமர் 8 : 26; யூதா 20). இவ்வாறாக பரிசுத்த ஆவியானவர் ஆவியினாலே ஜெபிக்க உதவி செய்கிறார்.

3. தேவனுடைய வசனத்தை அறிவதற்கு பரிசுத்த ஆவியாகிய சத்திய ஆவியானவர் நமக்கு எவ்வாறு உதவிசெய்கிறார்?

(i.) பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வசனத்திலிருந்து சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார்.(1 யோவான் 2:27)

(ii.) சத்திய ஆவியாகிய அவர், நாம் நடக்க வேண்டிய வழியில் நம்மை தனிப்பட்ட விதத்தில் நடத்துகிறார்.(யோவான் 16:13)

(iii.) மறைக்கப்பட்ட சத்தியங்களை அவர் நமக்கு வேளிப்படுத்துகிறார். (1கொரி 2:9-11)

(iv.) சபையில் ஒன்பது விதமான வரங்கள் கிரியை செய்வதன் மூலம் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மனதை நமக்கு வெளிப்படுத்துகிறார். (1 கொரி 12:8-11)

VI <u>விரிவான விடையளி :</u> (10 Marks)

1. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் நடப்பிக்கும் ஏதேனும் <u>பத்து</u> கிரியைகளை எழுது?

1. பரிசுத்த ஆவியினால் நாம் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையிடப்படுகிறோம் (எபே. 4 : 30). நம்முடைய ஆத்துமா ஏற்கனவே மீட்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சரீர மீட்புக்காக நாம் காத்துக்கொண்டிருக்கிறோம் (ரோமர் 8 : 23). நாம் கிறிஸ்துவினுடைய மகிமைக்குப் புகழ்ச்சிக்காக மீட்கப்படுவோம் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார் (எபே. 1 : 13, 14).
2. ஆவியினாலே நாம் தேவனுக்கு ஆராதனை செய்ய பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒரு விசுவாசி தன்னுடைய ஆவியைப் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தேவ சமுகத்திற்குள் பிரவேசிக்க கூடியவானாகிறான் (யோவான் 4 : 24; பிலி. 3 : 3).
3. பலவித கவலைகளினாலும் பெலவீனங்களினாலும் நாம் எவ்விதம், எதற்காக ஜெபிக்க வேண்டும் என அறியாதவர்களாயிருக்கும்போது பரிசுத்தாவியானவர் நமக்குள்ளிருந்து வேண்டுதல் செய்கிறார். பரிசுத்த ஆவியானவர் நம் மூலமாக ஜெபித்து, நம் கவலைகளை மாற்றி, நம் ஆவியை உயிர்ப்பித்து நம்மை பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணச் செய்கிறார் (ரோமர் 8 : 26; யூதா 20).
4. பரிசுத்த ஆவியானவர் நம்மைத் தேற்றுகிறார் (யோவான்14:26). அந்நியபாஷைகளைப் பேசுவதால் நமக்கு இளைப்பாறுதல் உண்டாகிறது (ஏசாயா 28 : 11, 12).
5. கிறிஸ்துவுக்கு நாம் சாட்சிகளாயிருக்க பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பெலனடையச் செய்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர் பரிசுத்தவான்களுடன் சேர்ந்து சாட்சி கொடுக்கிறார் (அப். 1 :8; 4:33; 5 : 29 - 32) ; நாம் தேவனுடைய புத்திரராயிருக்கிறோமென்றும் நம்முடைய ஆவியுடனேகூட அவர் சாட்சி கொடுக்கிறார் (ரோமர் 8 : 14, 16).
6. பரிசுத்த ஆவியானவர் ' சரீரத்தின் செய்கைகளை அழிக்கிறார் (ரோமர் 8 : 13), நாம் நம்மை அவருக்கு ஒப்புப்கொடுக்கும்போது அவர் நம் தீய பழக்கவழக்கங்கள், மாம்சத்தின் கிரியைகள் ஆகியவற்றை அழிக்கிறார்.
7. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சாவுக்கேதுவான சரீரங்களை உயிர்ப்பிக்கிறார் (ரோமர் 8 : 11). நாம் வியாதிப்படும்போது, அல்லது கிறிஸ்துவினிமித்தம் உபத்திரவங்களின் பாதைகளின் வழியாகச் செல்லும்போது அவர் நம்முடைய சரீரங்களை உயிர்ப்பிக்கிறார்.

8. பரிசுத்த ஆவியானவர் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்கிற மிகப் பெரிய பிரமாணத்திற்குள் நம்மைக் கொண்டு வருகிறார் (ரோமர்8:1,2). இப்பிரமாணத்தின்கீழ் ஜீவிக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திற்கு இவர்கள்மேல் அதிகாரம் இல்லை.
9. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய உள்ளான மனுஷனை வல்லமையாய்ப் பெலப்படுத்துகிறார் (எபே.3:16). சோதனைகளின் மத்தயில் நாம் சந்தோஷத்துடனும் பொறுமையுடனும் இருக்கவும், சாத்தானை எதிர்த்து அவனை மேற்கொள்ளவும் உள்ளான பெலன் நமக்குத் தேவையாயிருக்கிறது (கொலோ.1: 11; எபே. 6 : 10, 11)
10. நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டதுமுதல் (ரோமர் 5 : 5), கலாத்தியர் 5 : 22, 23 - இல் கூறப்பட்டுள்ள ஆவியின் கனி நமக்குள் உருவாக்கப்படத் துவங்குகிறது.
11. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலம் சபையில் அநேகராகிய நாம் ஒரே சரீரமாக்கப்படுகிறாம் (I கொரி.12:13).
12. தேவனுடைய ஊழியக்காரரை தேவசித்தப்படி சபைகளுக்கு நியமிப்பதும் (அப்.13:2; 20:28), அவர்கள் மூலம் சபைகளுக்குத் தேவையான தூதுகளைக் கொடுப்பதும் பரிசுத்த ஆவியானவரே ஆவார் (வெளி. அதி. 2, 3).
13. பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வசனத்திலிருந்து சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார்.(1 யோவான் 2:27)சத்திய ஆவியாகிய அவர், நாம் நடக்க வேண்டிய வழியில் நம்மை தனிப்பட்ட விதத்தில் நடத்துகிறார்.(யோவான் 16:13)மறைக்கப்பட்ட சத்தியங்களை அவர் நமக்கு வேளிப்படுத்துகிறார். (1கொரி 2:9-11) சபையில் ஒன்பது விதமான வரங்கள் கிரியை செய்வதன் மூலம் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மனதை நமக்கு வெளிப்படுத்துகிறார். (1 கொரி12:8-11)
14. பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பரிசுத்தப்படுத்தவும் செய்கிறார் (ரோமர் 15 : 15; 1 பேதுரு 1 : 2). உள்ளான மனுஷனில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வதால் இப்பரிசுத்தமாகுதல் உண்டாகிறது.
15. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய சாயலுக்கு அல்லது சுபாவத்திற்கு ஒப்பாயிருக்கும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 8 : 29, 30). இந்த மறுரூபமாகுதலின் வேலையை பரிசுத்த ஆவியானவர் நாளுக்குநாள் நம்முடைய உள்ளான மனிதனில் செய்து, நம்மை மகிமையின்மேல் மகிமையடையச் செய்கிறார் (2 கொரி. 3 : 18).

VII <u>போதனை:</u>

பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே நிறைவான அளவில் கிரியை செய்யும்படியாக நம்மை அவருக்கு ஒப்புக்கொடுத்து எப்போதும் நம்மை சுத்தவான்களாய்க் காத்துக்கொள்ள நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அப்போது மாத்திரமே பரிசுத்த ஆவியானவர் தம் மறுரூமாக்குதலின் வேலையை நம்மில் நடப்பித்து நம்மைக் கர்த்தருடைய வருகைக்குத் தகுதிப்படுத்துவார்

****

புதிய ஏற்பாட்டு சபை உருவான விதம்

I *மனப்பாட வசனம் :* (2 Marks)

1 பேதுரு 2 : 4,5

மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும், விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும்,

ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.

1கொரிந்தியர் 12:13

நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.

II *யார் யாரிடம் எப்போது கூறியது?* (2 ½ Marks)

1. "... இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத். 16. : 18) .

யார் : இயேசு

யாரிடம் : சீமோன் பேதுருவிடம்

எப்போது : இயேசு சீஷர்களிடம் நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். அப்பொழுது இயேசு பேதுருவிடம், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்று சொல்லி, இவ்விதமாக இந்தக் கல்லின் மேல் சபையைக் கட்டுவேன் என்றார்.

2. "சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்" (அப். 2 : 37)

யார் : வசனத்தைக் கேட்ட இஸ்ரவேலர்

யாரிடம் : மேல் வீட்டில் காத்திருந்த அப்போஸ்தலர்களிடம்

எப்போது : பெந்தெகொஸ்தே நாளில் மேல்வீட்டில் காத்திருந்த 120 பேர் பரிசுத்த ஆவியைப் பெற்று வெவ்வேறு பாஷைகளில் தேவனுடைய மகத்துவங்களை தங்கள் ஜென்ம பாஷைகளில் பேசிக்கொண்டிருந்ததை பண்டிகைக்கு வந்திருந்த திரளான ஜனங்கள் கேட்டு, பிரமித்தார்கள். மற்றவர்களோ இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள் என்று பரியாயசம் பண்ணினார்கள். அப்பொழுது பேதுரு எழுந்து நின்று உரத்த சத்தமாய், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் குறித்தும், தேவன் அவரை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்றும் பிரசங்கம் பண்ணினான். இதை அவர்கள் கேட்டபொழுது இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து இவ்வாறு கேட்டார்கள்.

3. "மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்" (அப். 2 : 40)

யார் : பேதுரு

யாரிடம் : வசனத்தைக்கேட்டு, இருதயத்தில் குத்தப்பட்டவர்களிடம்

எப்போது : பேதுருவின் வார்த்தைகளைக் கேட்டு, இருதயத்தில்

குத்தப்பட்டவர்களாய், ''சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்ட இஸ்ரவேலருக்கு புத்தி சொல்லும்போது இவ்விதமாக சொன்னான்.

III <u>*ஓரிரு வார்த்தைகளில் விடையளி :*</u> (2 Mark)

1. "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று இயேசு யாரிடம் கூறினார்? அந்தக் கல் யார்?
   பேதுருவிடம் ; அந்தக் கல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (மத. 16 : 18).

2. மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கல் எது? அது எங்கே வைக்கப்பட்டிருக்கிறது ?
   இயேசு கிறிஸ்து; சீயோனில் (1 பேதுரு 2 : 4)

3. 'ஆவிக்குரிய மாளிகை' என பேதுரு எதைக் குறிப்பிடுகிறார்?
   சபையை (1 பேதுரு 2 : 5)

4. பெந்தெகொஸ்தே நாளில் மேல் வீட்டில் காத்திருந்தவர்கள் எத்தனை பேர்?
   120 பேர் (அப். 1 : 15)

5. புதிய ஏற்பாட்டு சபை உருவாக்கப்பட்ட நாள் எது?
   பெந்தெகொஸ்தே நாள் (பாடதிட்டம்)

6. பரிசுத்த ஆவி பெற்றுக் கொண்டதின் வெளிபடையான அடையாளம் எது?
   அந்நிய பாஷைப் பேசுதல் (அப். 2 : 4).

7. பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்க, யூதர்கள் எத்தனை தேசங்களிலிருந்து, எந்த நகரத்திற்கு கூடி வந்தார்கள்?
   18 தேசங்களிலிருந்து; எருசலேம் நகரத்தில் கூடி வந்தார்கள் (அப். 2 : 6 - 11).

8. பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேர்?
   ஏறக்குறைய 3000 பேர் (அப். 2 : 41).

9. கர்த்தர் யாரை அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டிருந்தார்?
   இரட்சிக்கப்பட்டவர்களை (அப். 2 : 47).

IV <u>*ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*</u>

1. இயேசுவாகிய கல்லைக் குறித்து பேதுரு தன் நிரூபத்தில் எவ்வாறு குறிப்பிடுகிற்?
   (i) *மனுஷரால் தள்ளப்பட்டது*
   (ii) *தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டது*
   (iii) *விலையேறப் பெற்றது*
   (iv) *ஜீவனுள்ள கல் (1 பேதுரு 2 : 4 - 7).*

2. பெந்தெகொஸ்தே நாளுக்கு பழைய ஏற்பாட்டில் வழங்கப்பட்ட பெயர்கள் யாவை?
   பெந்தெகொஸ்தே என்னும் நாள் பழைய ஏற்பாட்டில்.
   (i) *வாரங்களின் பண்டிகை (உபா. 16 :10)*
   (ii) *அறுப்புக்கால பண்டிகை (யாத். 23: 16)*
   (iii) *முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை (எண்.28:26) என்று அழைக்கப்பட்டது.*

3. பரிசுத்த ஆவியைக் குறித்து சொல்லப்பட்ட யோவேலில் தீர்க்கதரிசன வசனத்தை எழுதுக.
   ''நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்; உங்கள்

மூப்பர் சொப்பனங்களையும் உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள் ” (யோவேல் 2 : 28).

4. பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு எவற்றைக்குறித்துப் பேசினார்?

i) இயேசு சிலுவையிலறையப்படுதல்

ii) உயிர்த்தெழுதல்

iii) மகிமைப்படுதல் (அப். 2 : 7-36). (பாடத்திட்டம்).

5. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு, ஞானஸ்நானம் பெற்ற மூவாயிரம் பேர் எவற்றில் உறுதியாய் தரித்திருந்தார்கள்?

1. அப்போஸ்தல உபதேசம்

2. அந்நியோந்நியம்

3. அப்பம் பிட்குதல்

4. ஜெபம் பண்ணுதல் (அப். 2 : 42).

6. இயேசு கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு வளர நாம் என்ன செய்ய வேண்டும்?.

தேவன் மாம்சமான யாவர் மேலும் தம் ஆவியை ஊற்றிக் கொண்டிருக்கிறார். ஆகவே, நாம் மனந்திரும்பி, ஞானஸ்நனாம் பெற்று, தேவசமுகத்தில் காத்தருந்து பரிசுத்த ஆவியின் ஞானஸஸ்நானம் பெற்றுக்கொண்டு, அப்போஸ்தலருடைய ஐக்கியத்தில் நிலைத்திருந்து, கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு வளரவேண்டும் (போதனை).

V <u>*சுருக்கமான விடையளி :*</u> (4 Marks)

1. ‘இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்’ என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து குறிப்பிட்ட கல்லை பேதுரு தன் நிருபத்தில் எப்படி விவரிக்கிறார்?

கர்த்தராகிய இயேசு பூமியிலிருந்தபோது, ‘இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்’ (மத். 16 : 18) என்று பேதுருவிடம் கூறினார். பேதுரு தன் நிருபத்தில், இந்தக் கல், மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய இயேசுதாமே என்று எழுதுகிறார். சபையானது இந்தக் கல்லின் மீது கட்டப்பட்ட ஜீவனுள்ள கற்களாலாகிய ஆவிக்குரிய மாளிகையாயிருக்கிறது எனவும் அவர் கூறுகிறார். இந்த மூலைக்கல் சீயோனில் வைக்கப்பட்டிருக்கிறது என வேத வசனத்திலிருந்து அவர் எடுத்துரைக்கிறார். இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லானார். ஆனால், தம் மரணத்திற்குப் பின்னர் தேவன் அவரை உயிரோடே எழுப்பி சீயோனுக்கு உயர்த்தினார் (1 பேதுரு 2 : 4- 7). அங்கே அவர் புதிய ஏற்பாட்டு சபைக்கு மூலைக்கல்லாகவும் எல்லாவற்றிற்கும் மேலான தலையாகவும் மகிமைப்படுத்தப்பட்டார். (எபே. 1 : 20 - 23).

2. பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் இருயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தரையும் பார்த்துக் கேட்டது என்ன? பேதுரு அவர்களுக்கு கொடுத்த மறுமொழி என்ன?

பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டபொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்.

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி, இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்றும் புத்திச் சொன்னான் (அப்2:37 - 40).

VI <u>*விரிவான விடையளி :*</u> (10 Marks)

1. பெந்தெகொஸ்தே நாளில் நடந்த சம்பவங்களை தொகுத்து எழுதுக.

பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் காத்துக்கொண்டிருந்தபோது, பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல ஒரு முழக்கம் உண்டாயிற்று. அல்லாமலும் அக்கினிமயமான

நாவுகள்போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அப்போது அவர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, அந்நிய பாஷைகளில் பேசினார்கள். பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்கும்படியாக ஏறக்குறைய பதினெட்டு தேசங்களிலிருந்து கூடி வந்திருந்த யூதர்கள் கலிலேயராகிய இவர்கள் தங்கள் ஜென்ம பாஷைகளிலே தேவனுடைய மகத்துவங்களைப் பேசுவதைக்கேட்டு ஆச்சரியமடைந்தனர். சிலர் அவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள் என்று பரியாசம் பண்ணினார்கள். அப்போது பேதுரு எழுந்து நின்று, "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும் உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்" (யோவேல் 2 : 28) என்று கூறிய யோவேலின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இவை யாவும் சம்பவித்தன என உறுதிப்படுத்தினார். இயேசுவின் சிலுவையிலறையப்படுதல், உயிர்த்தெழுதல், மகிமைப்படுதல் ஆகியவற்றைக்குறித்து பேதுரு பிரசங்கித்தார்(அப்.2:7-36).

அவருடைய வார்த்தைகளை கேட்டவர்கள் தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டவர்களாகி, பேதுருவினிடமும் மற்ற அப்போஸ்தலரிடமும், தாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டனர். அவர்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று புத்திச் சொன்னதுடன், மாறுபாடுள்ள சந்ததியைவிட்டு விலக வேண்டும் என்றும் அவர் கூறினார். வசனத்தை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்ட ஏறக்குறைய மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்று சபையோடு சேர்த்துக்கொள்ளப்பட்டனர் (அப்.2:37-41). அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார். (அப்.2 : 42 - 47).

2. புதிய ஏற்பாட்டு சபை உருவான விதத்தை எழுதுக.?

இயேசு பூமியிலிருந்தபோது, 'இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்' (மத். 16 : 18) என்று பேதுருவிடம் கூறினார். பேதுரு தன் நிருபத்தில், இந்தக் கல், மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய இயேசுதாமே என்று எழுதுகிறார். சபையானது இந்தக் கல்லின் மீது கட்டப்பட்ட ஜீவனுள்ள கற்களாலாகிய ஆவிக்குரிய மாளிகையாயிருக்கிறது எனவும் அவர் கூறுகிறார். இந்த மூலைக்கல் சீயோனில் வைக்கப்பட்டிருக்கிறது என வேத வசனத்திலிருந்து அவர் எடுத்துரைக்கிறார். இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லானார். ஆனால், தம் மரணத்திற்குப் பின்னர் தேவன் அவரை உயிரோடே எழுப்பி சீயோனுக்கு உயர்த்தினார் (1 பேதுரு 2 : 4- 7). அங்கே அவர் புதிய ஏற்பாட்டு சபைக்கு மூலைக்கல்லாகவும் எல்லாவற்றிற்கும் மேலான தலையாகவும் மகிமைப்படுத்தப்பட்டார் (எபே. 1 : 20 - 23).

யோவான் தன் சுவிசேஷத்தில், இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை என்று எழுதுகிறார் (யோவான் 7 : 39). கர்த்தராகிய இயேசு மகிமைபடுத்தப்பட்டு, எல்லா வானங்களுக்கு மேலாக சீயோனுக்கு உயர்த்தப்பட்டபின், பிதாவிடமிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியைப் பெற்று மேல்வீட்டில் காத்துக்கொண்டிருந்த அப்போஸ்தலர், விசுவாசிகள் அடங்கிய சுமார் 120 பேர் மீது பொழிந்தருளினார் (அப்.1: 13 - 15; 2 : 1 - 4, 33). இது பெந்தெகொஸ்தே நாளில், அதாவது கர்த்தராகிய இயேசு பரத்திற்கு ஏறிப்போய் பத்து நாட்களானபின்பு சம்பவித்தது. பெந்தெகொஸ்தெ என்னும் நாள் பழைய ஏற்பாட்டில் வாரங்களின் பண்டிகை (உபா.16:10), அறுப்புக்கால பண்டிகை (யாத். 23: 16), முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை (எண்.28:26) என்றுங்கூட அழைக்கப்படுகிறது. இப்பண்டிகையை ஆசரிக்கும்படி எல்லா இடங்களிலுமிருந்த யூதர்கள் எருசலேமில் கூடிவருவது வழக்கமாயிருந்தது. இந்த நாளில்தான் சபை உருவாக்கப்பட்டது.

பெந்தெகொஸ்தே நாளில் காத்துக்கொண்டிருந்த சீஷர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, அந்நிய பாஷைகளில் பேசினார்கள். பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்கும்படியாக ஏறக்குறைய பதினெட்டு தேசங்களிலிருந்து கூடி வந்திருந்த யூதர்கள் கலிலேயராகிய இவர்கள் தங்கள் ஜென்ம பாஷைகளிலே தேவனுடைய மகத்துவங்களைப் பேசுவதைக்கேட்டு ஆச்சரியமடைந்தனர். சிலர் அவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள் என்று பரியாசம் பண்ணினார்கள். அப்போது பேதுரு அவர்கள் மத்தியில் எழுந்து நின்று, "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம்

சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும் உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள் ” (யோவேல் 2 : 28) என்று கூறிய யோவேலின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இவை யாவும் சம்பவித்தன என உறுதிப்படுத்தினார். அவர் கர்த்தராகிய இயேசுவின் சிலுவையிலறையப்படுதல், உயிர்த்தெழுதல், மகிமைப்படுதல் ஆகியவற்றைக்குறித்து பேதுரு பிரசங்கித்தார் (அப். 2 : 7- 36).

அவருடைய வார்த்தைகளை கேட்டவர்கள் தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டவர்களாகி, பேதுருவினிடமும் மற்ற அப்போஸ்தலரிடமும், தாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டனர். அவர்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று புத்திச் சொன்னதுடன், மாறுபாடுள்ள சந்ததியைவிட்டு விலக வேண்டும் என்றும் பேதுரு கூறினார். வசனத்தை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்ட ஏறக்குறைய மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர் (அப். 2 : 37- 41). அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார் (அப்.2 : 42 - 47).

VII *போதனை:* *தேவன் மாம்சமான யாவர் மேலும் தம் ஆவியை ஊற்றிக் கொண்டிருக்கிறார். ஆகவே நாம் மனந்திரும்பி தண்ணீர் ஞானஸ்நானம் பெற்று, தேவ சமுகத்தில் காத்திருந்து பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, அப்போஸ்தலருடைய ஐக்கியத்தில் நிலைத்திருந்து, கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு வளருவோமாக.*

****

புதிய ஏற்பாட்டுச் சபையின் அடிப்படைக் கொள்கைகள்

I ***மனப்பாட வசனம் :*** (2 Marks)

எபிரெயர் 6 : 1, 2

ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம்,

ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து பாவோமாக.

II ***யார் யாரிடம் எப்போது கூறியது:*** (2 ½ Marks)

1. "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்" (யோவான் 3 : 3)

யார் : இயேசு

யாரிடம் : நிக்கொதேமுவிடம்

எப்போது : யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன், இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்று கூறியபோது இயேசு இவ்வாறு கூறினார்.

III ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி :*** (2 Mark)

1. பரிசுத்த ஆவியின் வரங்கள் எத்தனை?

ஒன்பது (I கொரி. 12 : 8 - 10).

2. தேவன் சபையில் எத்தனை விதமான ஊழியங்களை ஏற்படுத்தியிருக்கிறார்?

எட்டு (I கொரி. 12 : 28)

3. சபையில் காணப்படுகின்ற கிறிஸ்துவின் ஈவுகள் எத்தனை?

ஐந்து (எபே. 4 : 13)

4. புதிய ஏற்பாட்டுச் சபை அஸ்திபாரமாகக் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைக் கொள்கைகளை எவ்வாறு அழைக்கிறோம்?

'கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்' (எபி. 6 : 1, 2)

IV ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி :***

1. தேவன் பேரில் வைக்கும் விசுவாசம் என்றால் என்ன?

திரித்துவ தேவனிலும் அவருடைய நாமத்திலும் வைக்கும் விசுவாசமே தேவன் பேரில் வைக்கும் விசுவாசமாகும் (I யோவான் 5 : 7; ஏசாயா 48 : 16).

2. நீதிமான்களும் துன்மார்க்கரும் முறையே நித்தியத்தில் சுதந்திரித்துக் கொள்ளும் இடங்கள் யாவை?

நீதிமான்கள் புதிய பூமி, புதிய வானம், சீயோன் உட்பட புதிய எருசலேம் இவற்றைச் சுதந்தரிப்பார்கள் (வெளி. 21 : 1 - 4; 14 : 1).

துன்மார்க்கர் பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் வைக்கப்பட்டுள்ள அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள் (மத். 25 : 41; வெளி. 20 : 15)

3. புதிய ஏற்பாட்டு சபை எப்படிப்பட்ட ஊழியர்களால் கொடுக்கப்படுகிற உபதேசங்களைப் பின்பற்ற வேண்டும்?

பூரண பரிசுத்தமாகுதலுக்கும் ஜெய ஜீவியத்திற்கும் சபையை நடத்தக் கூடிய, முழுவதும் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியர்களால் கொடுக்கப்படுகிற உபதேசங்களைப் பின்பற்ற வேண்டும் (பாடத்திட்டம்).

4. சபையைப் பூரணத்திற்குக் கொண்டுச் செல்லும்படி தேவன் சபையில் ஏற்படுத்தியிருப்பவைகள் எவை ?

பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்களையும் (I கொரி. 12 : 8 - 10), கிறிஸ்துவின் ஈவுகள் என அழைக்கப்படும் ஐந்து உத்தியோகங்களையும் (எபே. 4 : 11 - 13), எட்டு ஊழியங்களையும் (I கொரி. 12 : 28) சபையில் ஏற்படுத்தியிருக்கிறார்.

V <u>*சுருக்கமான விடையளி :*</u> (4 Marks)

1. சபை பூரணத்திற்கு வழிநடத்தப்படும்படியாக அஸ்திபாரமாகக் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை உபதேசங்கள் எவை?

1) *செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல்*
2) *தேவன் பேரில் வைக்கும் விசுவாசம்*
3) *ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்*
4) *கைகளை வைக்குதல்*
5) *மரித்தோரின் உயிர்த்தெழுதல்*
6) *நித்திய நியாயத் தீர்ப்பு (எபி. 6 : 1. 2).*

2. புதிய ஏற்பாட்டு சபை அஸ்திபாரமாகக் கொண்டிருக்கவேண்டிய அடிப்படைக் கொள்கைகளை எவ்வாறு அழைக்கிறோம்? அவைகளில் ஒன்றாகிய கைகளை வைக்குதலின் மூலம் செய்யப்படும் ஊழியங்கள் யாவை?

a) கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள் (எபி. 6 : 1. 2).
b) கைகளை வைக்குதலின் மூலமாக செய்யப்படும் ஊழியங்கள்
  (i) பிள்ளைகளைப் பிரதிஷ்டை செய்வதற்காக (மத் . 19 : 13- 15)
  (ii) வியாதியஸ்தரை சுகமாக்கும்படியாக (மாற்கு 16 : 18; யாக். 5:14 - 16)
  (iii) புதிய ஏற்பாட்டு ஊழியத்தின் உபதேசத்தின்படி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஜனங்களின் மத்தியிலிருந்து ஊழியத்திற்கென்று ஆட்களை வேறு பிரிப்பதற்காக (அப். 13 : 2, 3).

3. புதிய ஏற்பாட்டு சபை எப்படிப்பட்ட ஊழியர்களால் கொடுக்கப்படுகிற உபதேசங்களைப் பின்பற்ற வேண்டும்? அவ்வூழியருடைய பிரதிஷ்டையை வசன ஆதாரங்களுடன் விவரி.

பூரண பரிசுத்தமாகுதலுக்கும் ஜெய ஜீவியத்திற்கும் சபையை நடத்தக்கூடிய, முழுவதும் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியர்களால் கொடுக்கப்படுகிற உபதேசங்களைப் பின்பற்றி பூரணத்திற்குக் கடந்து செல்லவேண்டும். இப்படிப்பட்ட தேவ ஊழியர்களுடைய பிரதிஷ்டையைக் குறித்து, கர்த்தராகிய இயேசு, ஒருவன் தனக்குண்டான எல்லாவற்றையும் விட்டு, மாம்ச சம்பந்தமான எல்லா உறவுகளையும் வெறுத்து விடாவிட்டால் தமக்கு சீஷனாயிருக்கமாட்டான் என்று கூறினார் (லூக்கா 14 : 26, 33). அன்றியும் அவர் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருக்கிறவன் ஒருவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப்பார்க்க வேண்டும்; இல்லையேல், அஸ்திபாரம் போட்டபின்பு அவன் அதைப் பூரணமாக கட்டி முடிக்கக்கூடாதவனாயிருப்பான் என்றும் கூறினார் (லூக். 14 : 28 - 30).

VI <u>*விரிவான விடையளி :*</u> (10 Marks)

1. புதிய ஏற்பாட்டுச் சபையின் அடிப்படைக் கொள்கைகளை விவரித்து எழுதுக.

புதிய ஏற்பாட்டுச் சபையின் அடிப்படைக் கொள்கைகள் எபிரெயர் 6 : 1, 2 - ல் கூறப்பட்டுள்ளன. அவையாவன:

1. <u>செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல் :</u>

சகல பாவக் கிரியைகளுக்காகவும் தேவனுக்கேற்ற துக்கத்துடன் கூடிய அறிக்கையோடு இரட்சிப்புக்கேதுவான உண்மையான மனந்திருப்புதல் (II கொரி. 7 : 10, 11; எபி. 9 : 14; யோவான் 3 : 3)

2. <u>தேவன் பேரில் வைக்கும் விசுவாசம் :</u>

திரித்துவ தேவனிலும் அவருடைய நாமத்திலும் விசுவாசம் வைத்தல் (I யோவான் 5: 7; ஏசாயா 48 : 16)

3. <u>ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்: (யோவான் 3 : 5; அப். 19 : 2 - 6)</u>

(a) தண்ணீர் ஞானஸ்நானம் - பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற தேவ ஊழியரால் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் கொடுக்கப்படும் முழுக்கு ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளுதல் (ரோமர் 6 : 2 - 7; மத். 28 : 19).

(b) பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் - அந்நியபாஷைகளில் பேசுவதாகிய வெளிப்படையான அடையாளத்துடன் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவது (அப். 2 : 2 - 4; 10 : 44 - 47; 11 : 15, 16). இதைக் குறித்து, "இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க .இளைப்பாறுதல் (ஏசாயா 28 : 11, 12) என எழுதப்பட்டுள்ளது. திரித்துவதேவன் மனிதனுக்குள் வாசம் செய்யும்படி வருகிறார் (யோவான் 14 : 16, 20, 23).

(c)

4. <u>கைகளை வைக்குதல் :</u>

(a) பிள்ளைகளைப் பிரதிஷ்டை செய்வதற்காக (மத். 19 : 13 - 15)

(b) வியாதியஸ்தரைச் சுகமாக்கும்படியாக (மாற்கு 16 : 18; யாக். 5 : 14 - 16)

(c) புதிய ஏற்பாட்டு ஊழியத்தின் உபதேசத்தின்படி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஜனங்களின் மத்தியிலிருந்து ஊழியத்திற்கென்று ஆட்களை வேறுபிரிப்பதற்காக (அப். 13 : 2, 3)

5. <u>மரித்தோரின் உயிர்த்தெழுதல்:</u> (1 கொரி. 15 : 20 - 23; வெளி. 20 : 4 - 6, 11, 12) :

6. <u>நித்திய நியாயத் தீர்ப்பு :</u>

நீதிமான்கள் புதிய பூமி, புதிய வானம், சீயோன் உட்பட புதிய எருசலேம் இவற்றைச் சுதந்தரிப்பார்கள் (வெளி. 21 : 1 - 4; 14 : 1). துன்மார்கர் பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் வைக்கப்பட்டுள்ள அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள் (மத். 25 : 41, வெளி.. 20 : 15).

2. சபையைப் பூரணத்திற்குக் கொண்டுச் செல்லும்படி, தேவன் சபையில் ஏற்படுத்தியிருக்கும் வரங்கள், ஈவுகள், ஊழியங்கள் எத்தனை? அவை யாவை? வசன ஆதாரம் தருக.

<u>வரங்கள் - ஒன்பது : (I கொரி. 12 : 8 - 10)</u>

(i) ஞானத்தைப் போதிக்கும் வசனம் (ii) அறிவை உணர்த்தும் வசனம்
(iii) விசுவாசம் (iv) குணமாக்கும் வரங்கள்
(v) அற்புதங்களைச் செய்யும் சக்தி (vi) தீர்க்கதரிசனம் உரைத்தல்
(vii) ஆவிகளைப் பகுத்தறிதல் (viii) பற்பல பாஷைகளைப் பேசுதல்
(ix) பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்

<u>ஈவுகள் - ஐந்து: (எபே. 4 : 11 - 13)</u>

(i) அப்போஸ்தலர் (ii) தீர்க்கதரிசிகள்
(iii) சுவிசேஷகர் (iv) மேய்ப்பர்
(v) போதகர்

<u>ஊழியங்கள் - எட்டு : (1 கொரி. 12 : 28)</u>

(i) அப்போஸ்தலர் (ii) தீர்க்கதரிசிகள்
(iii) போதகர்கள் (iv) அற்புதங்கள்
(v) குணமாக்கும் வரங்கள் (vi) ஊழியங்கள்
(vii) ஆளுகைகள் (viii) பலவித பாஷைகள்

VII <u>போதனை:</u> நாம் பலவித உபதேசங்களாகிய காற்றினால் அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்து, பூரணத்திற்குக் கடந்து செல்ல வேண்டும்.

****

கிரீடங்கள்

I *மனப்பாட வசனம் :* (2 Marks)

யாக்கோபு 1 : 12

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்

11தீமோத்தேயு 4: 7,8

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.

இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.

1 பேதுரு 5:4

அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.

II *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (2 Mark)

1. ஆவிக்குரிய உலகில் யார் கிரீடம் சூட்டப்படுவார்கள்?
   ஜெயங்கொண்டவர்கள் (பாடத்திட்டம்)

2. இராஜக்களுக்கு கிரீடங்கள் சூட்டப்படுவது எதைக் காண்பிக்கிறது?
   ஆளுகையையும் ஜெயத்தையும் காண்பிக்கிறது (பாடத்திட்டம்)

3. மனுஷன் தன் கிரீடத்தை எதன்நிமித்தம் இழந்தான்?
   பாவத்தின் நிமித்தமாக இழந்தான் (புல. 5 : 16) .

4. விழுந்துபோன மனிதன் எவ்விதம் மீண்டும் ஆளுகையைப் பெற்றுக் கொள்கிறான்?
   கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலம் ஜெயங்கொண்டவனாகி மறுபடியும் ஆளுகையைப் பெற்றுக்கொள்கிறான் (ரோமர் 5 : 17)

5. மரணபரியந்தம் உண்மையாயிருப்பவர்களுக்கு கொடுக்கப்படும் கிரீடம் எது?
   ஜீவ கிரீடம் (யாக். 1 : 12; வெளி. 2 : 10).

6. நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளப்போவதாக தைரியமாக கூறிய அப்போஸ்தலன் யார்?
   பரி. பவுல் (2 தீமோ. 4 : 8).

7. மகிமையின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் யார்?
   உண்மையுள்ள மேய்ப்பர் அல்லது தேவனுடைய ஊழியக்காரர் (1பேதுரு5:1 - 4).

8. இயேசு கிறிஸ்து இரண்டாந்தரம் யாருக்கு தரிசனமாகப் போகிறார்?
   பாவமில்லாமல் தமக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு.(எபி.9:28).

III *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*

1. அநேக கிரீடங்கள் சூட்டப்பட்டிருக்கிறவர் யார்? காரணம் என்ன?
   (a) *அநேக கிரீடங்கள் சூட்டப்பட்டிருப்பவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.*
   (b) *கர்த்தராகிய இயேசு, ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாயிருப்பதால், அவருடைய தலையின் மேல் அநேக கிரீடங்கள் இருக்கின்றன (வெளி.19 : 12, 16).*

2. பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கு எத்தனை கிரீடங்கள் வைக்கப்பட்டுள்ளன? அவை யாவை?

மூன்று கிரீடங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவையாவன:

(i) ஜீவகிரீடம் (யாக். 1 : 12; வெளி 2 : 10)

(ii) நீதியின் கிரீடம் (II தீமோ 4 : 7. 8)

(iii) மகிமையின் கிரீடம் (I பேதுரு 5 : 1 - 4)

3. ஜீவகிரீடம் யாருக்குரியது?

ஜீவகரீடம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினிமித்தமாகவும், அவருடைய வசனத்தினிமித்தமாகவும் சோதனைகளைச் சகித்து தங்கள் பிராணனையும் அருமையாக எண்ணாமல் ஒப்புக் கொடுத்தவர்களுக்குரியது (யாக். 1 : 12; வெளி.2: 10).

4. நீதியின் கிரீடம் யாருக்காக வைக்கப்பட்டுள்ளது?

நீதியின் கிரீடம் இயேசுவின் பிரசன்னமாகுதலுக்காக (இரகசிய வருகை) ஆவலோடு வாஞ்சித்து தங்கள் ஓட்டத்தை ஜெயத்தோடு ஓடி முடித்தவர்களுக்காக வைக்கப்பட்டுள்ளது (2 தீமோ. 4 : 7, 8)

5. தேவனுடைய ஊழியக்காரர் தேவனுடைய மந்தையை எப்படிக் கண்காணிப்பு செய்ய வேண்டும்?

(a) கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும்,

(b) அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்,

(c) சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்ய வேண்டும் (I பேதுரு 5 : 1 - 4).

6. நாம் எவ்வாறு நம் கிரீடங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்?

பரலோகத்தில் நமக்காக வைக்கப்பட்டிருக்கிற சுதந்திரத்தின் நம்பிக்கையை நமக்கு முன்பாக வைத்து, நாம் நம் ஓட்டத்தை ஜெயத்துடன் ஓடி, நம் கிரீடங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் (போதனை).

IV *சுருக்கமான விடையளி :* (4 Marks)

1. ஜீவ கிரீடம் குறிப்பு வரைக (வசன ஆதாரங்களுடன்)

இது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினிமித்தமாகவும், அவருடைய வசனத்தின் நிமித்தமாகவும் சோதனைகளைச் சகித்து, தங்கள் பிராணனையும் அருமையாக எண்ணாமல், தங்களை ஒப்புக்கொடுத்தவர்களுக்குரியது. அவர்கள் உபத்திரவப்படுத்தப்படும்போது இயேசுவின் மேலுள்ள அன்பில் சிறிதேனும் குறைவுபடாமல் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்கின்றனர் (யாக். 1 : 12, வெளி. 2 : 10)

2. நீதியின் கீரிடத்தைப் பற்றி வசன ஆதாரங்களுடன் எழுதுக.

இக்கிரீடம் இயேசுவின் பிரசன்னமாகுதலுக்காக(இரகசிய வருகை) ஆவலோடு வாஞ்சித்து, தங்கள் ஓட்டத்தை ஜெயத்தோடு ஓடி முடித்தவர்களுக்காக வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஆவி ஆத்துமா சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டு இயேசு வரும்போது எடுத்துக்கொள்ளப்படுகிறவர்கள் (1 தெச. 5 : 23). தமக்காக பாவமில்லாமல் ஆவலோடு காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பை அடையும்படி கர்த்தராகிய இயேசு இரண்டாந்தரம் தரிசனமாவார் (எபி. 9 : 28). பரி. பவுலுக்கு இவ்வனுபவமும் நம்பிக்கையும் இருந்தன. எனவே, தான் நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்வதாக அவர் தைரியத்துடன் கூறுகிறார் (II தீமோ. 4 : 7, 8).

3. மகிமையின் கிரீடம் குறிப்பு வரைக (வசன ஆதாரங்களுடன்)

இக்கிரீடத்தை உண்மையுள்ள மேய்ப்பர் (தேவனுடைய ஊழியக்காரர்) பெற்றுக்கொள்கின்றனர், பிரதான மேய்ப்பராகிய இயேசு தம் மணவாட்டியாகிய சபையை சேர்த்துக்கொள்ளும்படி இரண்டாம் முறை பிரசன்னமாகும்போது இப்பிரதிபலன் அளிக்கப்படுகிறது. அவர்கள் தங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை,

(a) கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும்,

(b) அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்,

(c) சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்கிறவர்களாவர் (I பேதுரு 5 : 1 - 4).

V *விரிவான விடையளி :* (10 Marks)

1. பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கு வைக்கப்பட்டுள்ள மூன்று கிரீடங்களைக் குறித்து விவரித்து எழுதுக.

1. ஜீவ கிரீடம் :

இது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினிமித்தமாகவும், அவருடைய வசனத்தின் நிமித்தமாகவும் சோதனைகளைச் சகித்து, தங்கள் பிராணனையும் அருமையாக எண்ணாமல், தங்களை ஒப்புக்கொடுத்தவர்களுக்குரியது. அவர்கள் உபத்திரவப்படுத்தப்படும்போது இயேசுவின் மேலுள்ள அன்பில் சிறிதேனும் குறைவுபடாமல் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்கின்றனர் (யாக். 1 : 12, வெளி. 2 : 10)

2. நீதியின் கிரீடம் :

இக்கிரீடம் இயேசுவின் பிரசன்னமாகுதலுக்காக(இரகசிய வருகை) ஆவலோடு வாஞ்சித்து, தங்கள் ஓட்டத்தை ஜெயத்தோடு ஓடி முடித்தவர்களுக்காக வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஆவி ஆத்துமா சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டு இயேசு வரும்போது எடுத்துக்கொள்ளப்படுகிறவர்கள் (1 தெச. 5 : 23). தமக்காக பாவமில்லாமல் ஆவலோடு காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பை அடையும்படி இயேசு இரண்டாந்தரம் தரிசனமாவார் (எபி. 9 : 28). பரி. பவுலுக்கு இவ்வனுபவமும் நம்பிக்கையும் இருந்தன. எனவே, தான் நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்வதாக அவர் தைரியத்துடன் கூறுகிறார்
(II தீமோ. 4 : 7, 8).

3. மகிமையின் கிரீடம் :

இக்கிரீடத்தை உண்மையுள்ள மேய்ப்பர் (தேவனுடைய ஊழியக்காரர்) பெற்றுக்கொள்கின்றனர், பிரதான மேய்ப்பராகிய இயேசு தம் மணவாட்டியாகிய சபையை சேர்த்துக்கொள்ளும்படி இரண்டாம் முறை பிரசன்னமாகும்போது இப்பிரதிபலன் அளிக்கப்படுகிறது. அவர்கள் தங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை,

(a) *கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும்,*

(b) *அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்,*

(c) *சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்கிறவர்களாவர் (I பேதுரு 5 : 1 – 4).*

2. கிரீடங்களைப் பற்றி நீ அறிந்து கொண்ட சத்தியங்களை விவரித்து எழுது.

இராஜாக்கள் கிரீடங்கள் சூடுகிறார்கள். இது ஆளுகையையும் ஜெயத்தையும் காண்பிக்கிறது. ஆவிக்குரிய உலகிலுங்கூட ஜெயங்கொண்டவர்களே கிரீடம் சூட்டப்படுவர். மனிதன் பாவத்தில் விழுவதற்குமுன்பு அவனுக்குள் ஆளுகை இருந்தது (ஆதி.1:26; சங்.8:5-8). பாவத்தின் நிமித்தமாக அவன் தலையின் மேலிருந்த கிரீடம் விழுந்தது (புல.5:16). விழுந்துபோன மனிதன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் ஜெயங்கொண்டவனாகி மறுபடியும் ஆளுகையை பெற்றுக்கொள்ளக் கூடும் (ரோமர்5 : 17).

இயேசு, ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாயிருப்பதால், அவருடைய தலையின் மேல் அநேக கிரீடங்கள் இருக்கின்றன (வெளி. 19 : 12, 16).

ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களுக்கு வைக்கப்பட்டுள்ள மூன்று கிரீடங்களைக் குறித்து வேதவாக்கியங்கள் கூறுகின்றன.

1. ஜீவ கிரீடம் :

இது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினிமித்தமாகவும், அவருடைய வசனத்தின் நிமித்தமாகவும் சோதனைகளைச் சகித்து, தங்கள் பிராணனையும் அருமையாக எண்ணாமல், தங்களை ஒப்புக்கொடுத்தவர்களுக்குரியது. அவர்கள் உபத்திரவப்படுத்தப்படும்போது இயேசுவின் மேலுள்ள அன்பில் சிறிதேனும் குறைவுபடாமல் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்கின்றனர் (யாக். 1 : 12, வெளி. 2 : 10)

2. நீதியின் கிரீடம் :

இக்கிரீடம் இயேசுவின் பிரசன்னமாகுதலுக்காக(இரகசிய வருகை) ஆவலோடு வாஞ்சித்து, தங்கள் ஓட்டத்தை ஜெயத்தோடு ஓடி முடித்தவர்களுக்காக வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஆவி ஆத்துமா சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டு இயேசு வரும்போது எடுத்துக்கொள்ளப்படுகிறவர்கள் (1 தெச. 5 : 23). தமக்காக பாவமில்லாமல் ஆவலோடு காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பை அடையும்படி இயேசு இரண்டாந்தரம் தரிசனமாவார் (எபி. 9 : 28). பரி. பவுலுக்கு இவ்வனுபவமும் நம்பிக்கையும் இருந்தன. எனவே, தான் நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்வதாக அவர் தைரியத்துடன் கூறுகிறார்
(II தீமோ. 4 : 7, 8).

3. மகிமையின் கிரீடம் :

இக்கிரீடத்தை உண்மையுள்ள மேய்ப்பர் (தேவனுடைய ஊழியக்காரர்) பெற்றுக்கொள்கின்றனர், பிரதான மேய்ப்பராகிய இயேசு தம் மணவாட்டியாகிய சபையை சேர்த்துக்கொள்ளும்படி இரண்டாம் முறை பிரசன்னமாகும்போது இப்பிரதிபலன் அளிக்கப்படுகிறது. அவர்கள் தங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை,

(a) கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும்,

(b) அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்,

(c) சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்கிறவர்களாவர் (I பேதுரு 5 : 1 - 4).

பரலோகத்தில் நமக்காக வைக்கப்பட்டிருக்கிற சுதந்தரத்தின் நம்பிக்கையை நமக்கு முன்பாக வைத்து, நாம் நம் ஓட்டத்தை ஜெயத்துடன் ஓடி, நம் கிரீடங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

VI போதனை:

பரலோகத்தில் நமக்காக வைக்கப்பட்டிருக்கிற சுதந்தரத்தின் நம்பிக்கையை நமக்கு முன்பாக வைத்து, நாம் நம் ஓட்டத்தை ஜெயத்துடன் ஓடி, நம் கிரீடங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

****

வகுப்பு : 8

பாடம்-20

பரிசுத்த வேதாகமத்தின் புத்தகங்கள்

I *மனப்பாட வசனம் :* (2 Marks)

11 தீமோத்தேயு 3 : 16, 17

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,

அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

யோபு 23 : 12

அவர் உதடுகளின் கற்பனைகளைவிட்டு நான் பின்வாங்குவதில்லை, அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன்.

II *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (2 Mark)

1. இன்று உலகில் மிகப் பரவலாக வாசிக்கப்படும் புத்தகம் எது?
   பரிசுத்த வேதாகமம் (பாடத்திட்டம்)

2. வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் எத்தனை புத்தகங்கள் உள்ளன?
   39 (பாடத்திட்டம்)

3. புதிய ஏற்பாட்டில் எத்தனை புத்தகங்கள் உள்ளன?
   27 (பாடத்திட்டம்)

4. வேதாகமத்தில் மொத்தம்" எத்தனை புத்தகங்கள் உள்ளன?
   66

5. வேதாகமத்தை எழுதியதற்குப் சுமார் எத்தனை பேர் பொறுப்புள்ளவர்களாயிருந்தனர்?
   40 பேர்

6. வேதாகமம் எவ்வளவு நீண்ட காலவரையறையில் எழுதப்பட்டது?
   சுமார் 1600 வருடகாலவரையறை

7. நியாயப்பிரமாண புத்தகங்கள் எங்கே வைத்து எழுதப்பட்டது?
   வனாந்தரத்தில்

IV *ஓரிரு வாக்கிய□களில் விடையளி:*

1. பரிசுத்த வேதாகமம் காலத்தை வென்ற புத்தகம் என்று எவ்வாறு கூறலாம்?
   பரிசுத்த வேதாகமம் உலகிலேயே மிகப் பழமைவாய்ந்த ஒரு புத்தகம். அது இன்று உலகில் மிகப்பரவலாக வாசிக்கப்படும் ஒரு புத்தகம். அதிகமான எதிர்ப்புகளின் மத்தியிலும், அதை அழிக்கும்படியான சத்துருக்களின் பல முயற்சிகளின் மத்தியிலும் அது அழிக்கப்பட்டாது தொடர்ந்து நீடித்திருக்கிறது. முழு உலகத்திலும் மிகவிரைவான மதிப்பு பெற்ற ஒரு புத்தகம். (பாடத்திட்டம்)

2. பரிசுத்த வேதாகமம் எங்கே வைத்து எழுதப்பட்டது?
   வேதாகமம் பல்வேறு இடங்களிலிருந்து எழுதப்பட்டவையாகும். ஊதாரணமாக நியாயப்பிரமான புத்தகங்கள் வனாந்தரத்திலும், அப்.பவுலின் நிருபங்களில் சில சிறைசாலையிலும் வைத்து எழுதப்பட்டன.

3. வேதாகமம் எந்த மொழியில் எழுதப்பட்டது?

பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் எபிரெயமொழியிலும் அவற்றின் ஒரு பகுதி அராமிய மொழியிலும் முதலில் எழுதப்பட்டன. புதிய ஏற்பாடு முழுவதும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது.

4. புதிய ஏற்பாட்டின் நிருபங்களில் அதிகமானவற்றை எழுதியது யார்? யாருக்காக எழுதப்பட்டது?

1.அப். பவுல்.

2.அவற்றில் சில சபைகளுக்கும் (ரோமாபுரியார், கொரிந்தியர், கலாத்தியர் முதலியவை) வேறு சில தனி நபர்களுக்கும் (தீமோத்தேயு, தீத்து, பிலேமோன்) எழுதப்பட்டவையாகும்.

5. வேதாகமத்தில் எழுதப்பட்ட வார்த்தைகள் எப்படிப்பட்டதாய் இருக்கிறது?

வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த்தையும் தேவ ஆவியினால் அருளப்பட்டதாயும், முக்கியம் வாய்ந்ததாயும், எல்லாக்காலங்களுக்கும் பொருந்தக்கூடியதாயும் இருக்கிறது. பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் புதிய ஏற்பாட்டின் புத்தகங்களைப் போலவே ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் முக்கியமானவையாயிருக்கின்றன.

6. பரிசுத்த வேதாகமம் அநேக பரிசுத்தவான்களின் இரத்தத்தினால் எழுதப்பட்டதும் பாதுகாக்கப்பட்டதுமான புத்தகம் என்று எவ்வாறு கூறலாம்?

வேதாகமத்தின் புத்தகங்களை எழுதியவர்களில் அநேகர் இரத்தசாட்சிகளாகக் கொல்லப்பட்டனர். வேதாகமத்தை மொழி பெயர்த்த அநேகர் தங்கள் கிரியைகளினிமித்தம் கொல்லப்பட்டனர். இன்று நம் கரங்களில் இருப்பது, ஆநேக பரிசுத்தவான்களின் இரத்தத்தினால் எழுதப்பட்டதும் பாதுகாக்கப்பட்டதுமான இந்த விலையேறப்பெற்ற புத்தகமாகும். ஆகவே இவ்வாறு கூறப்படுகிறது.

7. வேதாகமத்தை நாம் ஏன் கதைப்புத்தகம் போல வாசிக்கக்கூடாது?

வேதாகமத்தை நாம் ஒரு கதைப்புத்தகம் போல வாசிக்கக்கூடாது வேதாகமம் தேவனிடத்திலிருந்து மனுஷனுக்கு எழுதப்பட்ட ஒரு கடிதமாகும். வேதாகமத்தின் ஒவ்வொரு வசனத்திலும் மறைக்கப்பட்ட தூதுகள் உள்ளன. அவற்றைக் கண்டறிந்து கொள்ளும்படி நாம் அவற்றை கவனத்துடனும் ஜெபத்துடனும் வாசிக்கவேண்டும்.

8. பரிசுத்த வேதாகமத்தில் “நியாயப்பிரமாண புத்தகங்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ள புத்தகங்கள் யாவை?

1. *ஆதியாகமம்*
2. *யாத்திராகமம்*
3. *லேவியராகமம்*
4. *எண்ணாகமம்*
5. *உபாகமம்*

9. ஞானத்தின் புத்தகங்கள் யாவை?

யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதபாட்டு

V <u>*சுருக்கமான விடையளி* :</u> (4 Marks)

1. வேதாகமத்தில் எத்தனை புத்தகங்கள் உள்ளன? அவற்றை எழுதியவர்கள் யார்? எப்போது, எங்கு வைத்து எழுதப்பட்டது?

வேதாகமம் பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்கள் கொண்டதாக, 66 புத்தகங்கள் உடையதாய் இருக்கிறது. இப்புத்தகங்களில் சிலவற்றை ஆக்கியோர் யார் என்பது பற்றி சில சந்தோகங்கள் எழுப்பியிருப்பினும் சுமார் 40 பேர் இப்புத்தகங்களை அல்லது அவற்றின் பகுதிகளை எழுதியதற்குப் பொறுப்புள்ளவர்களாயிருக்கின்றனர். இப்புத்தகங்கள் வாழ்க்கையின் பல்வேறு நிலைவரங்களிலிருந்தவர்களால் எழுதப்பட்டவையாகும்-பேதுரு மீன் பிடிக்கிறவராயிருந்தார். சாலொமோன் ஒரு ராஜாவாயிருந்தான். தாவீது ஒரு மேய்ப்பனாயிருக்கையில் தன்னுடைய சங்கீதங்களில் அநேகமானவற்றை எழுதினான். லூக்கா ஒரு வைத்தியனாயிருந்தார். இப்புத்தகங்கள் நீண்ட காலவரையறையில் (சுமார் 1600 வருட காலவரையறை) எழுதப்பட்டன. இவை பல்வேறு இடங்களிலிருந்து எழுதப்பட்டவையாகும். உதாரணமாக நியாயப்பிரமாண புத்தகங்கள் வனாந்தரத்திலும், அப்.பவுலின் நிருபங்களிலும் சில சிறைச் சாலைகளிலும் வைத்து எழுதப்பட்டன.

2. வேதாகமமானது தேவனால் எழுதப்பட்டது என்று ஏன் கூறப்படுகிறது?

வேறு பல புத்தகங்களும் இக்காலங்களில் எழுதப்பட்டன, அவற்றில் சில வேதாகமத்திலிருக்கும் புத்தகங்களுக்கு ஒத்தவையாயிருந்தன. ஆனால் தேவன் வருடப்போக்கில் இந்த 66 புத்தகங்களையும் ஒரு சிறந்த புத்தகமாக உருப்பெறும்படியாக அற்புதமாக இணைத்தார். இப்புத்தகங்கள் ஒன்று சேர்க்கப்பட்ட விதம், இப்புத்தகங்களிலுள்ள தூதுகளின் ஒற்றுமை, அவை ஒன்றுக்கொன்று முரன்பாடுகளற்றவையாயிருப்பது, இப்புத்தகங்களில் மறைந்துள்ள அறிவும், ஞானமும் - இவை யாவும் வேதாகமமானது முடிவாக ஒரு எழுத்தாளரால் - தேவனால் - எழுதப்பட்டது என்பதைக் காண்பிக்கிறது.

3. வேதாகமம் எதன் அடிப்படையில் பகுப்பட்டுள்ளது? அவற்றை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

வேதாகமத்திலுள்ள புத்தகங்கள் அவைகள் எழுதப்பட்ட காலத்தின் அடிப்படையிலோ, அவற்றிலுள்ள சம்பவங்களின் அடிப்படையிலோ வேதாகமத்தில் அந்தந்த இடங்களில் இடம் பெறவில்லை. அவற்றுள் அடங்கியுள்ள பொருளின்படியே அவை பகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. நியாயப்பிரமாண புத்தகங்கள் (இவை பென்ட்டாட்டக் (Pentateuch) எனவும் அழைக்கப்படுகின்றன.	-	*ஆதியாகமம் முதல் உபாகமம் வரை*
2. சரித்திர புத்தகங்கள்	-	*யோசுவா முதல் எஸ்தர் வரை அப்போஸ்தலருடைய நடபடிகள்*
3. ஞானத்தின் புத்தகங்கள்	-	*யோபு முதல் உன்னதபாட்டு வரை*
4. தீர்க்கதரிசன புத்தகங்கள்	-	*ஏசாயா முதல் மல்கியா வரை, வெளிப்படுத்தின விசேஷம்*
5. சுவிசேஷங்கள்	-	*மத்தேயு முதல் யோவான் வரை*
6. நிருபங்கள்	-	*ரோமர் முதல் யூதா முடிய*

4. புதிய ஏற்பாடு - பற்றி சிறு குறிப்பு வரைக.

புதிய ஏற்பாட்டில் - கர்த்தராகிய இயேசுவின் ஜீவியத்தைக்குறித்து தனிநபர்கள் அளிக்கும் அறிக்கைகளாகிய சுவிசேஷங்களும், சபைகளும் தனிநபர்களுக்கும் எழுதப்பட்ட கடிதங்களாகிய நிருபங்களும், அப்போஸ்தலருடைய ஊழியத்தைப் பற்றிய சரித்திரப்பூர்வமான தொடர் உரையாகிய அப்போஸ்தலருடைய நடபடிகளும் தீர்க்கதரிசன புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷமும் நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. நிருபங்களில் பலவும் அப்.பவுலால் எழுதப்பட்டவையாகும். அவற்றில் சில, சபைகளுக்கும் (ரோமாபுரியார், கொரிந்தியர், கலாத்தியர் முதலியவை), வேறு சில, தனிநபர்களுக்கும் (தீமோத்தேயு, தீத்து, பிலமோன்) எழுதப்பட்டவையாகும்.

VI <u>*விரிவான விடையளி*</u> : (10 Marks)

1. பரிசுத்த வேதாகமத்தின் புத்தகங்கள் - என்ற தலைப்பின்கீழ் நீ கற்றவற்றை கட்டுரை வடிவில் எழுது.

வேதாகமம் பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்கள் கொண்டதாக, 66 புத்தகங்கள் உடையதாய் இருக்கிறது. இப்புத்தகங்களில் சிலவற்றை ஆக்கியோர் யார் என்பது பற்றி சில சந்தோகங்கள் எழுப்பியிருப்பினும் சுமார் 40 பேர் இப்புத்தகங்களை அல்லது அவற்றின் பகுதிகளை எழுதியதற்குப் பொறுப்புள்ளவர்களாயிருக்கின்றனர். இப்புத்தகங்கள் பல்வேறு நிலைவரங்களிலிருந்த வர்களால் எழுதப்பட்டவையாகும் - பேதுரு மீன் பிடிக்கிறவராயிருந்தார். சாலொமோன் ஒரு ராஜாவாயிருந்தான். தாவீது ஒரு மேய்ப்பனாயிருக்கையில் தன்னுடைய சங்கீதங்களில் அநேகமானவற்றை எழுதினான். லூக்கா ஒரு வைத்தியனாயிருந்தார். இப்புத்தகங்கள் நீண்ட காலவரையறையில் (சுமார் 1600 வருட காலவரையறை) எழுதப்பட்டன. இவை பல்வேறு இடங்களிலிருந்து எழுதப்பட்டவையாகும். உதாரணமாக நியாயப்பிரமாண புத்தகங்கள் வனாந்தரத்திலும், அப்.பவுலின் நிருபங்களிலும் சில சிறைச் சாலைகளிலும் வைத்து எழுதப்பட்டன.

பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் எபிரெய மொழியிலும், அவற்றின் ஒரு பகுதி அராமிய மொழியிலும் முதலில் ((originally) எழுதப்பட்டன. புதியஏற்பாடு முழுவதும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது.

வேறு பல புத்தகங்களும் இக்காலங்களில் எழுதப்பட்டன, அவற்றில் சில வேதாகமத்திலிருக்கு புத்தகங்களுக்கு ஒத்தவையாயிருந்தன. ஆனால் தேவன் வருடப்போக்கில் இந்த 66 புத்தகங்களையும் ஒரு சிறந்த புத்தகமாக உருப்பெறும்படியாக அற்புதமாக இணைத்தார். இப்புத்தகங்கள் ஒன்று சேர்க்கப்பட்ட விதம், இப்புத்தகங்களிலுள்ள தூதுகளின் ஒற்றுமை, அவை ஒன்றுக்கொன்று முரன்பாடுகளற்றவையாயிருப்பது, இப்புத்தகங்களில் மறைந்துள்ள ஞானமும் - இவை யாவும் வேதாகமமானது முடிவாக ஒரு எழுத்தாளரால் - தேவனால் - எழுதப்பட்டது என்பதைக் காண்பிக்கிறது.

வேதாகமத்திலுள்ள புத்தகங்கள் அவைள் எழுதப்பட்ட காலத்தின் அடிப்படையிலோ, அவற்றிலுள்ள சம்பவங்களின் அடிப்படையிலோ வேதாகமத்தில் அந்தந்த இடங்களில் இடம் பெறவில்லை. அவற்றுள் அடங்கியுள்ள பொருளின்படியே அவை பகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. நியாயப்பிரமாண புத்தகங்கள் (இவை பென்ட்டாட்டக் (Pentateuch) எனவும் அழைக்கப்படுகின்றன.	-	ஆதியாகமம் முதல் உபாகமம் வரை
2. சரித்திர புத்தகங்கள்	-	யோசுவா முதல் எஸ்தர் வரை அப்போஸ்தலருடைய நடபடிகள்
3. ஞானத்தின் புத்தகங்கள்	-	யோபு முதல் உன்னதபாட்டு வரை
4. தீர்க்கதரிசன புத்தகங்கள்	-	ஏசாயா முதல் மல்கியா வரை, வெளிப்படுத்தின விசேஷம்
5. சுவிசேஷங்கள்	-	மத்தேயு முதல் யோவான் வரை
6. நிருபங்கள்	-	ரோமர் முதல் யூதா முடிய

புதிய ஏற்பாட்டில் - கர்த்தராகிய இயேசுவின் ஜீவியத்தைக்குறித்து தனிநபர்கள் அளிக்கும் அறிக்கைகளாகிய சுவிசேஷங்களும், சபைகளும் தனிநபர்களுக்கும் எழுதப்பட்ட கடிதங்களாகிய நிருபங்களும், அப்போஸ்தலருடைய ஊழியத்தைப் பற்றிய சரித்திரப்பூர்ணமாக தொடர் உரையாகிய அப்போஸ்தலருடைய நடபடிகளம் தீர்க்கதரிசன புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷமும் நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. நிருபங்களில் பலவும் அப்.பவுலால் எழுதப்பட்டவையாகும். அவற்றில் சில, சபைகளுக்கும் (ரோமாபுரியார், கொரிந்தியர், கலாத்தியர் முதலியவை), வேறு சில, தனிநபர்களுக்கும் (தீமோத்தேயு, தீத்து, பிலமோன்) எழுதப்பட்டவையாகும்.

VII <u>போதனை:</u>

வேதாகமத்தை ஒரு கதைப்புத்தகம் போல நாம் வாசிக்கக் கூடாது. வேதாகமம் தேவனிடத்திலிருந்து மனுஷனுக்கு எழுதப் பட்ட ஒரு கடிதமாகும். வேதாகமத்தின் ஒவ்வொரு வசனத்திலும் மறைக்கப்பட்ட தூதுகள் உள்ளன. அவற்றைக் கண்டறிந்து கொள்ளும்படி நாம் அவற்றைக் கவனத்துடனும் ஜெபத்துடனும் வாசிக்க வேண்டும்.

****

Lesson 1

The Attributes of Nehemiah

Nehemiah a Cup Bearer before King Artaxerxes

Nehemiah – Prayer warrior



He did not shift his work to others

He was burdened about his people

He did not abandon his work for the fear of enemy

Lesson 2

The Reformations of Nehemiah

Household Stuff of Tobiah cast out

Renewed Offerings of first fruits

Nehemiah finishes building the wall

Lesson 3

Vashti & Esther

Feast of Ahasuerus

Esther taken to the King

King Rejects Vasti



Esther is crowned

Lesson 4

Modecai & Haman

Conspiracy of Bigthan and Teresh revealed

Modecai did not bow before Haman



Modecai Crying and great mourning

Esther Bodly went to the King

Book of records of the chronicles was read

Mordecai being Honoured

Esther’s Second banquet and her petition



Haman was hanged



Feast of Purim

Lesson 5

Daniel and His Companion

Babylonian names to daniel and his companions

Daniel's challenge to the Prince of the Eunuchs

Lesson 6

Hananiah,Mishael and Azariah in the fiery furnace

The King's Enquiry and the statue

King's Fury

Four Men loose and walking

Lesson 7

Daniel in the Den of Lions

Daniel Praying as Usual

Daniel in Lion's Den

King visit to Daniel's Den early morning

Lesson 8

Jonah in the Belly of the Fish

Mighty Tempest in the sea

Jonah was cast into the sea

Jonah swallowed up by a great fish and was in the belly of the fish for 3 days.

The People believed God, fasted and put on sackcloth



Jonah and the Gourd

Lesson 9

St.Paul's Second missionary Journey